இரண்டாம் பதிப்பு

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

விலை - 20
பக்கங்கள் - 32

சுடர் 32 | கதிர் 137 | வள்ளுவர் ஆண்டு 2048 | பங்குனி 30 புதன்கிழமை 12.04.2017

## சேமலாப நிதியை சூறையாடுவதற்கு கூட்டு அரசு திட்டம்

ஜே.வி.பி. குற்றச்சாட்டு

கொழும்பு, ஏப்.12
தொழிலாளர்கள் கஷ்டப்பட்டு உழைத்த பணத்தை மூலாதாரமாகக் கொண்ட, இலாபத்தின் பிரதிபலனை அரசு மக்களுக்கு வழங்க வேண்டும். ஆனால் இவ்வாறு இங்கு நடைபெறுவதில்லை. மாறாகக் கூட்டு அரசு தொழி >> 28




இந்தியத் தலைநகர் புதுடெல்லியில் போராடிவரும் தமிழக விவசாயிகளுக்கு ஆதரவாக முகப்புத்தகத்தில் வெளியான இந்தப் பதிவு பலரினதும் மனங்களையும் கனதியடையச் செய்துள்ளது.

(தொடர்புடைய செய்தி பக்கம் – 14)

## புத்தாண்டு தினத்தன்று அணி திரள்வோம் வாரீர்!

காணாமற்போனோருக்காக வவுனியாவில் போராடி வரும் உறவினர்கள் அழைப்பு



கிளிநொச்சி, ஏப்.12
காணாமற்போனோரின் உறவுகள் வவுனியாவில் நடத்தும் தொடர் போராட்டம் எதிர்வரும் >> 28

## சொந்த இடத்தில் மக்களை குடியேற்றப் பல தடைகள்

வடக்கு முதலமைச்சரிடம் கூறினார் யாழ். படைத் தளபதி

யாழ்ப்பாணம், ஏப். 12
இடம்பெயர்ந்து முகாம்களில் உள்ள மக்களைச் சொந்த இடத்தில் குடியமர்த்தவே இராணுவமும் விரும்புகின்றது. ஆனால் அதற்குப் பல விடயங்கள் தடையாக உள்ளன என்று யாழ்ப்பாண மாவட்டக் கட்டளைத் தளபதி தர்சன கெட்டியா >> 28

# சிறுபான்மையின மக்களைத் தெருவில் நிறுத்திவிட்டது மைத்திரி அரசு

கேப்பாபிலவில் அமைச்சர் ரிசாத் கடும் சீற்றம்



முல்லைத்தீவு, ஏப்ரல் 12
“நல்லாட்சியைக் கொண்டுவர உழைத்த சிறுபான்மை மக்களை இன்று நடுத்தெருவில் நின்று போராட்டம் நடத்துவதற்கு இந்த அரசு தள்ளியுள்ளது. >> 04

## சித்திரைப் புத்தாண்டு எங்களுக்குக் கரிநாள்

கேப்பாபிலவு மக்கள் அறிவிப்பு

முல்லைத்தீவு, ஏப். 12
சித்திரைப் புத்தாண்டைக் கரிநாளாகக் கடைப்பிடிக்கக் கேப்பாபிலவு மக்கள் தீர்மானித்துள்ளனர். மக்கள் பிரதிநிதிகள் அனைவரும் அன்றைய தினம் அமைதிவழிப் போராட்டம் நடைபெறும் >> 28

## கிளிநொச்சியில் நேற்று கடும் காற்றுடன் மழை

கிளிநொச்சி, ஏப். 12
கிளிநொச்சியில் நேற்று மாலை கடும் காற்றுடன் கூடிய மழை பெய்தது. 10 க்கும் மேற்பட்ட வீடுகளின் கூரைகள் தூக்கி வீசப்பட்டன. திடீர் மழையால் பிரதேச மக்கள் கடும் நெருக்கடிகளை எதிர் >> 28

## பாம்பு தீண்டி சிறுவன் சாவு

பாலி நகர்க் கிராமமே சோகத்தில்

முல்லைத்தீவு, ஏப். 12
முல்லைத்தீவு, பாலிநகர்க் கிராமத்தில் பாம்புக் கடிக்கு இலக்காகி 10 வயதுச் சிறுவன் உயிரிழந்தார்.
சாலையில் துவிச்சக்கர வண்டியில் பயணித்த சிறுவன், சாலையின் குறுக்கே சென்ற பாம்பின் மீது ஏற்றி அவர் சறுக்கி வீழ்ந்துள்ளார். >> 28

## நிறைவேற்றதிகாரம் தொடர்வது நல்லதே

இப்படிக் கூறுகிறார் ராஜித

கொழும்பு, ஏப்.12
நிறைவேற்று அதிகார அரச தலைவர் முறைமை நாட்டில் தொடர்ந்தும் இருப்பது நல்லது போன்றே தோன்று >> 28

## திருமலையில் இருவர் காயச்சலால் உயிரிழப்பு

திருமலை, ஏப்.12
இன்புளுவென்ஸா காய்ச்சல் மற்றும் டெங்குக் காய்ச்சல் காரணமாக திருகோணமலையில் நேற்று இருவர் உயிரிழந்துள்ளனர்.
காய்ச்சல் காரணமாகத் திருகோணமலை பொது வைத்தியசாலையில் >> 28

## நாட்டைப் பிரிக்காது தமிழருக்கு அதிகாரம்

கூறுகின்றது ஐ.தே.க.

கொழும்பு, ஏப்.12
நாட்டைப் பிரிக்காமல் தமிழர்களுக்கு நிச்சயம் அதிகாரப் பகிர்வு வழங்கப்படும் என்று ஐக்கிய தேசியக் கட்சி >> 28

## பன்னாட்டு நீதிபதிகள் இங்கு வருவது உறுதி

படையினரும் தண்டிக்கப்படுவர் என்கிறார் உதய கம்மன்பில

கொழும்பு, ஏப்.12
பன்னாட்டு நீதிபதிகள் இலங்கைக்குள் நுழைவது பெரும்பாலும் உறுதியாகிவிட்டது. படையினர் தண்டிக் >> 28

## குடும்பத்தலைவர் காய்ச்சலால் இறப்பு

யாழ்ப்பாணம், ஏப். 12
5 நாள்கள் காய்ச்சலால் பீடிக்கப்பட்ட குடும்பத் தலைவர் சிகிச்சை பயனின்றி நேற்று உயிரிழந்தார்.
அளவெட்டியைச் சேர்ந்த 4 பிள்ளைகளின் தந்தையான செல்லத்துரை >> 26

## கூட்டமைப்பை மோடி மே 12 இல் சந்திப்பார்

வெசாக் கொண்டாட்டத்துக்காக கொழும்பு வரும் வேளையில்

யாழ்ப்பாணம், ஏப். 12
பன்னாட்டு வெசாக் நிகழ்வுகளில் பங்கேற்பதற்கு அடுத்த மாதம் இலங்கை வரவுள்ள, இந்தியாவின் தலைமை அமைச்சர் நரேந்திர மோடிக்கும், >> 28

## வாகனம் தடம்புரண்டதில் இளம்பெண் பரிதாபச் சாவு

விபத்தில் இறந்தவரின் சடங்கில் பங்கேற்கச் சென்றபோது துயரம்



கிளிநொச்சி, ஏப். 12
கிளிநொச்சியில் வாகனம் தடம்புரண்டதில் படுகாயமடைந்த இளம் பெண் சிகிச்சை >> 28







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதுவருட விற்பனை 40 வீதத்தால் வீழ்ச்சி

### இறக்குமதியாளர் சங்கம் தெரிவிப்பு

கொழும்பு, ஏப்.12
கடந்த வருடத்துடன் ஒப்பிடுகையில் புதுவருட வியாபாரம், 40 சதவீதத்தால் வீழ்ச்சி கண்டுள்ளதாக அத்தியாவசியப் பொருள்களின் இறக்குமதியாளர் சங்கப் பேச்சாளர் ஹேமக்க பெர்னாண்டோ தெரிவித்தார்.
மக்களின் கொள்வனவுச் சக்தி குறைந்தமையே இதற்குக் காரணமெனவும் அவர் கூறினார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
உணவுப் பொருள்கள் மற்றும் ஆடைகள் என்பவற்றில், புதுவருட வியாபாரத்தின் வீழ்ச்சி தெரிகின்றது. அத்துடன், உருளைக்கிழங்கு மற்றும் பெரிய வெங்காயம் ஆகியவற்றின் விற்பனையில் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளதைக் காணக்கூடியதாக உள்ளது.
பாதகமான வானிலை காரணமாக, தொடர்ந்து இரண்டு வருடங்கள் விவசாயம் பாதிக்கப்பட்டு, மக்களின் கொள்வனவுச் சக்தி குறைவடைந்துள்ளது.
பன்னாட்டுச் சந்தையில் சீனியின் விலை குறைந்த போதிலும், அமெரிக்க டொலருக்கு எதிராக ரூபாயின் மதிப்பு வீழ்ச்சி கண்டுள்ளதால், சில்லறை மற்றும் மொத்த விலைகளை இங்கு குறைக்க முடியவில்லை.
பன்னாட்டுச் சந்தையில் சீனியின் விலை, தொன் ஒன்று 600 டொலராக இருந்து 480 டொலராகக் குறைந்தது.
சில வருடங்களுக்கு முன்னர், பன்னாட்டுச் சந்தையில் சீனியின் விலை 600 டொலராக இருந்தபோது, இங்கு ஒரு கிலோகிராம் சீனியை 99 ரூபாவுக்கு விற்றோம்.
ஆனால், இப்போது பன்னாட்டுச் சந்தையில் விலை குறைந்துள்ள போதும் அதே விலைக்கே விற்க வேண்டியுள்ளது. இந்த விவரங்களை சங்க அறிக்கைகளைப் பார்த்து உறுதி செய்யலாம் - என்றார். (த)

# அண்ணனுக்கு கத்திக் குத்து குருநகரில் தம்பி கைது

யாழ்ப்பாணம் ஏப்ரல் 12
குடும்பப் பிணக்குக் காரணமாக மூத்த சகோதரனைக் கத்தியால் குத்தி படுகாயத்துக்குள்ளாக்கிய இளைய சகோதரனைக் கைது செய்துள்ளதாக யாழ். பொலிஸார் தெரிவித்தனர்.
இந்தச் சம்பவம் யாழ்.குருநகர் கடற்கரை வீதியில் நேற்றுமுன்தினம் இரவு 9 மணியளவில் இடம்பெற்றுள்ளது.
குடும்பப் பிணக்குக் காரணமாகச் சகோதரர்களிடையே நேற்று முன்தினம் இரவு தகராறு ஏற்பட்டது. இதனைத்தொடர்ந்து இளைய சகோதரன் தனது மூத்த சகோதரனைக் கத்தியால் குத்தியுள்ளார். இதில் அவர் படுகாயமடைந்து யாழ்ப்பாண போதனா வைத்தியசாலை அவசர சிகிச்சை பிரிவில் சேர்க்கப்பட்டார் என்று பொலிஸார் கூறினர்.
இது தொடர்பில் இளைய சகோதரனான மகிபாலன் வருண் (வயது-32)என்பவர் யாழ்ப்பாணப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டார்.
(த-ரி1)

# வாழ்வாதார உதவிகளை வழங்காமல் சென்ற ரிசாத்

### காத்திருந்த மக்கள் ஏமாற்றம்



முல்லைத்தீவு, ஏப். 12
ஒட்டுசுட்டான் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட 32 பயனாளிகளுக்கு வாழ்வாதாரப் பொருள்களைக் கையளிக்கும் நிகழ்வு நேற்று அமைச்சர் வருகை தராமையால் இடைநிறுத்தப்பட்டது.
நேற்று மு.ப. 10 மணிக்குப் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் இந்த நிகழ்வு நடைபெறுவதாக இருந்தது.
எனினும் கைத்தொழில், வர்த்தக அமைச்சர் அமைச்சர் ரிசாத் பதியுதீன் வருகை தராமையால் நிகழ்வு நிறுத்தப்பட்டது. இதனால் பெரும் அசௌகரியங்களுக்கு உள்ளாக நேர்ந்ததாக நிகழ்வில் கலந்துகொள்ள வந்திருந்த மக்கள் தெரிவித்தனர்.
அவர்கள் மேலும் தெரிவித்ததாவது:
சிறு கைத்தொழில், கைத்தொழில், சுய தொழில் முயற்சிகளை மேம்படுத்துவதற்காக கைத்தொழில் அபிவிருத்தி அதிகார சபையின் 10 இலட்சம் ரூபா நிதி ஒதுக்கீட்டில் கடந்த டிசெம்பர் மாதம் இயந்திரங்கள், தளபாடங்கள் மற்றும் இதர பொருள்கள் என்பன கொள்வனவு செய்யப்பட்டன.
இந்த உபகரணங்களைக் கைத்தொழில் வர்த்தகத் துறை அமைச்சர் ரிசாத் பதியுதீன் வழங்குவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டு பயனாளிகளும் வரவழைக்கப்பட்டனர்.
பிரதேச செயலக நுழைவாயிலில் நிறைகுடம் வைக்கப்பட்டு மண்டபத்தில் நாங்கள் காத்திருந்தவேளை முற்பகல் 11.30 மணியளவில் நிகழ்வு இடை நிறுத்தப்பட்டதாக அறிவிக்கப்பட்டது.
பலவேலைகளையும் விட்டுவிட்டு அங்கு வந்திருந்த நாங்கள் இதனால் பெரும் ஏமாற்றமடைந்தோம். நாம் வீடு திரும்புவதற்காகப் பிரதேச செயலகத்தைவிட்டு வெளியே வந்தபோது அமைச்சரின் வாகனத் தொடரணி பிரதேச செயலகத்தைக் கடந்து முல்லைத்தீவு நோக்கிப் பயணித்தது.
இந்தப் பாதையால் செல்லும் அமைச்சர் இங்கு 5 நிமிடமாவது தரித்து நின்று ஒருவருக்கேனும் உதவியை வழங்கிச் சென்றிருக்கலாம்.
பொருள்கள் கொள்வனவு செய்து ஐந்து மாதங்கள் கடந்துவிட்டன இன்னும் எத்தனை மாதங்கள் எடுக்குமோ தெரியவில்லை. இவற்றை விரைவில் எம்மிடம் ஒப்படைக்க மாவட்டச் செயலர் உரிய வழிகள் செய்யவேண்டும்என்றனர்.
"அவசர வேலை காரணமாக அமைச்சர் திடீரென இந்த நிகழ்வை இடை நிறுத்தினார். எதிர்வரும் 25ஆம் திகதிக்கு முன்னதாக பயனாளிகளுக்கு இந்தப் பொருள்கள் வழங்கப்படும்" என்று ஒட்டுசுட்டான் பிரதேச செயலர் தெரிவித்தார். (த-10)

# ஜோன்ஸ்டனின் பதவி பறிபோனது

### இந்திக்கவை நியமித்தார் மைத்திரி

கொழும்பு, ஏப். 12
சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் நிக்கவரெட்டியத் தொகுதியின் அமைப்பாளராக இருந்த மகிந்த அணியின் ஆதரவு நாடாளுமன்ற உறுப்பினர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோவை நீக்கிக் குறித்த பதவிக்கு பிரதி அமைச்சர் இந்திக்க பண்டாரநாயக்கவை சுதந்திரக் கட்சியின் தலைவரும் அரச தலைவருமான மைத்திரிபால சிறிசேன நியமித்துள்ளார்.
முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்சவின் ஆதரவு நாடாளுமன்ற உறுப்பினர்களில் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ முக்கியமானவர். இவர் மீது கடுமையான ஊழல் குற்றச்சாட்டுகளும் கூட்டு அரசால் சுமத்தப்பட்டுள்ளதுடன், பல தடவைகள் பெரிய ஊழல் மோசடிகளை விசாரணை செய்யும் அரச தலைவர் ஆணைக்குழுவுக்கும் அழைக்கப்பட்டுள்ளார்.
இவர் நேற்றுவரை சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் கோட்டைகளின் ஒன்றான நிக்கவரெட்டியத் தொகுதியின் அமைப்பாளராகப் பதவி வகித்து வந்தார். அரச தலை



வர் மைத்திரிபால சிறிசேனவின் அதிரடி நடவடிக்கையில் நேற்று முதல் அந்தப் பதவியில் இருந்து அவர் நீக்கப்பட்டுள்ளதாகவும் குறித்த தொகுதிக்குப் பிரதி அமைச்சர் இந்திக்க பண்டாரநாயக்க நியமிக்கப்பட்டுள்ளதாகவும் சுதந்திரக் கட்சியின் உயர்பீடம் அறிவித்துள்ளது.
மே தினம், உள்ளூராட்சித் தேர்தல், மாகாண சபைத் தேர்தல் என்று பரபரப்பான சூழலில் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோவின் பதவி பறிப்பானது முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்சவுக்கு விடுத்துள்ள எச்சரிக்கையாகவே அரசியல் வட்டாரங்களில் பேசப்படுகிறது. (த-5)

# மருத்துவர் பற்றாக்குறை ஒரு தேசியப் பிரச்சினை

### அம்பாறையில் கூறினார் எஸ்.பி.

கொழும்பு, ஏப். 12
மருத்துவர் மற்றும் தாதிய உத்தியோகத்தர்கள் பற்றாக்குறை நாட்டின் தேசிய பிரச்சினையாகக் காணப்படுகின்றது என சமூக வலுவூட்டல் மற்றும் நலன்புரி அமைச்சர் எஸ்.பி.திஸாநாயக்க தெரிவித்தார். முன்னாள் அமைச்சர் ஏ.எல்.எம்.அதாவுல்லாவின் அழைப்பின் பேரில் அம்பாறைக்கு நேற்றுச் சென்ற அமைச்சர், இறக்காமம் பிரதேசத்தில் உணவு விசமானதால் பாதிக்கப்பட்டவர்களை இறக்காமம் பிரதேச வைத்தியாலைக்குச் சென்று பார்வையிட்டார்.
இதன்போது, இறக்காமம் பிரதேச வைத்தியசாலையில் காணப்படும் பௌதீகவளப் பற்றாக்குறை அமைச்சரின் கவனத்துக்குக் கொண்டு செல்லப்பட்டது. இதன்போது கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
நாட்டில் ஏற்பட்டுள்ள இந்தப் பிரச்சினையைத் தீர்த்து வைக்கும் வகையில் தனியார் மருத்துவக் கல்லூரி மற்றும் தனியார் தாதியர் கல்லூரிகளை நிறுவுவதற்கு அரசு நடவடிக்கை எடுத்துள்ளது. இதற்கு எதிர்ப்புத் தெரிவித்து அரசுக்கு எதிராகப் பல்வேறு போராட்டங்களை மருத்துவர்கள்நடத்திவருகின்றனர்.
இதனால் பாதிக்கப்படுவது அப்பாவிப் பொதுமக்கள் என்பதை அவர்கள் அறிந்துகொள்ள வேண்டும்.
எந்தவொரு விடயத்தையும் அரசு புதிதாகக் கொண்டு வரவில்லை. நாட்டினதும் மக்களினதும் நலனைக் கருத்திற் கொண்டே அரசு செயற்பட்டு வருகின்றது. மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் மாத்திரம் நூற்றுக்கணக்கான தாதிய உத்தியோகத்தர்கள் மற்றும் மருத்துவர்கள் பற்றாக்குறை காணப்படுகின்றது - என்றார். (த)



# பதில் தலைமை நீதியரசராக அபுறூ நேற்றுப் பதவியேற்பு

கொழும்பு, ஏப். 12
பதில் தலைமை நீதியரசராக உயர் நீதிமன்ற நீதியரசர் சிசிர ஜே டி அபுறூ நேற்று பதவியேற்றார். அரச தலைவர் மைத்திரி பால சிறசேன முன்னிலையில் அவர் நேற்று உறுதியுரை எடுத்தார்.
மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் பதில் தலைவராக மேன்முறையீட்டு நீதிமன்ற நீதியரசர் ஏ.எச்.எம் நவாஸும் நேற்று பதவியேற்றார்.
அரச தலைவரின் இல்லத்தில் இந்தப் பதவியேற்பு நிகழ்வு இடம்பெற்றது. அரச தலைவரின் பதில் செயலாளர் சுஜித் அபயசிங்கவும் நிகழ்வில் கலந்துகொண்டார்.
தலைமை நீதியரசர் பிரியசாத் டெப் விடுப்பில் சென்றுள்ள நிலையிலேயே பதில் தலைமை நீதியரசர் நியமிக்கப்பட்டுள்ளார். (வ)

# மாணவருக்கு இவ்வருடம் புதிய காப்புறுதி திட்டம்

கொழும்பு, ஏப் .12
மாணவர்களுக்காகப் புதிதாக அறிமுகப்படுத்தப்பட்ட காப்புறுதித் திட்டம், இந்த வருடத்திலிருந்து நடைமுறைப்படுத்தப்படுமென்று, கல்வியமைச்சர் அகில விராஜ் காரியவசம் தெரிவித்தார்.
இதற்குத் தகுதியான காப்புறுதி நிறுவனமொன்றைத் தெரிவு செய்வதற்காகக் கேள்வி மனு கோரப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் கூறினார்.
ஒரு மாணவருக்கு இரண்டு இலட்சம் ரூபா காப்புறுதி வழங்கப்படும். இதன் கீழ், 43 இலட்சம் மாணவர்களுக்குக் காப்புறுதிச் சலுகை கிடைக்கும். இதற்காக மாணவர்களிடம் இருந்து எந்தவித கட்டணமும் அறவிடப்படமாட்டாது என்று அமைச்சர் குறிப்பிட்டார். (த)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொலிஸ் உடையில் வந்த குழுவினரால் ஒருவர் கடத்தல்

## அனுராதபுரத்தில் சம்பவம்

கொழும்பு, ஏப் 12
அநுராதபுரம் மாவட்டத்திலுள்ள பிரபல அரசியல்வாதியொருவரின் முன்னாள் மெய்ப்பாதுகாவலர்களில் ஒருவரான அஜந்த புஷ்பகுமார பியகம எனும் இரு பிள்ளைகளின் தந்தை (வயது38) நேற்றுமுன்தினம் பொலிஸ் சீருடையில் வந்த இனந்தெரியாத குழுவொன்றால் வெள்ளை வானொன்றில் கடத்திச் செல்லப்பட்டுள்ளார்.
அநுராதபுர மாவட்டத்தில் பல நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு இவர் பிரத்தியேக மெய்ப்பாதுகாவலராகப் பணிபுரிந்துள்ளார் எனவும், அத்துடன் ஒரு சில நிதி நிறுவனங்களுக்கு வாகனச் சுவீகரிப்பாளராகவும் (சீஸர்) செயற்பட்டுவந்தார் எனவும் தெரியவருகின்றது.
அரசியல்வாதிகளுடன் நெருங்கிய தொடர்பைக்கொண்டிருந்த இவர் சமீபகாலமாக அந்தத் தொடர்புகளைத் துண்டித்துவிட்டார் எனவும், இவருக்கு எதிராக நாட்டின் பல பொலிஸ் நிலையங்களில் முறைப்பாடுகள் இருப்பதாகவும் தெரியவருகின்றது.
இபலோகம, புஞ்சிகுளம் பிரதேசத்திலுள்ள இவரது வீட்டுக்கு வெள்ளை வானில் வந்தவர்கள் இவரைக் கடத்திச்சென்றபோது வீட்டில் பொருத்தப்பட்டிருந்த கண்காணிப்புக் கமராவையும் பறித்தெடுத்துச் சென்றுள்ளதாகவும், இவரைப் பற்றிய தகவல்கள் எதுவும் இதுவரை வெளியாகவில்லை எனவும் இபலோகம பொலிஸார் தெரிவித்தனர். (த)

# யாழ். ஆயர் இல்லத்தில் 80 ஆயிரம் ரூபா திருட்டு

யாழ்ப்பாணம் ஏப்.12
யாழ். ஆயர் இல்லத்தில் நேற்று முன்தினம் 80 ஆயிரம் ரூபா பணம் திருடப்பட்டுள்ளதாக யாழ். பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.
யாழ்ப்பாண ஆயர் இல்லத்தின் பின் பக்க ஜன்னல் உடைக்கப்பட்டிருந்தமை நேற்று அவதானிக்கப்பட்டது. இதனையடுத்து ஆராய்ந்தபோது 80 ஆயிரம் ரூபா பணம் திருடப்பட்டிருந்தமை தெரியவந்துள்ளது.
குறித்த ஜன்னலின் அருகே குருதித் துளிகள் காணப்பட்டதாகவும், குறித்த ஜன்னல் ஊடாகத் திருடன் திருடல் ஈடுபட்டிருந்தவேளை கம்பி குத்திக் காயம் ஏற்பட்டிருக்கலாம் எனவும் பொலிஸார் கூறினர். இந்தச் சம்பவம் குறித்து மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுவருவதாக அவர்கள் குறிப்பிட்டனர். (த-ரி1)

# புகையிலைத் தூளுடன் 30,000 குப்பிகள் சிக்கின

## 2,000 கிலோ பீடி இலைகளும் மீட்பு

கொழும்பு, ஏப். 12
சட்டத்துக்குப் புறம்பான முறையில் நாட்டுக்குக் கொண்டு வரப்பட்ட புகையிலைத் தூள் அடங்கிய 30 ஆயிரம் குப்பிகள் மற்றும் 2 ஆயிரம் கிலோகிராம் பீடி இலைகள் சுங்கத் திணைக்களத்தால் கைப்பற்றப்பட்டதாக அதன் ஊடகப் பேச்சாளர் தர்மசேன கஹந்தவ கூறினார்.
பேலியகொடைச் சுங்கப் பிரிவில் நேற்று மேற்கொள்ளப்பட்ட தேடுதலில் இவை கைப்பற்றப்பட்டன. கைப்பற்றப்பட்ட இவற்றின் பெறுமதி சுமார் 80 இலட்சம் ரூபா என்று தெரிவிக்கப்பட்டது.
இந்தியாவின் சென்னைத் துறைமுகத்திலிருந்து இலங்கைக்குக் கொண்டு வரப்பட்ட 61 பயணப் பெட்டிகளைச் சோதனை செய்தபோது இந்தப் பொருள்கள் கண்டெடுக்கப்பட்டன. துணி இருப்பதாகக் கூறியே இவை இலங்கைக்கு எடுத்து வரப்பட்டன.
புகையிலைத் தூள் இலங்கைக்குக் கொண்டு வருவது தடை செய்யப்பட்டுள்ளது. பீடி இலைகளுக்காகப் பெருந்தொகை தீர்வை வரி அறிவிடப்படுவதால் இவை மிகவும் சூட்சுமமான முறையில் மறைத்து இலங்கைக்குக் கொண்டு வரப்பட்டன.
இவை புறக்கோட்டை வர்த்தகர் ஒருவரால் கொண்டு வரப்பட்டுள்ளமை தெரிய வந்துள்ளது.
விசாரணைகளின் பின்னர் இவற்றை அரசுடமையாக்க நடவடிக்கை எடுப்பதாக ஊடகப் பேச்சாளர் குறிப்பிட்டார். (த-5)

# மைத்திரியின் ஆடைக்குள் மறைந்திருந்து சிலர் அட்டூழியம்

## முல்லைத்தீவில் அசாத் சாலி விசனம்

முல்லைத்தீவு, ஏப். 12
அரச தலைவரின் ஆடைக்குள் ஒழிந்திருக்கும் சிலரால் செய்யப்படும் அட்டூழியத்தால் தமிழ், முஸ்லிம் மக்கள் பல நெருக்கடிகளைச் சந்திக்கின்றனர். இது அரச தலைவருக்குக் கூடத் தெரியாது என தேசிய ஐக்கிய முன்னணியின் தலைவர் அசாத் சாலி தெரிவித்தார்.
நேற்று முல்லைத்தீவுக்குச் சென்ற தேசிய ஐக்கிய முன்னணியின் தலைவர் அசாத் சாலி, அங்கு முஸ்லிம் மக்கள் எதிர்கொண்டுள்ள கொத்தியா கும்பம் காணிப் பிரச்சினை தொடர்பாக மக்களுடன் கலந்துரையாடினார். இதன்போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.
அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:
காணிகளைப் பெற்றுக்கொள்வதற்காகத் தற்போது முஸ்லிம் மக்கள் மன்னார் மாவட்டத்தில் போராட்டத்தை முன்னெடுத்து வருகின்றனர். அவர்களுக்குக் குடிப்பதற்குத் தண்ணீர் இல்லை. ஆனால் அவர்களது காணியில் முகாம் அமைத்துள்ள இராணுவம் அங்குள்ள கிணற்றில் இருந்து தமது தேவைக்காக நீரை பவுசர்களில் கொண்டு செல்கிறது. இந்தக் கொடுமை எங்காவது நடந்ததுண்டா?.



எம்மால் கொண்டு வரப்பட்ட இந்த அரசும் இவ்வாறு செய்வதையிட்டு வெட்கப்படுகின்றோம். அரச தலைவரின் ஆடைக்குள் ஒழிந்திருக்கும் சிலரால் செய்யப்படும் இந்தச் செயலால் தமிழ், முஸ்லிம் மக்கள் பல நெருக்கடிகளைச் சந்திக்கின்றனர். இவை மைத்திரிக்குக் கூடத் தெரியாது.
யாருக்கும் ஆதரவு தெரிவித்து நான் இங்கு வரவில்லை. எங்கு தமிழ், முஸ்லிம் மக்களுக்குப் பிரச்சினைகள் காணப்படுகின்றதோ அதற்கு எதிராகக் குரல் கொடுத்துத் தீர்வைப் பெற்றுக்கொடுப்பது எமது கடமை. அதற்காகவே இங்கு வந்தேன்என்றார். (த-7)

# சைட்டத்துக்கு எதிராக மருத்துவ மாணவர்கள் பரண்களில் புதுவருடம்

கொழும்பு, ஏப் 12
மாலபே தனியார் மருத்துவக் கல்லூரி (சைட்டம்) விவகாரத்தில் தங்களது எதிர்ப்பைத் தெரிவிப்பதற்காக நாட்டின் ஆறு பல்கலைக்கழக மருத்துவ பீட மாணவர்கள் அவர்களது பல்கலைக்கழகங்களின் முன்னால் அமைத்திருக்கும் போராட்டப் பரண்கள் மீதிருந்தவாறே தங்களது புதுவருடத்தைக் கொண்டாடவுள்ளதாக மருத்துவ பீட மாணவர்கள் ஒன்றியத்தின் ஏற்பாட்டாளர் ரஸத் ஜயலத் தெரிவித்தார்.
இலங்கையில் கல்வியைத் தனியார் மயப்படுத்துவதற்கு எதிராகக் கடந்த வருடம் ஆரம்பிக்கப்பட்ட சத்தியாக்கிரகப் போராட்டத்துக்கு இப்போது 446 நாள்கள் பூர்த்தியாகியிருப்பதாகவும், கடந்த வருடத்தைப் போலவே இந்த வருடமும் தங்களது புதுவருடக் கொண்டாட்டங்களைப் போராட்டப் பரண்களிலேயே நடத்தவுள்ளதாகவும், தங்களது இந்த வித்தியாசமான கொண்டாட்டத்துக்குப் பெற்றோர்கள், விரிவுரையாளர்கள், மருத்துவர்கள் உட்படப் பல்வேறு தரப்பினரும் தமது பூரண ஆதரவைத் தெரிவித்திருப்பதாகவும் ரஸத் ஜயலத் தெரிவித்தார். (த)

# புதுவருட சுபநேரச் சுவடி மைத்திரியிடம் கையளிப்பு



கொழும்பு, ஏப். 12
தமிழ் - சிங்களப் புதுவருடத்துக்கான சுபநேரங்கள் அடங்கிய சுவடி, சம்பிரதாயபூர்வமாக அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவிடம் நேற்றுக் கையளிக்கப்பட்டது.
கலாசார அலுவல்கள் அமைச்சர் எஸ்.பி. நாவின்ன மற்றும் அமைச்சின் செயலார் டி.சுவர்ணபால ஆகியோரால் சுபநேரங்கள் அடங்கிய சுவடி அரச தலைவரிடம் ஒப்படைக்கப்பட்டது.
வருடப்பிறப்பில் சுபகாரியங்கள் ஆரம்பிக்கப்பட வேண்டிய நேரங்கள் உள்ளிட்ட பல விடயங்கள் இந்த சுவடியில் உள்ளடக்கப்பட்டுள்ளன. (த-5)

# கட்டுநாயக்கவுக்கு 7.6 மில்லியன் நட்டம்

கொழும்பு, ஏப் 12
கட்டுநாயக்க பன்னாட்டு வானூர்தி நிலையம் மூடப்பட்ட ஆறு மாத காலப்பகுதியில், 7.6 மில்லியன் ரூபா நட்டம் ஏற்பட்டுள்ளதாக, மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்தார். ஜே.வி.பி தலைமையகத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே, அவர் மேற்கண்டவாறு கூறினார்.
அவர் மேலும் கூறியதாவது:
திரட்டிக்கொண்ட கறுப்புப் பணத்தை, ஏதாவதொரு இலாபம் தரக் கூடிய வியாபாரத்தில் முதலிடுவது போலவே இந்த கட்டுநாயக்கா வானூர்தி நிலையமும் சீரமைக்கப்பட்டுள்ளது.
கட்டுநாயக்கா வானூர்தி நிலையம் சீரமைக்கப்படுவதற்காக மூடப்பட்டபோது, குறித்த காலப்பகுதியில் வரப்போகும் நட்டத்தை எவ்வாறு மீட்டெடுப்பது என்று தான் யோசிக்க வேண்டும். எனினும், சீரமைக்கப்பட்ட பின்னர் முன்னர் இருந்த வசதிகள் குறைந்துள்ளன.
சில விமானங்களை, கட்டுநாயக்கா வானூர்தி நிலையத்தில் நிறுத்திவைக்க முடியாத நிலைமையும் சீரமைப்பின் பின்பும் இலாபம் ஈட்ட முடியாத நிலைமையுமே தற்போது தோன்றியுள்ளனஎன்றார். (த)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மே இறுதிவரை அகோர வெயில்

## பண்டிகைக்கால விளையாட்டுக்களின்போது அவதானம் தேவையென அறிவுரை

கொழும்பு, ஏப் 12
தற்போது நிலவி வரும் அதிக வெப்பத்துடன் கூடிய காலநிலை மே மாத இறுதிவரை தொடரலாம் என வானிலை அவதான நிலையம் தெரிவித்தது.
இலங்கையைக் கடந்து செல்லும் காற்றின் அளவு குறைவடைந்திருப்பதாலேயே இந்த மிதமிஞ்சிய வெப்பநிலை தோன்றியிருப்பதாகவும், இதனைக் கருத்திற்கொண்டு பகல் வேளைகளில் பண்டிகைக்கால விளையாட்டுகளைத் தவிர்த்துக்கொள்வது நல்லது எனவும், வானிலை அவதான நிலையத்தின் பிரதிப் பணிப்பாளர் திருமதி அனுஷா வர்ணசூரிய தெரிவித்தார். விளையாட்டுப் போட்டிகளில் கலந்துகொள்பவர்கள் போதுமான அளவு நீரை உட்கொள்வது அவசியமென அரச விளையாட்டு நிறுவனத்தின் மருத்துவர் ஏக்கநாயக்க கூறினார். (த)

# புத்தாண்டு சந்தை காவலூரில் நாளை

யாழ்ப்பாணம், ஏப்.12
ஊர்காவற்றுறை பிரதேச செயலக வளாகத்தில் சித்திரைப் புத்தாண்டு விற்பனைச் சந்தை இன்று புதன்கிழமை மு.ப.10 மணிக்கு வடக்கு மாகாண தொழிற்றுறைத் திணைக்கள மாகாணப் பணிப்பாளரால் ஆரம்பித்து வைக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டது.

மாவட்ட தொழிற் திணைக்களத்தின் அனுசரணையுடன் நடத்தப்படும் விற்பனைச் சந்தையில் தீவகம் வடக்குப் பிரதேச மகளிர் குழுக்களால் தொழிற் பயிற்சிகளின் போது உற்பத்தி செய்யப்பட்ட உற்பத்திப் பொருள்கள் விற்பனைக்கு வைக்கப்படவுள்ளன.

தீவகம் வடக்கு பிரதேச செயலர் திருமதி எ.அன்ரன் யோகநாயகம் தலைமையில் நடைபெறும் நிகழ்வுக்கு தலைமை விருந்தினராக மாகாணத் தொழில் திணைக்களப் பணிப்பாளர் திருமதி உஷா சுபலிங்கம் கலந்து கொள்கிறார். நிகழ்வுக்கு சிறப்பு விருந்தினர்களாக யாழ்.மாவட்ட தொழிற்றுறைத் திணைக்கள மாவட்ட அலுவலர் திருமதி பொலின் பெனராஜ், ஊர்காவற்றுறை மக்கள் வங்கிக் கிளை முகாமையாளர் செ.சரத்சந்தர், இலங்கை வங்கிக் கிளை முகாமையாளர் ரெ.எட்வேட் ஆகியோரும் கௌரவ விருந்தினராக அனலைதீவு கமக்கார அமைப்பின் தலைவர் கு.குமாரதேவனும் கலந்து கொள்வர் என்று தெரிவிக்கப்பட்டது. (வ-9)

# மதுப் பாவனை நாட்டில் வீழ்ச்சி

## மைத்திரி மகிழ்ச்சி

கொழும்பு, ஏப். 12
நாட்டின் எதிர்கால சந்ததியினரை மதுப் பயன்பாட்டிலிருந்து விடுவிப்பதற்கு அரசு ஆரம்பித்த "போதையிலிருந்து விடுபட்ட ஒரு நாடு" எனும் வேலைத்திட்டம் வெற்றிகரமான பிரதிபலனைத் தந்துள்ளதாக அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

மதுபானம் மற்றும் புகையிலை என்பவற்றிலிருந்து வரும் வருமானம் வீழ்ச்சியடைந்துள்ளமையை மட்டும் அடிப்படையாகக் கொண்டே அரச தலைவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

கண்டி தெல்தெனியவில் மாவட்ட வைத்தியசாலையின் புதிய கட்டடத் தொகுதியைத் திறந்து வைக்கும் நிகழ்வில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையில் அவர் மேற்கண்டவாறு கூறினார்.

"இலங்கை வரலாற்றில் முதற்றடவையாக மதுபானம், புகையிலை என்பவற்றுக்கான வருமானம் குறைந்துள்ளது. இது மிகவும் சிறந்த ஒரு அடையாளம். இதற்கு முன்னர் இந்த வருமானம் அதிகரிப்பதுதான் இடம்பெற்றது. அரசுக்குக் கிடைக்கும் வருமானம் குறைந்துள்ளது என்பதன் அர்த்தம், மதுபானம், புகையிலை என்பவற்றின் பாவனை குறைந் துள்ளது என்பதனையே காட்டும்" என்று அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன மேலும் தெரிவித்தார். (வ-4)



வவுனியாவில் நேற்று மாலை 4 மணியளவில், இடியுடன் கூடிய மழை பெய்தது. இதனால் சிறிது நேரம் மின்சாரம் தடைப்பட்டது. புத்தாண்டுக்குப் பொருள்கள் கொள்வனவுக்காக நகர்ப் பகுதிக்குச் சென்ற மக்கள், மழை காரணமாக கடைகளில் நீண்ட நேரமாக நின்றதைக் காணக்கூடியதாகவிருந்தது. (ஐ)

# வேலித் தூண்களை அகற்றிய குற்றச்சாட்டில் முதியவர் கைது

யாழ்ப்பாணம், ஏப். 12
"தெல்லிப்பழையில் தனியார் காணியில் வேலியாக நட்ட 75 கொங்கிறீற் தூண்களையும் பிடுங்கி எறிந்தார் என்ற குற்றச்சாட்டில் அதே இடத்தைச் சேர்ந்த முதியவர் ஒருவர் கைது செய்யப்பட்டார். மல்லாகம் நீதிவான் மன்றின் உத்தரவில் அவர் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்" என்று பொலிஸார் தெரிவித்தனர்.

"தெல்லிப்பழை, டச்சு வீதி வீமன்காமம் பகுதியில் கடந்த 4 ஆம் திகதி தனியார் காணியைச் சுற்றி 75 கொங்கிறீற் தூண்கள் நடப்பட்டன. அன்றிரவே 75 தூண்களும் பிடுங்கி வீசப்பட்டன. அது தொடர்பில் குறித்த காணி உரிமையாளர் பொலிஸில் முறைப்பாடு செய்தார். அந்தக் காணிக்கு அருகில் உள்ள 65 வயதுடையவர் மீது அவர் சந்தேகம் தெரிவித்தார்.

விசாரணையை முன்னெடுத்த காங்கேசன்துறைப் பொலிஸார் முதியவரை நேற்றுக் கைது செய்து மல்லாகம் நீதிவான் மன்றில் முற்படுத்தினர். அவரை எதிர்வரும் 28ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்று உத்தரவிட்டது" என்று பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (வ-4-26)

## சிறைச்சாலை பஸ் மீது சூடு:

# விசாரணை அறிக்கை தயார்

களுத்துறை சிறைச்சாலைப் பேருந்து மீது மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் தொடர்பான விசாரணை நடத்த நியமிக்கப்பட்ட மூவரடங்கிய குழுவின் விசாரணை அறிக்கை பூர்த்தியாகியுள்ளது. அதனைத் தட்டச்சு செய்யும் வேலை தற்போது நடந்து வரு கிறது என்று அந்தக் குழுவின் உறுப்பினரொருவர் தெரிவித்தார்.

சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சர் டி.எம். சுவாமிநாத னால், முன்னாள் நீதிவானும் முன்னாள் சிறைச்சாலைகள் ஆணையாளருமானரூம் மர்சூக்கின் தலைமையில் விசாரணைக்குழு நியமிக்கப்பட் டது. இந்தக் குழுவினர் களுத்துறை சிறைச்சாலை, வெலிக்கடைச் சிறைச்சாலை ஆகியவற்றிலுள்ள கைதிகள் மற்றும் உத்தியோகத்தர்கள் உட்பட ஏராளமானவர்களின் சாட்சியங்களைப் பதிவு செய்தனர். தற்போது அதன் இறுதி அறிக்கையைச் சமர்ப்பித்துள்ளனர் எனவும் குறிப்பிட்டார். (ஐ)

# கர்ப்பக்கிரக நிர்மாணம்

சரவணை தேவபுரம் ஸ்ரீ கதிர் வேலாயுத சுவாமி கோவில் கர்ப்பக்கிரக நிர்மாண விஞ்ஞாபனம் இன்று புதன்கிழமை காலை 9 மணிக்கு ஆரம்பமாகும் என்று ஆலய பரிபாலன சபையினர் அறிவித்தனர். அதனைத் தொடர்ந்து அன்னதான நிகழ்வு நடைபெறும் என்றும் அவர்கள் தெரிவித்தனர். (வ-ரி)

# வெலிக்கடைச் சிறை மருத்துவர்கள் இருவருக்கு இடமாற்றம்

வெலிக்கடைச் சிறைச்சாலையில் பணிபுரிந்த இரு மருத்துவர்கள் கடந்த சனிக்கிழமை முதல் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர் என்று அந்தச் சிறைச்சாலையின் தகவலறிந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

வெலிக்கடைச் சிறைச்சாலை மருத்துவமனையில் இடம்பெற்று வந்ததாகக் கூறப்படும் சில மோசடிகள் தொடர்பில் விசாரணை செய்ய நியமிக்கப்பட்டுள்ள குழுவின் முன்னிலையில் இவர்கள் சாட்சியமளிக்கவிருந்த சமயத்திலேயே இவ்வாறு திடீர் இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பில் கருத்துத் தெரிவித்த சுகாதார அமைச்சின் உயரதிகாரியொருவர், குறித்த மருத்துவர்கள் இருவரும் சாதாரண முறையிலேயே இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர். இந்த இடமாற்றத்துக்கு வேறெந்தக் காரணங்களும் இல்லை எனத் தெரிவித்தார். (ஐ)

# பெரிய தம்பிரான் திருக்குடமுழுக்கு

யாழ்ப்பாணம், ஏப். 12
அராலி தெற்கு மாவத்தையம்பதி பெரிய தம்பிரான் ஆலயத்தின் திருக்குட முழுக்குப் பெருவிழா இன்று புதன்கிழமை முற்பகல் 9.10 மணிக்கு இடம்பெறும் என்று அறிவிக்கப்பட்டது.

எண்ணெய் காப்பு சாத்தும் வைபவம் நேற்று முற்பகல் 9 மணியிலிருந்து மாலை 5 மணிவரை நடைபெற்றது என்றும் தெரிவிக்கப்பட்டது. (வ-8)

# அருட்பணி செபமாலையின் விளக்கம்

நேற்றைய உதயன் பத்திரிகையின் 2ஆம் பக்கத்தில் மன்னார் பிரஜைகள் குழுத் தலைவர் தொடர்பாக வெளியிட்ட செய்தியைத் தான் முற்றாக நிராகரிக்கிறார் என்று அருட்பணி இம்மனுவேல் செபமாலை அறிவித்திருக்கிறார்.

"இலங்கை அரசிற்கு ஐ.நா. சபையினால் 2 வருட கால அவகாசம் கொடுக்கப்பட வேண்டும் என்பது தொடர்பாக கையெழுத்து இடவில்லை என்பதை தெரிவித்துக்கொள்கின்றேன்" என்று அவர் தெரிவித்துள்ளார்.

மேற்படி விடயம் தொடர்பாக உதயன் பத்திரிகையில் வெளியிடப்பட்டுள்ள செய்தியை முற்றாக நிராகரிக்கின்றேன் என்பதை தெரிவித்துக்கொள்கின்றேன் என்றும் கூறியுள்ளார். காணாமற்போனோர் தொடர்பில் யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற கூட்டம் தொடர்பில் வெளியான செய்தியில் கூறப்பட்டிருந்த ஒரு விடயம் தொடர்பிலேயே அவர் இந்தக் குறிப்பை அனுப்பி வைத்துள்ளார். அந்தக் கூட்டத்தில் கலந்துகொண்டிருந்தவர்களால், இலங்கை அரசுக்குக் கால அவகாசம் கேட்டு ஐ.நாவுக்கு எழுதப்பட்ட கடிதத்தில் நீங்களும் கையெழுத்திட்டிருந்தீர்களா என்று கேட்கப்பட்டதற்குப் பதிலளித்திருந்த அருட்பணி செபமாலை "நான் கையெழுத்திட்டேன்" என்று தெரிவித்தார் எனக் குறிப்பிடப்பட்டிருந்தது.

ஆசிரியர் குறிப்பு: நேற்றுமுன்தினம் நடைபெற்ற கூட்டத்திற்கு சென்றிருந்த உதயன் பத்திரிகையாளர் அங்கிருந்து வெளியேற்றப்பட்டார்.

அதன் பின்னர் அருட்பணி செபமாலையின் உரை தொடர்பில் கிடைத்த தகவல்களை உறுதிப்படுத்துவதற்காகவும் மேலதிக விவரங்களைப் பெறுவதற்காகவும் அவருடன் தொலைபேசித் தொடர்பை ஏற்படுத்த உதயன் செய்தியாளர் பல தடவைகள் எடுத்த முயற்சிகள் பயனளிக்கவில்லை. அழைப்பு எதற்கும் அவர் பதிலளிக்கவில்லை. இந்த நிலையிலேயே கூட்டத்தில் தான் அப்படிக் கூறியதாக வந்த செய்தியை நிராகரிக்கிறேன் என்று அவர் தெரிவித்துள்ளார். (உ)

# 6 கிலோ கஞ்சாவுடன் பருத்தித்துறையில் இளைஞன் சிக்கினார்

யாழ்ப்பாணம், ஏப். 12
6 கிலோகிராம் கஞ்சா போதைப் பொருளை வைத்திருந்தார் என்ற குற்றச்சாட்டில் இளைஞன் ஒருவர் நேற்றுமாலை கைது செய்யப்பட்டார் என்று தெரிவிக்கப்பட்டது.

மன்னார் மதுவரித்திணைக்களத்துக்குக் கிடைத்த தகவலின்படி வடமராட்சிக்குச் சென்று பருத்தித்துறை ஆனைவிழுந்தான் சந்தியில் வைத்து குறித்த நபரைக் கைது செய்ததாக மதுவரித் திணைக்களத்தினரால் தெரிவிக்கப்பட்டது.

"கற்கோவளம் புனிதநகரைச் சேர்ந்த ஒருவரே இந்தக் குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டார். அவரிடமிருந்து 6 கிலோகிராம் கஞ்சா போதைப் பொருள் மீட்கப்பட்டது. அவர் விசாரணையின் பின்னர் நீதிவானிடம் முற்படுத்தப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டார்" என்று மதுவரித் திணைக்கள அதிகாரிகளால் மேலும் தெரிவிக்கப்பட்டது. (வ-4-26)

முதலாம் பக்கத்தொடர்ச்சி...

## சிறுபான்மையின...

கேப்பாபிலவு மக்களின் காணி மீட்புப் போராட்டத்துக்கு முழுமையான ஒத்துழைப்பு வழங்குவேன். இந்தக் காணியை மக்களுக்குப் பெற்றுக்கொடுப்பதற்கான உச்சக்கட்ட நடவடிக்கைகளை மேற்கொள்வேன்" இவ்வாறு கேப்பாபிலவுப் போராட்டக் களத்தில் வைத்து உறுதியளித்தார் அமைச்சர் ரிசாத் பதியுதீன். தேசிய ஐக்கிய முன்னணியின் தலைவர் அசாத் சாலி மற்றும் சட்டத்தரணி என். எம் சஹீட் ஆகியோருடன் கேப்பாபிலவுப் போராட்டக் களத்துக்கு நேற்றுக் காலை சென்ற அமைச்சர் ரிசாத் பதியுதீன், பாதிக்கப்பட்ட மக்களுடன் உரையாடினார். பிரச்சினைகளைக் கேட்டறிந்த பின் மக்கள் மத்தியில் அவர் கருத்துத் தெரிவித்தபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:
வடக்குகிழக்கில் தமிழ்பேசும் மக்களது காணிகள் பெரும்பாலானவை கையகப்படுத்தப்பட்டு இன்று மக்களிடம் கையளிக்கப்படாமல் தொடர்ந்து இழுத்தடிக்கப்படு கின்றது.

கேப்பாபிலவு மக்களின் 482 ஏக்கர் விஸ்தீரணம் கொண்ட பூர்வீகக் காணிகளில் இராணுவம் இன்னும் நிலை கொண்டிருப்பது வேதனையானது.

இந்தக் காணிகள் விடுவிக்கப்பட்டு மக்களிடம் கையளிக்க மேற்கொள்ளும் முயற்சிகளுக்கு எனது பூரணமான பங்களிப்பும் உண்டு. அத்துடன் இந்த மக்களின் வேதனைகளில் நானும் பங்கேற்கின்றேன் என்றார்.

அசாத் சாலி தெரிவிக்கையில்,
நானும், அமைச்சர் ரிசாத்தும் நாளையதினம் (இன்று) அரச தலைவரைச் சந்திக்க உள்ளோம். அப்போது கேப்பாபிலவுக் காணி விடயம் தொடர்பாகவும் எடுத்துச் சொல்வோம். உங்கள் காணிகள் உங்களுக்கு கிடைக்கும் வரை நாங்கள் உங்களுக்காக என்றும் குரல் கொடுப்போம் என்றார். (த-7)

# 24,000 இலங்கையருக்கு இரட்டைக்குடியுரிமை

கொழும்பு,ஏப்.12
24 ஆயிரம் இலங்கையர்களுக்கு இதுவரை இரட்டைக்குடியுரிமை வழங்கப்பட்டுள்ளது. அத்துடன் எதிர்வரும் 28 ஆம் திகதி மேலும் ஆயிரத்து 500 பேருக்கு இரட்டைக்குடியுரிமை வழங்கப்படவுள்ளது என்று குடிவரவு குடியகல்வுத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

பாதுகாப்புக் காரணங்களைக் காரணங்காட்டி முன்னைய அரசு இரட்டைக் குடியுரிமை வழங்குவதைக் கட்டுப்படுத்தியிருந்ததால், 2015 ஆம் ஆண்டு வரை கிடைத்த ஏராளமான விண்ணப்பங்கள் இடைநிறுத்தி வைக்கப்பட்டிருந்தன. புதிய அரசின் கீழ் இந்தத் தடைகள் தளர்த்தப்பட்டு குடியுரிமைகள் வழங்கப்பட்டு வருகின்றன. விண்ணப்பம் செய்பவர்களுக்கு மூன்று மாதகாலத்தில் உரிய பதில் வழங்கப்படும் எனவும் குடிவரவு குடியகல்வுத் திணைக்களத்தின் உயரதிகாரியொருவர் தெரிவித்தார். (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 193 அபாயகரமான வெடி பொருள்களை புலோப்பளையில் அகற்றியுள்ளது 'ஷார்ப்'






பளை, ஏப்.12

பச்சிலைப்பள்ளிப் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட புலோப்பளைப் பிரதேசத்தில் கடந்த ஜனவரி மாதம் தொடக்கம் மார்ச் மாதம் வரையிலான 3 மாதங்களில் 26 ஆயிரத்து 500 சதுர மீற்றர் பரப்பளவில் இருந்து 193 அபாயகரமான வெடி பொருள்கள் அகற்றப்பட்டுள்ளன என்று "ஷார்ப்" மனித நேயக் கண்ணி வெடி அகற்றும் நிறுவனத்தின் தொழில்நுட்ப ஆலோசகர் பிரபாத் நாரம்பனாவ தெரிவித்தார்.

போர் இடம்பெற்ற பிரதேசத்தில் கண்ணி வெடி அகற்றும் பணியில் ஈடுபட்டு வரும் ஊழியர்களின் மன நிலையில் ஏற்படும் பாதிப்புக்களைத் தவிர்க்கும் வகையிலும், அவர்களின் மனநிலையில் மகிழ்ச்சியை ஏற்படுத்தும் வகையிலும் பணியாளர்கள், அவர்களின் பிள்ளைகளுக்கான விளையாட்டு நிகழ்வு மற்றும் மதியவிருந்து உபசாரம் என்பன நேற்று முன்தினம் முகமாலையில் நடத்தப்பட்டன.

இதில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்

அவர் மேலும் தெரிவித்ததாவது:

"ஷார்ப்" மனித நேயக் கண்ணி வெடி அகற்றும் பிரிவினர் கடந்த 2016 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் முதல் டிசெம்பர் மாதம் வரையான காலப்பகுதியில் ஒட்டுசுட்டான் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட ஒலுமடு அம்பகாமம் பகுதியில் சுமார் 61 ஆயிரம் சதுர மீற்றர் பரப்பளவில் வெடிப் பொருள்களை அகற்றிய நிலையில், பணியை நிறைவு செய்து வெடிபொருள்கள் அகற்றப்பட்ட பிரதேசத்தை முல்லைத்தீவு மாவட்டச் செயலரிடம் மக்களின் மீள் குடியேற்றத்துக்காகக் கையளித்துள்ளனர்.

ஒலுமடு அம்பகாமம் பகுதியில் வெடிபொருள்களை அகற்றும் போது, 70 மிதி வெடிகள், 8 மிகவும் ஆபத்தான வெடிபொருள்கள் என மொத்தம் 78 வெடி பொருள்கள் மீட்கப்பட்டுள்ளன.

கடந்த ஜனவரி மாதம் தொடக்கம் முகமாலைப் பிரதேசத்தில் உள்ள புலோப்பளைப் பகுதியில் 2 லட்சத்து 85 ஆயிரத்து 689 சதுர மீற்றர் பரப்பளவில் வெடிபொருள்களை அகற்றும் பணியை இலக்காகக் கொண்டு களமிறங்கிய நிலையில், இது வரை நிறைவடைந்துள்ள 3 மாதங்களில் 26 ஆயிரத்து 500 சதுர மீற்றர் பரப்பளவில் இருந்து அபாயகரமான வெடிபொருள்கள் அகற்றப்பட்டுள்ளன.


இதன் போது மிதிவெடிகள் 103, மிக ஆபத்தான வெடிபொருள்கள் 81, வாகனத்தை தகர்க்கும் வெடி பொருள்கள் 9, என மொத்தம் 193 வெடி பொருள்கள் மீட்புப் பணியில் ஈடுபட்டுள்ள பணியாளர்களால் மீட்கப்பட்டுள்ளன.

இந்த அபாயகரமான வெடி பொருள்களை மீட்கும் பணியில் 44 பணியாளர்கள் உட்பட மொத்தம் 66 பேர் ஈடுபட்டனர் - என்றார்.

குறித்த நிகழ்வின் போது, வெற்றியீட்டியவர்களுக்கான பரிசில்களை "ஷார்ப்" நிறுவனத்தின் நிகழ்ச்சித் திட்ட முகாமையாளர் ஓய்வு பெற்ற லெப்ரினன் கேணல் சரத் ஜெயவர்த்தன, மற்றும் தொழில்நுட்ப ஆலோசகர் பிரபாத் நாரம் பனாவ, மனிதவள மற்றும் நிதிமுகாமையாளர் செல்வி ரீ. வித்தியா, ஆகியோர் வழங்கி வைத்தனர்.

(ஜ - 101)





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மரண அறிவித்தல்

### கந்தையா சின்னத்துரை



கச்சாய் வீதி, பெரியமாவடி, சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா சின்னத்துரை கடந்த (09.04.2017) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார்காலஞ்சென்றவர்களான கந்தையா மீனாட்சி தம்பதியரின் இளைய மகனும் காலஞ்சென்றவர்களான தம்பு பொன்னம்மா தம்பதியரின் அன்பு மருமகனும் காலஞ்சென்ற இராசரத்தினம் (முன்னாள் . அதிபர், ஸ்ரீசண்முகாந்தா வித்தியாலயம்) அவர்களின் அருமைச் சகோதரனும் கனகம்மாவின்(கிளி) அன்புக் கணவரும் முகுந்தன்(லண்டன்), காலஞ்சென்ற அரவிந்தன் மற்றும் உதயணன் ஆகியோரின் அன்புத் தந்தையும் சுரேக்காவின் (லண்டன்) அன்பு மாமனும் கேசிகனின் அன்புப் பேரனும் காலஞ்சென்ற மதுரவாணி, கலைவாணி(கனடா), ஜெயானந்தசிவம், சிவநாராயணதாஸ் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புச் சித்தப்பாவும் சரஸ்வதி(கனடா), தேவமலர்(விசுவமடு) ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (12.04.2017) புதன்கிழமை காலை நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக மு.ப. 10.00 மணிக்கு சாவகச்சேரி, கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**கச்சாய் றோட், பெரியமாவடி, சாவகச்சேரி.**

தகவல்
**குடும்பத்தினர்.**

## மரண அறிவித்தல்

### திருமதி வேலாயுதம் யோகம்மா



சுருவில் ஊர்காவற்றுறையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் ஜேர்மனியில் வசித்தவருமாகிய திருமதி வேலாயுதம் யோகம்மா கடந்த 08.04.2017 சனிக் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான விஸ்வலிங்கம் - வள்ளியம்மை தம்பதிகளின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் - தெய்வானைப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற வேலாயுதத்தின் அன்பு மனைவியும் சிவசந்திரலிங்கம் (கொழும்பு), சிவனடியான் (ஜேர்மனி), நித்தியானந்தன்(ஜேர்மனி) காலஞ்சென்ற சச்சிதானந்தன், வாசஸ்பதி (அச்சுவேலி), வாகேஸ்வரி(பிரான்ஸ்), இராஜேஸ்வரி(கிராமஅலுவலர் - வேலணை), ஸ்ரீகரன்(ஜேர்மனி), ஜெயாகரன்(பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தாயாரும் திருவருள் (கொழும்பு), சுசீலா(ஜேர்மனி), வரதா (ஜேர்மனி), சாந்தினி(ஜேர்மனி), ராஜுகணபதி(அச்சுவேலி) காலஞ்சென்ற தனபாலசிங்கம், பரமேஸ்வரன்(கிரம அலுவலர் - வேலணை), ரூபினி (ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மாமியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (13.04.2017) வியாழக் கிழமை காலை 7.00 மணியளவில் அன்னாரின் மகள் இராஜேஸ்வரியின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சுருவில் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**சிற்பனை வீதி, வேலணை மேற்கு, வேலணை.**

தகவல்:
**குடும்பத்தினர்.**

**077 086 8540**

## கண்ணீர் அஞ்சலி



### திருமதி சறோஜினி பாலகிருஷ்ணன்

அம்மையுடை அடியவராய்
அகம் நிறைந்த தொண்டாற்றி
நிம்மதிசேர் ஆலயத்தில்
நிர்வாகசபை தனிலிருந்து
எம்மையெலாம் மகிழ்வித்த
ஏற்றமுறு சறோஜினியே
இம்மையன்றி மறுமையிலும்
இறையடியில் இருப்பாயே !

ஓம் சாந்தி ! சாந்தி !! சாந்தி !!!

அன்னாரின் ஆத்மா யாழ் வண் - கிழக்கு கலட்டி எச்சாட்டி மஹாமாரியம்மன் திருவடிகளில் இன்புற்றிருக்க பிரார்த்திக்கின்றோம்.

**பரிபாலனசபையினர்**
**யாழ்.வண்.கிழக்கு கலட்டி எச்சாட்டி மஹா மாரியம்மன் தேவஸ்தானம்.**
**கலட்டி அம்மன் வீதி, கலட்டி, யாழ்ப்பாணம்.**

## 31ஆம் நாள் நினைவு அஞ்சலி

அன்னையின் மடியில்
28 . 10 . 1924



ஆண்டவன் அரவணைப்பில்
13 . 03 . 2017

### அமரர் திருமதி திரேசம்மா கனகம்மா சிக்மறிங்கம்

"உயிர்த்தெழுதலும் வாழ்வும் நானே - என்னிடம்
நம்பிக்கை கொள்பவர் இறப்பிலும் - வாழ்வார்"
யோவான் 11 : 25

எங்கள் பாசமுள்ள மம்மி!
பார்க்கும் இடமெல்லாம் உங்கள் பாசமுகம் தெரிகிறது
கேட்கும் ஒலியெல்லாம் உங்கள் குரலாய் ஒலிக்கிறது
நீங்கள் எமக்கு ஊட்டி வளர்த்த நற்பண்புகள்
ஆல்போல் தழைத்து அறுகுபோல் வேரூன்றி
எம் வாழ்வில் வளம் சேர்த்துள்ளது
உங்கள் பிரிவின் துயரம் தாங்காமல்
கண்ணீரில் தவிக்கின்றோம்
எம் உயிர் உள்ளவரை உங்களின் பசுமை நினைவுகள்
எம்மோடு வாழும்

**235, பாங்ஷால் வீதி, யாழ்ப்பாணம்.**

ஈரவிழிகளுடன்
**குடும்பத்தினர்.**

## 45ஆவது நினைவு நாளும் சபிண்டீகரண அழைப்பும்

### அமரர் தம்பிராசா செல்வரத்தினம் (குஞ்சன்)

தோற்றம்
08.11.1954

மறைவு
28.02.2017



கடந்த 28.02.2017 செவ்வாய்க்கிழமை சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவர் அமரர் தம்பிராசா செல்வரத்தினம் அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் நாளை (13.04.2017) வியாழக்கிழமை அதிகாலை 3 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற்று அஸ்தி தொண்டைமனாறு ஆற்றில் சேர்க்கப்படும். அதனைத் தொடர்ந்து அவரது இல்லத்தில் நடைபெறும் சபிண்டீகரண ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

**இதனைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.**

**மாடந்தை, வல்வெட்டி.**
**077 834 2984**

**குடும்பத்தினர்.**

# கரவெட்டியில் தொழிற்சந்தை

கரணவாய், ஏப். 12

வடக்கு மாகாண தொழிற்துறை திணைக்கள அனுசரணையுடன் கரவெட்டிப் பிரதேச உள்ளூர் உற்பத்திகளை ஊக்குவிப்பதற்கான தொழிற்சந்தை இன்று புதன்கிழமை காலை 8.30 மணி முதல் பிரதேச செயலகத்தில் இடம்பெறும் என்று அறிவிக்கப்பட்டது.

கரவெட்டிப் பிரதேச செயலர் தலைமையில் இடம்பெறும் இந்தச் சந்தையில் உள்ளூர் உற்பத்தி பொருள்கள் விற்பனை செய்யப்படும் என்று தெரிவிக்கப்பட்டது. (வ-108)

# நல்லூரின் இன்று புதுவருடச் சந்தை

அச்சுவேலி, ஏப். 12

வடக்கு மாகாண தொழிற்றுறைத் திணைக்களமும் யாழ்ப்பாணம் நல்லூர் பிரதேச செயலகங்களும் இணைந்து நடத்தும் புதுவருடச் சந்தையும் கண்காட்சியும் இன்று புதன்கிழமை மு.ப.10 மணிக்கு நல்லூர் தியாகி திலீபன் நினைவுத் தூபி சதுக்கத்தில் ஆரம்பமாகும் என்று அறிவிக்கப்பட்டது.

வடக்கு மாகாண தொழிற்றுறைத் திணைக்களப் பணிப்பாளர் திருமதி உஷா சிவலிங்கம், யாழ்ப்பாணம் பிரதேச செயலர் பொ.தயானந்தா, நல்லூர் பிரதேச செயலர் ஆ.சிறீ ஆகியோர் முதன்மை விருந்தினர்களாக கலந்து கொண்டு புதுவருடச் சந்தையை திறந்து வைப்பார்கள்.

உள்ளூர் உற்பத்தியாளர்களின் தயாரிப்புக்கள் உற்பத்திகள் காட்சிப்படுத்தப்படும். அவை நியாய விலைக்கு விற்பனை செய்யப்படும். பொதுமக்கள் பார்வையிட்டு பயன் பெறுமாறு நல்லூர் பிரதேச செயலகம் கேட்டுள்ளது. (வ-11)

# திருக்குட முழுக்கு


யாழ்ப்பாணம், ஏப்.12

அராலி தெற்கு மாவத்தையம்பதி பெரிய தம்பிரான் ஆலய திருக்குடமுழுக்கு இன்று புதன்கிழமை காலை 9.15 மணிமுதல் மு.ப 10.30 மணிவரை நடைபெறும் என்று ஆலய தொண்டர்கள் அறிவித்தனர்.(வ)

## மரண அறிவித்தல்

### கந்தையா இரத்தினபூபாலன் (பெரியண்ணா)

(ஓய்வு பெற்ற அதிபர், மன்னார் - திருக்கேதீஸ்வரம் கௌரி அம்பாள் வித்தியாலயம்)



இணுவில் மேற்கைப் பிறப்பிடமாகவும் வதிவிட மாகவும் கொண்ட கந்தையா இரத்தினபூபாலன் (பெரியண்ணா) 11.04.2017 செவ்வாய்க்கிழமை இறைபதம் அடைந்து விட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா - தங்கம்மா தம்பதியரின் மூத்த மகனும் Dr. பாலசுப் பிரமணியம், காலஞ்சென்ற அருணகிரிநாதன் மற்றும் அருட்சோதி ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆவார்.

அன்னாரது பூதவுடல் இன்று (12.04.2017) புதன் கிழமை மு.ப 10.00 மணியளவில் காரைக்கால் இந்துமயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**" அருள் முருகன் வாசம்"**
**இணுவில் மேற்கு, இணுவில்.**

தகவல்
**குடும்பத்தினர்.**

**077 439 5257**

## நினைவின் நிஜங்கள்

9ஆம் ஆண்டு

பிறப்பு
19.01.1937



இறப்பு
10.03.2008

2 ஆம் ஆண்டு

பிறப்பு
13.01.1954



இறப்பு
05.04.2015

### திருமதி பூபதி குமாரசாமி

திதி: மாசிமாத வளர்பிறை பஞ்சமி

### செல்வி பஞ்சகல்யாணி குமாரசாமி

திதி: பங்குனி மாத தேய்பிறை பிரதமை

நினைவுக்கனல்கள் நீறு பூத்த
நெருப்பாக எம்முள் - மீண்டும்
வருவீர்கள் எம் அன்புக்குரியவர்களே!
என எதிர்பார்புடன்......

**"பூபதி"**
**ஐயனார் வீதி, கல்வயல், சாவகச்சேரி.**

**குடும்பத்தினர்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ். நல்லூர் பிரதேச தெருக்களில் சுத்தம் பேணும் திட்டம் ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஏப். 12
நல்லூர் பிரதேச சபை எல்லைக்குட்பட்ட தெருக்களைச் சுத்தமாக வைத்திருக்கும் செயற்றிட்டம் வடக்கு மாகாண சபை எதிர்க்கட்சித் தலைவரால் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

நல்லூர் பிரதேச சபையுடன் இணைந்து செயற்படுத்தும் இந்தத் திட்டத்தின் முதற்கட்டமாக கொக்குவில் கிழக்கு, கோவில் வீதியில் வசிக்கும் சுமார் 250 குடியிருப்புக்களின் திண்மக் கழிவுகளைச் சேகரிக்கும் கொள்கலன்கள் கடந்த சனிக்கிழமை கொக்குவில் ஸ்ரீ இராமகிருஷ்ண வித்தியாலய வளாகத்தில் வைத்துக் கையளிக்கப்பட்டன.

இது தொடர்பில் வடக்கு மாகாண எதிர்க்கட்சித் தலைவ்ரின் செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

வடக்கு மாகாண சபையின் எதிர்க்கட்சித் தலைவர் எஸ்.தவராசாவின் பரிந்துரையில் வடக்கு மாகாண சபை நிதியிலிருந்து 27 இலட்சம் ரூபா இந்தத் திட்டத்துக்காக ஒதுக்கீடு செய்யப்பட்டது. இந்தத் திட்டத்தில் அடுத்த கட்டமாக நகர்த்தக் கூடிய கழிவு சேகரிக்கும் பெரிய கொள்கலன்கள் பிரதேசத்தின் முக்கிய இடங்களில் வைக்கப்படவுள்ளன. குடியிருப்புக்களில் சேகரிக்கும் கழிவுகள் வாரத்தில் இரு நாள்கள் சேகரிக்கப்படும். அவற்றை எடுப்பதற்காக வரும் கழிவு சேகரிக்கும் வாகனங்களில் இசையொன்றை ஒலிக்கவிடுவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது.

இந்தத் திட்டத்தை ஆக்க பூர்வமாகவும், வினைத்திறனாகவும் நடத்துவதன் மூலம் நல்லூர் பிரதேசம் யாழ்ப்பாண மாவட்டத்தில் முன்னுதாரணமாக சுத்தமானதாகவும், அழகானதாகவும் அமைவதற்கு அனைவரும் ஒத்துழைப்பு வழங்கவேண்டும்.

கடந்த வருடம் வீதி அபிவிருத்தி அமைச்சால் 60 இலட்சம் ரூபா செலவில் கொக்குவில் கிழக்கு, கோவில் வீதி சீரமைக்கப்பட்டமைக்காக அமைச்சர் டெனீஸ்வரன் கௌரவிக்கப்பட்டார்.


இந்த நிகழ்வில் வடக்கு மாகாண சபை அமைச்சர்களான பொ. ஐங்கரநேசன், பா. டெனீஸ்வரன் ஆகியோரும், வடக்கு மாகாண சபை உறுப்பினர்களான பா. கஜதீபன், ச. சுகிர்தன், இ. ஆர்னல்ட் ஆகியோரும், வீதிப் போக்குவரத்து அமைச்சின் செயலர் சி. சத்தியசீலன், வீதி அபிவிருத்தித் திணைக்களத்தின் மாகாணப் பணிப்பாளர் எந்திரி சிவராஜலிங்கம், முதன்மைப் பொறியியலாளர் எஸ். ஜெகநாதன் ஆகியோரும், நல்லூர் பிரதேச சபை செயலாளர் எஸ். சுதர்ஜன், நல்லூர் சுகாதார மருத்துவ அதிகாரி மருத்துவர் அ. ஜெயக்குமரன், கொக்குவில் இராமகிருஷ்ண வித்தியாலய அதிபர் திலீபன், ஆசிரியர்கள் மற்றும் பிரதேச வாழ் மக்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர் என்றுள்ளது. (வ-10)

# முதியோருக்கான கொடுப்பனவு அஞ்சலகங்களில் கிடைக்கும்

தென்மராட்சி, ஏப். 12
சித்திரைப் புத்தாண்டை முன்னிட்டு முதியோர்களுக்கான கொடுப்பனவு தென்மராட்சிப் பிரதேச அஞ்சல் அலுவலகங்களில் விநியோகிக்கப்பட்டு வருகின்றது. என்று அறிவிக்கப்பட்டது. "புத்தாண்டை முன்னிட்டு வழமையைவிட முற்கூட்டியே முதியோருக்கான ஆயிரத்து 900 ரூபா மாதாந்தக் கொடுப்பனவு அஞ்சல் அலுவலகங்களுக்க அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. அஞ்சல் அலுவலகங்களால் கொடுப்பனவு வழங்கப்படுகிறது" என்று தென்மராட்சி பிரதேச செயலக சமூக சேவைகள் பிரிவினரால் தெரிவிக்கப்பட்டது. 70 வயதுக்குமேற்பட்ட முதியோர்களுக்கான மாதாந்தக் கொடுப்பனவு ஒவ்வொரு மாதமும் 15ஆம் திகதி தொடக்கம் 24ஆம் திகதி வரை வழங்கப்படுவது வழக்கம். (வ - 9)

**சித்திரை புத்தாண்டை முன்னிட்டு**
**ஏசியன் தளபாடத்தின் மாபெரும் மலிவு விற்பனை**

Table Mat - 2400/= 1550/=
Kitchen Rack - 2000/= 1500/=
Iron Board - 1300/= 1000/=
மெத்தை - 6 x 3 - 2400/= 1800/=
6 x 3 - 2800/= 2450/=
பிரம்பு செற் - 16500/= - 14750/=
லெதர் சோபா செற் - 41500/= - 34500/=
6 கதிரை (ரீப்போ இலவசம்) - 5500/= - 4050/=
ஸ்ரீல் அலுமாரி - 11500/= - 9600/=
கட்டில் 6 x 4 - 10500/= - 8750/=
T.V.ஸ்ராண்ட் - 10500/= - 8950/=



இல. 230, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்
(இலுப்பையடி ஆனைப்பந்தி சந்திக்கு இடையில்) 021 492 7791, 076 821 9418, 076 821 9415, 076 821 9413

# டெங்குக் கட்டுப்பாட்டு வாரத்தில் யாழ்ப்பாணப் பொலிஸ் பிரிவில் 90 குடியிருப்பாளர்கள் மீது வழக்கு

யாழ்ப்பாணம், ஏப். 12
டெங்கு ஒழிப்பு வாரத்தில் யாழ்ப்பாணம் பொலிஸ் பிரிவில் 90 குடியிருப்பாளர்கள் மீது வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளன என்று யாழ்ப்பாண பொலிஸ் நிலைய சூழல் பாதுகாப்பு பிரிவினர் தெரிவித்தனர்.

"நாடு முழுவதும் டெங்கு நோய்த் தொற்றைக் கட்டுப்படுத்த கடந்த மாதம் 29ஆம் திகதியிலிருந்து கடந்த 4ஆம் திகதி வரை டெங்கு ஒழிப்பு வாரமாக பிரகடனப் படுத்தப்பட்டது.

இந்தக் காலப்பகுதியில் மேற்கொள்ளப்பட்ட சோதனை நடவடிக்கைகளின் போது டெங்கு நுளம்புப் பெருக்கத்துக்கு ஏதுவாகக் காணப்படும் குடியிருப்புக்கள் மற்றும் இடங்கள் இனங்காணப்பட்டு அவற்றின் உரிமையாளர்கள் மற்றும் பராமரிப்பாளர்களுக்கு எதிராக நீதிமன்ற நடவடிக்கை எடுக்கப்பட்டது.

யாழ்ப்பாண பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் பொலிஸார், பொதுச் சுகாதாரப் பிரிவினர், இராணுவத்தினர் உள்ளிட்டோர் இணைந்து முன்னெடுத்த தேடுதலில் கடந்த வாரத்தில் மாத்திரம் 90 குடியிருப்பாளர்களுக்கு எதிராக நீதிமன்றில் வழக்குகள் பதிவு செய்யப்பட்டன" என்று யாழ்ப்பாண பொலிஸ் நிலைய சுழல் பாதுகாப்புப் பிரிவினர் தெரிவித்தனர் (வரி-1).

**கார் விற்பனைக்கு**
புத்தம் புதிய ஒரு மாதமளவில் இறக்குமதி செய்யப்பட்ட VITZ TOYATO (2015) Car விற்பனைக்குண்டு. Km 8 xxx (Registation - 02/03/2017) பூரண வசதிகள் உள்ளடக்கப்பட்டது.
071 036 7904, 077 117 6591

**மணமகள் தேவை**
31 வயது பட்டதாரியான மணமகனுக்கு மணமகள் தேவை. (12 இல் சூரியன், செவ்வாய், புதன் உண்டு. கௌரவ குடும்பம்)
075 551 2919

**காணி விற்பனைக்கு**
கோண்டாவில், தென் கிழக்கு பகுதியில் நிலப்பரப்பு 10 பரப்பு விற்பனைக்கு உண்டு. வீடு கட்டுவதற்கு உகந்த காணி பொற்பதி றோட்டில் அமைந்துள்ளது.
077 220 8432, 077 791 7691, 077 390 2994

**மணமகள்கள் தேவை**
யாழ் இந்து கௌரவ குடும்பங்களைச் சேர்ந்த அரச உத்தியோகம் பார்க்கும் மணமகன்கள் விவரம். 1982, சித்திரை, கன்னிராசி. 1984, மிருகசீரிடம், மிதுனராசி, கி.பா 56¾ . திருமலை, 1985, பரணி, என்ஜினியர், கி.பா 42½ . இவர்களுக்கு மணமகள்கள் தேவை. சகல விவரங்களையும் குறிப்பு, படத்துடன் Viberக்கு அனுப்பி வைக்கவும்.
Viber: 076 702 1622 T.P: 077 211 6772

# அரசாங்க அறிவித்தல்
## பகிரங்க ஏலவிற்பனை - 2017
## மாவட்ட செயலகம், யாழ்ப்பாணம்.

மாவட்டச் செயலகம், தகவல் தொழில்நுட்பபூங்கா மற்றும் கீழ்க்குறிப்பிடப்படும் பிரதேச செயலகங்களின் அலுவலகப் பாவனையிலிருந்து நீக்கப்பட்ட தளபாடங்கள், வளி பதனாக்கிகள், கணினிகள், பிறிண்டர்கள், ரயர்கள், போட்டோப்பிரதி இயந்திரங்கள், மின்சார உப கரணங்கள் போன்ற பொருள்கள் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படவுள்ளன.

ஏல விற்பனையில் பொருள்களைக் கொள்வனவு செய்ய விரும்புபவர்கள் நாவற்குழி அரச களஞ்சியசாலை மற்றும் உரிய அலுவலகங்களில் ஏலவிற்பனை நடைபெறும் நாளுக்கு முதல நாள் மு.ப 9.00 மணிமுதல் பி.ப 1.00 மணிவரை பொருள்களைப் பார்வையிடலாம். ஏல விற்பனையில் பொருள்களைப் பெறுகின்றவர்கள் உடனடியாக முழுப்பணத்தினையும் ஏல விற்பனைக்குரிய காசாளரிடம் செலுத்திப் பற்றுச்சீட்டினைப் (பொது 172) பெற்று அன்றையதினம் மாலை 4.00 மணிக்கு முன்னர் பொருள்களை அவ்விடங்களில் இருந்து அகற்றுதல் வேண்டும்.

| இல | அலுவலகம் | ஏலவிற்பனை நடைபெறவுள்ள திகதி | நேரம் | ஏலவிற்பனை நடைபெறவுள்ள இடம் |
|---|---|---|---|---|
| 01 | பிரதேச செயலகம்- கோப்பாய் | 25.04.2017 - செவ்வாய்க்கிழமை | மு.ப 10.00 | பி.செ கோப்பாய் |
| 02 | பிரதேசசெயலகம் - நல்லூர் | 25.04.2017 - செவ்வாய்க்கிழமை | மு.ப 10.00 | பி.செ நல்லூர் |
| 03 | பிரதேசசெயலகம் - ஊர்காவற்றுறை | 25.04.2017 - செவ்வாய்க்கிழமை | மு.ப 10.00 | பி.செ ஊர்காவற்றுறை |
| 04 | பிரதேசசெயலகம் - தெல்லிப்பளை | 25.04.2017 - செவ்வாய்க்கிழமை | மு.ப 10.00 | பி.செ தெல்லிப்பளை |
| 05 | பிரதேசசெயலகம் - யாழ்ப்பாணம் | 25.04.2017 - செவ்வாய்க்கிழமை | மு.ப 10.30 | பி.செ யாழ்ப்பாணம் |
| 06 | தகவல் தொழிநுட்ப பூங்கா-யாழ்ப்பாணம் | 25.04.2017 - செவ்வாய்க்கிழமை | மு.ப 10.00 | தகவல் தொழிநுட்பபூங்கா, யாழ்ப்பாணம் ப.நோ.கூ.சங்ககட்டடம் |
| 07 | பிரதேசசெயலகம் - பருத்தித்துறை | 26.04.2017 - புதன்கிழமை | மு.ப 10.00 | பி.செ பருத்தித்துறை |
| 08 | பிரதேசசெயலகம் - மருதங்கேணி | 26.04.2017 - புதன்கிழமை | மு.ப 09.00 | பி.செ மருதங்கேணி |
| 09 | பிரதேசசெயலகம் - உடுவில் | 26.04.2017 - புதன்கிழமை | மு.ப 10.00 | பி.செ உடுவில் |
| 10 | பிரதேசசெயலகம் - காரைநகர் | 26.04.2017 - புதன்கிழமை | மு.ப 10.00 | பி.செ காரைநகர் |
| 11 | பிரதேசசெயலகம் - சங்கானை | 26.04.2017 - புதன்கிழமை | மு.ப 10.00 | பி.செ சங்கானை |
| 12 | பிரதேசசெயலகம் - சண்டிலிப்பாய் | 26.04.2017 - புதன்கிழமை | மு.ப 10.30 | பி.செ சண்டிலிப்பாய் |
| 13 | பிரதேசசெயலகம் - நெடுந்தீவு | 26.04.2017 - புதன்கிழமை | மு.ப 11.00 | பி.செ நெடுந்தீவு |
| 14 | பிரதேசசெயலகம் - சாவகச்சேரி | 26.04.2017 - புதன்கிழமை | மு.ப 11.00 | பி.செ சாவகச்சேரி |
| 15 | பிரதேசசெயலகம் - வேலணை | 27.04.2017 - வியாழக்கிழமை | மு.ப 10.00 | பி.செ வேலணை |
| 16 | பிரதேசசெயலகம் - கரவெட்டி | 28.04.2017 - வெள்ளிக்கிழமை | பி.ப 03.00 | பி.செ கரவெட்டி |
| 17 | மாவட்டச் செயலகம் - யாழ்ப்பாணம் | 05.05.2017 வெள்ளிக்கிழமை | மு.ப. 09.30 | நாவற்குழி அரச களஞ்சியசாலை |

நா.வேதநாயகன்
அரசாங்கஅதிபர், யாழ்.மாவட்டம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதிய அரசமைப்பு ஒரு போதும் வராது

## தேசப்பற்றுள்ள தேசிய இயக்கம் கூறுகிறது

கொழும்பு, ஏப். 12
இலங்கையில்புதிய அரசமைப்புஒருபோதும் வராது. ரணில்,சம்பந்தன்,ஹக்கீம்,ஆகியோர் இன்றுமக்களைஏமாற்றும்நாடகத்தைஅரங் கேற்றிக் கொண்டிருக்கின்றனர் என்று தேசப் பற்றுள்ளதேசிய இயக்கத்தின்பொதுச்செயலா ளர் மருத்துவர் வசந்த பண்டார தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:
இலங்கைக்குப்புதியஅரசமைப்புஒருபோதும் கொண்டுவரப்படமாட்டாது. புதியஅரசமைப்பு தேவையென ஹக்கீம் கூறுவது வெறுமனே நாடகமாகும். ஏற்கனவே அமெ ரிக்கா உட்பட பன்னாடுகளுக்குஅரசுஉறுதிமொழி வழங்கி விட்டது.

இன்றைய அரசமைப்பில் திருத்தங்களை மேற்கொண்டு 13 ஆவது திருத்தம் பலப்படுத் தப்பட்டுகாணி, பொலிஸ்அதிகாரங்கள்வழங் கப்படும் என்று உறுதியளிக்கப்பட்டுள்ளது. இதனை வழங்கினால் போதுமானது. அது சமஷ்டிக்குவழிவகுக்கும். இதனையேசம்பந் தன், சுமந்திரன் ஆகியோர் எதிர்பார்த்தனர். இன்றுஅந்தநிகழ்ச்சிநிரல்நிறைவேற்றப்பட்டுக் கொண்டிருக்கிறது. அதேவேளை ஹக்கீம் அரசுக்கு முன்வைத்த 67 கோரிக்கைகளை யும்அரசுஏற்றுக்கொண்டுள்ளது. அதில்ஒன்று தான்கல்முனைநகரைமுஸ்லிம்நகரமாகஏற் படுத்துவதாகும். ஜே.ஆர்.ஜயவர்த்தனமற்றும் பிரேமதாஸஆகியோரால் 13 ஆவது திருத்தத் தைப்பலப்படுத்தி முழுமையாக நிறைவேற்ற முடியவில்லை. இன்றைய அரசு அதனை நிறைவேற்றவே பன்னாட்டு நிகழ்ச்சி நிரலை நடைமுறைப்படுத்துகிறது. என்றார். (ஐ-10)



சிவமயம்

### பாஷாண உத்வாசன சபிண்டீகரண அழைப்பு

கடந்த 29 .03.2017 புதன் கிழமை சிவபதம் அடைந்த எங்கள் அன்புத்தந்தை

அமரர்
**சிவத்திரு
சோமசுந்தரம் ஐயா
முருகதாஸ் ஐயா**
(ஓய்வு பெற்ற நில அளவையாளர் (சேவையர் ஐயா)



அவர்களின் பாஷாண உத்வாசம் 13.04.2017 வியாழக்கிழமை அதிகாலை 4.00 மணியளவிலும் அன்றைய தினம் பகல் 9.00 மணிக்கு சபிண்டீகர ணமும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் பங்குபற்றி அன்னாரின் ஆத்ம சாந்திக்காக பிரார்த்திக்கும் வண்ணம் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம். இந்த அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.

ஐயர் கடையடி,
ஆஸ்பத்திரி பின் ஒழுங்கை,
மானிப்பாய்.

மனைவி,மக்கள்,மருமக்கள்,
சகோதரர்கள்,பெறாமக்கள்.
பேரப்பிள்ளைகள்.

தொ.பே.இல:- 021 225 5053, 077 316 4787

# புதிய கட்சிகளைப் பதிவு செய்வதற்கான நேர்முகத்தேர்வு அடுத்த வாரம் ஆரம்பம்

## 95 புதிய கட்சிகள் விண்ணப்பம்

கொழும்பு,ஏப்.12
புதிய அரசியல் கட்சிகளைப் பதிவு செய்வதற் கான நேர்முகத் தேர்வுகள் எதிர்வரும் புதன்கி ழமை ஆரம்பிக்கப்படும். இம்முறை 95 புதிய அரசியல்கட்சிகள்பதிவுக்காகவிண்ணப்பங்களை அனுப்பியுள்ளன. அவற்றுள் நான்கு கட்சிகள் தலா இரண்டு விண்ணப்பங் களை அனுப்பி யுள்ளன என்று தேர்தல்கள் ஆணையக வட் டாரங்கள் தெரிவித் தன.

இது தொடர்பில் தேர்தல்கள் ஆணையகத் தலைவர்மகிந்ததேசப்பிரியதெரிவித்ததாவது, "ஒவ்வொருகட்சியும்தனித்தனியாகநேர்முகத் தேர்வுக்குஅழைக்கப்படும். எதிர்வரும்19ஆம் திகதி ஆரம்பமாகும் நேர்முகத் தேர்வு 20, 21, 22, 26, 27 ஆம் திகதிகள் வரை தொடரும். ஒவ்வொருவிண்ணப்பமும்மிகவும்உன்னிப் பாகப்பரிசீலிக்கப்படும். நேர்முகத்தேர்வுகள்முடி வடைந்தபின்னர்,தேர்தல்கள்ஆணையகத்தின் நிறைவேற்றுச்சபை தகுதிபெற்ற கட்சிகளைத் தேர்ந்தெடுக்கும்" என்று குறிப்பிட்டார். (ஐ)


# சைவநெறிக்கூடம் குருவின் திருவடி சிந்தை செய்கிறது



என்னிலே இருந்தஒன்றை யான் அறிந்ததில்லையே
என்னிலே இருந்தஒன்றை யான் அறிந்து கொண்டபின்
என்னிலே இருந்தஒன்றை யாவர் காண வல்லரோ
என்னிலே இருந்திருந்து யான்உணர்ந்து கொண்டேனே.

சைவநெறிக்கூடத்தை முன்னின்று ஆளும்
பெரியண்ணா எனும் முன்னெறி முத்தர் அருளர்
திருவருள்நிறை கந்தையா இரத்தினபூபாலன்
திருவள்ளுவர் ஆண்டு 2048 மீனத்திங்கள் 29ம் நாள்
திருமேனி துறந்தார் ஞானலிங்கேச்சுரர் பதமடைந்தார்
பொன்னார் மேனியன் பேரொளியுடன் இணைந்த
இருள்கடிந்தருளும் பெரியண்ணை திருவடி போற்றி
நால்வர் தமிழாலே பேரொளி வழிபாடு செய்து
சைவநெறிக்கூடம் குருவின்திருவடி சிந்தை செய்கிறது

பகிடிக்கும் பொய் என்றும் சொல்லாதே
கொள்ளை கொள்ளக் கள்ளம் நினையாதே
கோபம் என்றும் எவருடனும் கொள்ளாதே
நான் என்று இருளில் நீ என்றும் வீழாதே
கோபுரத்தை தாங்குவது பொம்மை அல்ல
பழுதாங்கும் பொருள் வெளியில் தெரியாது
எதையும் நீ தாங்கவில்லை என்றுணர்
அவன் தாங்க நீ வெறும் பொம்மையாவாய்

கல்வி திருத்தொண்டு தேடி செய்
அற்றார் பசியழித்து சிவபணி ஆற்று
அன்பு வழிச் சைவத்தை பரப்பு
பெரியண்ணா சொன்ன மொழிகள் இவை...
குருநாதன் திருமொழி சைவநெறிக்கூடம் ஒழுகி
திருமெய்யால் திருவொத்த திருத்தொண்டர் துவளாமல்
பெருந்தொண்டு தொடர ஞானலிங்கப்பெருமான் அருளட்டும்
பெரியண்ணா கருணை யாவற்கும் கிடைக்கட்டும்...

**இன்று
12.04.2017
மாலை 6
மணியளவில்
பெரியண்ணாவின்
சமாதி நிகழ்வுகள்
இனுவில் ஞான
லிங்கேச்சுரர்
திருக்கோயிலில்
இடம்பெறும்.**

**சைவநெறிக்கூடம்**
பேர்ன் - சுவிற்சர்லாந்து.
மர்த்தினி - சுவிற்சர்லாந்து
லண்டன் - ஐக்கியராச்சியம்,
யாழ். இனுவில் - ஈழம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிதி விடுவிக்கப்படாத திட்டத்துக்கு 61 ஆயிரம் ரூபா செலவில் அடிக்கல்



கோப்புப் படம்

யாழ்ப்பாணம், ஏப்.12
யாழ்ப்பாணம் மாநகர சபைக் கட்டடம் அமைப்பதற்கு நிதி விடுவிக்கப்படவில்லை. எனினும் கட்டடத்துக்கான அடிக்கல் நடும் நிகழ்வுக்கு 61 ஆயிரம் ரூபா வரை செலவு செய்யப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணத்தில் மாநகர சபை முன்னர் அமைந்திருந்த இடத்தில் புதிய கட்டடம் கட்டுவதற்கான அடிக்கல் 2010ஆம் ஆண்டு மார்ச் மாதம் 22ஆம் திகதி நடப்பட்டது. அந்த நிகழ்வில் வடக்கின் அப்போதைய ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ.சந்திரசிறியும், அப்போது அமைச்சராகப் பதவி வகித்த டக்ளஸ் தேவானந்தாவும் கலந்து கொண்டனர்.

இதுவரை கட்டடம் அமைப்பதில் எந்த முன்னேற்றமும் இல்லை. இது தொடர்பாக தகவல் அறியும் உரிமைச் சட்டம் மூலமாக யாழ். மாநகர சபையிடம் கேள்வி எழுப்பப்பட்டது.

"திட்டத்துக்காக மாகாண உள்ளூராட்சி அமைச்சால் 928.7 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டது. அடிக்கல் நடும்போதும் திட்டத்துக்கு நிதி விடுவிக்கப்படவில்லை. அடிக்கல் நடும் நிகழ்வுக்கு 61 ஆயிரத்து 602 ரூபா செலவிடப்பட்டது. அடிக்கல் நட்டபின்னர் அந்தத் திட்டத்தில் எந்த முன்னேற்றமும் இல்லை." - என்று மாநாகர சபை தெரிவித்தது.

திட்டம் கிடப்பில் போடப்பட்டமைக்கான காரணம் தொடர்பாக மாநகர சபை பதிலெதுவும் கூறவில்லை.

அந்தக் காலப்பகுதியில் யாழ்.மாநகர சபை ஈ.பி.டி.பி. கட்சியின் ஆளுகைக்குள் இருந்தது. (ம - 5)

# போலி முகவரிடம் ஏமாற வேண்டாம்

## நிரந்தர நியமனத்துக்குக் காத்திருக்கும் சுகாதாரத் தொண்டர்களுக்கு அறிவுறுத்து



யாழ்ப்பாணம், ஏப்.12
வடக்கு மாகாண சுகாதாரத் தொண்டர்களுக்கு நிரந்தர நியமனம் பெற்றுத் தரப்படும் என்று போலி முகவர்கள் விண்ணப்பங்கள் விநியோகிக்கின்றனர். சில அரசியல்வாதிகளின் பெயர்களை அவர்கள் உபயோகிக்கின்றனர். அவர்களிடம்ஏமாந்து விட வேண்டாம். நியமனத்தில் உள்ள தடைகளை நீக்க வடக்குச் சுகாதார அமைச்சு தொடர்ந்து முயற்சிக்கின்றது.

இவ்வாறு வடக்கு மாகாண சுகாதார அமைச்சர் ப.சத்தியலிங்கம் தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:
2014ஆம் ஆண்டு அரச சுற்றறிக்கையின் படி எம்மால் 900க்கு மேற்பட்ட சுகாதாரத் தொண்டர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்க முடிந்தது. அதன்போது நீண்ட காலம் பணியாற்றிய பலருக்கு நியமனங்கள் வழங்கப்படவில்லை. சுற்றறிக்கையில் கூறப்பட்ட நிபந்தனைகளே அதற்குக் காரணம். மாகாண சபை உருவாக்கப்பட முன்னர் வடக்கில் அரசில் அங்கம் வகித்த அமைச்சர்கள் தமக்கு வேண்டியவர்களைப் பணியிடங்களுக்கு நியமித்தனர். அதனால் உண்மையாகத் தொண்டர்களாகப் பணியாற்றிய பலருக்கு நியமனம் கிடைக்கவில்லை.

அண்மையில் வடக்குக்கு வந்திருந்த அமைச்சர் ராஜிதவிடம் நியமனம் தொடர்பான கோரிக்கையை மீண்டும் முன்வைத்துள்ளோம். இது தொடர்பான முக்கிய கூட்டம் ஒன்று வடக்கு ஆளுநர் அலுவலகத்தில் நடைபெற்றது. அதில் சாதகமான பல விடயங்கள் பேசப்பட்டபோதும், நிரந்தர நியமனத்துக்கான அடிப்படைக் கல்வித் தகைமை தொடர்பில் வலியுறுத்தப்பட்டது.

இந்த நிலையில் அரசியல்வாதிகளின் பெயர்களைக் கூறிச் சிலர் ஏமாற்றுகின்றனர் என்று தெரியவருகின்றது. அவர்களிடம் ஏமாற வேண்டாம்.

வடக்கு மாகாணத்தில் சுகாதாரத் தொண்டர்கள் ஆற்றிய சேவை அளப்பரியது. அவர்களின் நிரந்தர நியமனம் தொடர்பாக மத்திய சுகாதார அமைச்சுக்கு நாம் தொடர்ந்து அழுத்தம் கொடுப்போம் - என்றார். (ம - 101)

# திருட்டில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் பெண்கள் கைது

யாழ்ப்பாணம், ஏப்.12
திருட்டில் ஈடுபட்டனர் என்ற குற்றச்சாட்டில் இரு பெண்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று யாழ்ப்பாணப் பொலிஸார் தெரிவித்தனர்.

யாழ். நகரில் புடவைக் கடையொன்றில் அவர்கள் திருட்டில் ஈடுபட்டனர் என்றும், கடையிலிருந்தவர்கள் அவர்களைத் தடுத்து வைத்து பொலிஸாருக்குத் தகவல் வழங்கினர் என்றும் கூறப்படுகின்றது.

கைது செய்யப்பட்டவர்கள் 28, 32 வயதுடையவர்கள் என்றும், சுன்னாகம் பிரதேசத்தைச் சேர்ந்தவர்கள் என்றும் பொலிஸார் குறிப்பிட்டனர். (ம - ரி1)

# தகவல் அறியும் அலுவலர் வழங்கிய தகவலில் வழு

யாழ்ப்பாணம், ஏப்.12
சிறுவர்கள் காணாமல் போனமை தொடர்பாகத் தகவல் உத்தியோகத்தர் தவறான தகவகளை வழங்கியுள்ளார். தவறுக்கு வருந்துகின்றேன் என்று தெரிவித்தார் வடக்கு மாகாண நன்னடத்தை சிறுவர் பராமரிப்புச் சேவைகள் திணைக்கள ஆணையாளர் தி.விஸ்பரூபன் தெரிவித்தார்.

வடக்கு மாகாணத்தில் 2016ஆம் ஆண்டு 771 சிறுவர்கள் காணாமல் போயுள்ளனர் என்று கடந்த 9ஆம் திகதி "உதயன்" செய்தி வெளியிட்டது. தகவல் அறியும் சட்டத்தின் மூலம் பெறப்பட்ட தகவலின் அடிப்படையில் அந்தச் செய்தி வெளியிடப்பட்டது.

தகவல் அறியும் அலுவலர் வழங்கிய அந்தத் தகவல் தவறானது என்று ஆணையாளர் தெரிவித்துதார்.

"சுனாமி, போர் மற்றும் ஏனைய காரணங்களால் 2009ஆம் ஆண்டு முதல் 2016ஆம் ஆண்டு வரை காணாமல் போக எமது திணைக்களத்தில் பதிவு செய்யப்பட்டவர்களின் விவரங்களே அவை." - என்று ஆணையாளர் குறிப்பிட்டார். (ம -5)

# தீ விபத்தால் கடை நாசம்



மன்னார், ஏப்.12
மன்னார், பஸார் பகுதியில் உள்ள சந்தை வியாபாரக் கட்டடத் தொகுதியில் அமைந்துள்ள பல்பொருள் விற்பனை நிலையத்தில் நேற்றுமுன்தினம் தீ விபத்து ஏற்பட்டுள்ளது. விபத்தில் பெறுமதியான பொருள்கள் எரிந்து நாசமாகியுள்ளன என்று கூறப்படுகின்றது.

நேற்றுக் காலை அந்தப் பகுதியில் உள்ள வர்த்தகர் ஒருவர் தனது கடையைத் திறக்க முற்பட்டார். அப்போது விபத்து ஏற்பட்ட விற்பனை நிலையத்துக்குள் இருந்து புகை கிளம்புவதை அவதானித்தார். அதன் உரிமையாளருக்கு உடனடியாக அறிவித்தார். உரிமையாளர் பொலிஸாருக்குத் தகவல் கொடுத்தார்.

பொலிஸார் விற்பனை நிலையக் கதவை உடைத்துத் திறந்தனர். தீயைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தனர்.

தீ விபத்துக்கு மின் கசிவு காரணமாக இருக்கலாம் என்று கூறப்படுகின்றது. பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (ம - 56)

# வீதியை விட்டு விலகி வாகனம் விபத்து

முல்லைத்தீவு, ஏப்.12
எரு ஏற்றிச் சென்ற வாகனம் ஒன்று வீதியை விட்டு விலகி விபத்துக்குள்ளானது. சாரதி சிறு காயங்களுக்குள்ளாகியுள்ளார் என்று ஒட்டுசுட்டான் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் மதியம் நடந்துள்ளது. முல்லைத்தீவில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கிப் பயணித்த சிறியரக வாகனமே விபத்துக்குள்ளானது. சாரதியின் தூக்கக் கலக்கமே விபத்துக்கு காரணம் என்று கூறப்படுகின்றது. விபத்துத் தொடர்பாக ஒட்டுசுட்டான் பொலிஸார் விசாரணை நடத்துகின்றனர். (ம -7)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## "உண்மைக்குச் சான்றாவதே உன்னத தலைமைத்துவம்"

மீட்பின் காலத்தினூடே பயணித்து எமது பாவநிலைகள், இறை இரக்கத்தைப் பெறத் தடையான வாழ்வுப் பாதைகள் என்பவற்றிலிருந்து எம்மைப் புதுப்பித்து, புனித வாழ்வு நோக்கி மாற்றம் பெற்று அதன் உச்ச நிலையாகிய பரிசுத்த வாரத்துக்குள் கால் பதித்திருக்கும் எம்மை, உண்மைக்குச் சான்று பகரும் உன்னத வாழ்வுக்கு அழைக்கின்றார் இயேசு!

அன்று இயேசுவைக் கொலை செய்வதற்காக யூதேயாவில் உரோமை ஆளுனன் பிலாத்துவின் முன்பு நீதித் தீர்ப்புக்காகக் கையளிக்கப்படுகையில் அவரிடம் இயேசு முன்மொழிந்த வார்த்தைகள் ஆளுனனையே அச்சமுறச் செய்தன. "எனது ஆட்சி இவ்வுலக ஆட்சி போன்றது அல்ல அவ்வாறு இருந்திருந்தால் எனக்காகவும் காவலர்கள் போராடியிருப்பார்கள்" என்று இயேசு தமது ஆட்சி பற்றிக் கூறிய போது பிலாத்து "அப்படியானால் நீர் அரசன் தானா?" என்று கேட்க இயேசு "அரசன் என்று நீர் சொல்கிறீர். உண்மையை எடுத்துரைப்பதே என் பணி ; இதற்காகவே பிறந்தேன்; இதற்காகவே நான் உலகிற்கு வந்தேன். உண்மையைச் சார்ந்தவர் அனைவரும் என் குரலுக்குச் செவிசாய்க்கின்றனர்" (யோவா 18:37) என்று இயேசு உண்மையினால் ஆளப்படும் தலைமைத்துவத்தை எடுத்துரைக்கின்றார்.

சமகாலத்தில் அரசியலானாலும் கல்வித் துறையானாலும் சமூக, சமயத் துறைகளானாலும் சரி, எமக்குத் தரப்படும் தலைமைத்துவ நிலைகளை நாம் எவ்வாறு பயன்படுத்துகின்றோம் என்பதே இங்கு சிந்தனைக்குரியது. தலைமைத்துவப் பணிக்கு எம்மை அமர்த்தும்போது அதனைப் பணிவோடு நோக்குகின்றோமா? அதிகாரப் பிரயோகத்துடன் நோக்குகின்றோமா? இயேசு பிலாத்துவிடம் கூறியது போன்று "மேலிருந்து அருளப்படாவிடில் உமக்கு என்மேல் எந்த அதிகாரமும் இராது" (யோவா 19:11) என்பதினூடாக சமூதாயத்திலே பணி புரிவதற்கான அதிகாரம் இறைவனிடமிருந்தே எமக்கு அருளப்படுகின்றது என்பதை எம்மில் பலர் மறந்து அது தமது ஆற்றலினாலும் தகுதியினாலுமே கிடைத்தது என்ற தற்பெருமையில் அதனைத் தவறாகப் புரிந்து தான் தோன்றித் தனமாகப் பிரயோகின்றனர். பிலாத்து உண்மையாகிய இயேசுவையும் அவரது மறுவுலக ஆட்சியையும் புரிந்து கொள்ள முடியாதவராகவும், தனது பதவியைத் தக்கவைக்க வேண்டும் என்ற நோக்கிலும் உண்மையை நீதியைப் புறந்தள்ளும் கோழையாக மாறுகின்றான். இவ்வாறான தலைமைத்துவ ஆட்சிமுறைகள் எம்மையும் சூழ்ந்து தமது பதவியைக் காத்துக் கொள்வதற்காக உண்மை, நீதி, மனிதநேயம் என்பவற்றைக் குழிதோண்டிப் புதைக்கும் அந்த தலைமைத்துவப் பாங்குகளே இன்றைய சமுதாய நிலைகளை ஆட்சிப்படுத்துகின்றன.




எனவே இந்த நிலைகளை எம்மிலும், எம் சமூகச் சூழலிலும், இருந்து அகற்றிட இயேசுவில் விளங்கிய உண்மை, நீதி சமத்துவம், நிலையான ஆட்சி என்பவற்றை எமது தலைமைத்துவ வாழ்விலும், பின்பற்றி அநீதியைக் கண்டு மௌனிக்காது, நேர்மையை நிலைநாட்டுவதில் பின்னிக்காது வாழ்வோம். எமது தலைமைத்துவப் பண்பை பணிநோக்கிலும், சுயநலம் கருதா பிறர் நல வாழ்வுக்காகவும், பயன்படுத்த முனைவோம். இறைவனது ஆட்சி மட்டுமே என்றென்றும் எம் மத்தியில் நிலைபெறும் என்ற நம்பிக்கையில் எம் தலைவர்களும், நாமும் இறை மகிமைக்காக நன்மையைச் செய்யும் பணியில் எம் வாழ்வை அமைக்க மனமாற்றத்துடன் முன்வருவோம். உண்மையை உயிர்பெறச் செய்வோம்.

*அருட்பணி சி.யே. அன்ரனிபாலா*

### அண்மையில் உருவாக்கப்பட்ட

# விவசாயக் கிணறுகளை மீள மூடும் விவசாயிகள்

### கால்நடைகள் விழுந்து இறப்பதை அடுத்து

கிளிநொச்சி, ஏப்.12

காலபோகச் செய்கையை வறட்சியில் இருந்து காப்பாற்றுவதற்காக அமைக்கப்பட்ட விவசாயக் கிணறுகளை மீள மூடும் நடவடிக்கையில் விவசாயிகள் இறங்கியுள்ளனர். கால்நடைகள்அவற்றில்விழுந்து இறப்பதையடுத்தே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று கூறப்படுகின்றது.

கிளிநொச்சி மாவட்டத்தில் வட்டக்கச்சி, இராமநாதபுரம் பகுதிகளில் வறட்சியை அடுத்து 60 கிணறுகள் அவசர அவசரமாக அண்மையில் அமைக்கப்பட்டன. இயந்திரங்களின் உதவியுடன் பெரும் நிதிச் செலவுடன் அவை அமைக்கப்பட்டன.

பாதுகாப்பற்று அமைக்கப்பட்ட அவற்றில் விழுந்து கால்நடைகள் உயிரிழக்கின்றன என்று கால்நடை உரிமையாளர்கள் கூறுகின்றனர். கடந்த ஒரு மாத காலத்தில் மட்டும் 10க்கும் மேற்பட்ட கால்நடைகள் இவ்வாறு இறந்துள்ளன என்று அவர்கள் கவலை வெளியிட்டனர்.

"விதைப்புக் காலத்தில் ஒரு கால்நடை வயலுக்குள் புகுந்தால் அதைக் கட்டி வைத்து தமது வாழ்வாதாரம் நாசமாகின்றது என்று கூறி விவசாயிகள் தண்டம் அறவிடுகின்றனர். எமது வாழ்வாதாரம் அழிவதற்கு அவர்கள் காரணமாக இருக்கின்றனர். 10 கால்நடைகளும் ஒரே நாளில் இறக்கவில்லை. தினந்தோறும் இறக்கின்றன. விவசாயிகள் தாம் அமைத்த கிணறுகளைப் பாதுகாப்பானவையாக மாற்ற வேண்டும். அல்லது அவற்றை மூடவேண்டும்" -என்று கால்நடை உரிமையாளர்கள் தெரிவித்தனர்.

இந்தக் கோரிக்கை மாவட்டச் செயலகத்தின் கவனத்துக்குக் கொண்டு செல்லப்பட்டது. நிதிச் செலவில் அமைக்கப்பட்ட கிணறுகளை மூடுவது தகுந்த தீர்வாக அமையாது என்று மாவட்டச்செயலர் குறிப்பிட்டிருந்தார்.

மாவட்டச் செயலகம் எடுக்கும் நடவடிக்கை காலதாமதமாகும் என்று கருதிய விவசாயிகள் கிணறுகளை இயந்திரங்களின் உதவியுடன் மீள மூடும் நடவடிக்கைகளை ஆரம்பித்துள்ளனர்.

(ம -101)

## வருடாந்த இடமாற்றத்தில் வடக்குக்கு 59 தாதியர்கள்

யாழ்ப்பாணம், ஏப்.12

வருடாந்த இடமாற்றத்தின் ஊடாக வடக்கு மாகாணத்தில் 59 தாதியர்கள் கடமையேற்கவுள்ளனர். 41 பேர் மாகாணத்துக்கு வெளியே கடமைகளைப் பொறுப்பேற்கவுள்ளனர் என்று மாகாண சுகாதாரத் திணைக்களத் தகவல்கள் தெரிவித்தன. பிற மாகாணங்களில் இருந்து 37 தாதியர்கள் வடக்கில் கடமையேற்கவுள்ளனர். யாழ். போதனா வைத்திய சாலையில் இருந்து மாகாணத் திணைக்களத்துக்கு 22 தாதியர்கள் இடமாற்றலாகின்றனர்.

மாகாணத் திணைக்களத்துக்கு உட்பட்ட வைத்தியசாலைகளில் பணியாற்றும் 41 தாதியர்கள் விடுப்புப் பெற்றுச் செல்கின்றனர் என்று திணைக்களத் தகவல்கள் தெரிவித்தன.

(ம - 101)

## சட்டவிரோத மீன்பிடியைத் தடுக்க போதிய ஆளணியினர் இல்லை

### முல்லை. மாவட்ட மீனவர் அமைப்புக்கள் சுட்டிக்காட்டு

முல்லைத்தீவு, ஏப்.12

முல்லைத்தீவு மாவட்ட கடற்றொழில் வளத் திணைக்களத்தில் போதுமான ஆளணி இல்லை. மாவட்டத்தில் சட்டவிரோத தொழில் செய்வோரைக் கட்டுப்படுத்தும் திறன் திணைக்களத்துக்கு இல்லை.

இவ்வாறு மாவட்ட மீனவர் அமைப்புகள் கூறுகின்றன.

"முல்லைத்தீவு மாவட்டத்தில் சட்டவிரோத மீன்பிடி நடவடிக்கைகள் நாளுக்கு நாள் அதிகரிக்கின்றன. அவற்றைக்கட்டுப்படுத்த திணைக்களத்தினர் நடவடிக்கை எடுக்கின்றபோதும் அவற்றைமுழுமையாகக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வர முடியவில்லை. கொக்கிளாய், நாயாறு பகுதிகளில் சட்டவிரோத மீன்பிடி அதிகம் காணப்படுகின்றது. அவை தொடர்பான நீண்ட நாள்களாகச் சுட்டிக்காட்டுகின்றபோதும் அவற்றைக் கட்டுப்படுத்த எடுக்கும் நடவடிக்கைகள் போதுமானதாக இல்லை. திணைக்களத்தில் போதுமான ஆளணி இல்லை." என்று அந்த அமைப்புகள் சுட்டிக்காட்டுகின்றன.

"எம்மிடம் உள்ள உத்தியோகத்தர்களைக் கொண்டு சட்டவிரோத மீன்பிடி நடவடிக்கைகளைத் தடுக்கின்றோம். கடந்த ஆண்டு 150க்கும் மேற்பட்ட சட்டவிரோத மீன்பிடி நடவடிக்கைகளைத் தடுத்துள்ளோம். அவர்களுக்கு எதிராகச் சட்ட நடவடிக்கையும் எடுக்கப்பட்டுள்ளது. ஆளணி போதுமானதாக இல்லைஎன்பது உண்மையே. எனினும் நாம் எமது கடமைகளை முன்னெடுத்து வருகின்றோம்." என்று முல்லைத்தீவு மாவட்ட கடற்றொழில் நீரியல் வள உதவிப் பணிப்பாளர் தெரிவித்தார்.

(ம - 7)

## பனை சார் உற்பத்திகளை மேம்படுத்த உபகரணங்கள்

### வழங்கும் நிகழ்வு இன்று

யாழ்ப்பாணம், ஏப். 12

பனை சார் உற்பத்தியை மக்களிடையே மேம்படுத்தும் நோக்கில் தொழிற்றிறன் பயிற்சியளிப்பினூடாக உபகரணம் வழங்கும் நிகழ்வும் பனை ஆராய்ச்சி முடிவுகளின் தொகுப்பு நூலான பொறாயஸ் நூல் வெளியீடும் இன்று பனை அபிவிருத்தி சபையின் ஏற்பாட்டில் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியில் மு.ப. 10.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு புனர்வாழ்வளிப்பு, மீள்குடியேற்றம் மற்றும் இந்துமத அலுவல்கள் அமைச்சின் வாழ்வாதாரத் திட்ட நிதியில், பனங்கிழங்கு உற்பத்தியாளர்களுக்கான உபகரணங்கள், பனை தென்னைவள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களுக்கு பனங்களி உற்பத்திக்கான உபகரணங்கள், பனங்கள் போத்தலில் அடைக்கும் உற்பத்திக்கான பொறித் தொகுதி, பனை வெல்ல உற்பத்திக்கான பொறித்தொகுதி, பனந்தொழில் வல்லுநர்களுக்கு பனஞ்சாற்று உற்பத்திக்கான உபகரணங்கள் என்பன பனங் கைப்பணி உற்பத்தியில் இணைந்துள்ள வடமாகாண பெண்களுக்கு பனங்கைப்பணி உற்பத்திக்கான உபகரணங்கள் ஆயிரத்து 500 உற்பத்தியாளர்களுக்கு வழங்கப்படவுள்ளன.

நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு புனர்வாழ்வளிப்பு, மீள்குடியேற்றம் மற்றும் இந்துமத அலுவல்கள் அமைச்சர் டி.எம். சுவாமிநாதனும், மதிப்புறு விருந்தினராக நாடாளுமன்ற உறுப்பினரும், சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சின் மேற்பார்வைக் குழுவின் உறுப்பினருமான ஈ.சரவணபவனும், சிறப்பு விருந்தினராக யாழ்ப்பாண மாவட்டச் செயலர் நா.வேதநாயகனும், சிவன் பவுண்டேசன் நிறுவன இயக்குநர் வே.கணேஸ்வரனும், வடக்கு மாகாண தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத் தலைவர் நா.கணேசனும் கலந்து கொள்ளவுள்ளனர்.

(ம - 10)

## 741 ஹெக்ரேயர் நிலப்பரப்பில் யாழில் புகையிலைச் செய்கை

யாழ்ப்பாணம், ஏப்.12

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் 741.615 ஹெக்ரேயர் நிலப்பரப்பில் புகையிலைப் பயிரிடப்பட்டுள்ளது என்று மதுவரித்திணைக்களத்தின் வடமாகாணப் பொறுப்பதிகாரி சோதிநாதன் தெரிவித்தார்.

அவர் தெரிவித்தாவது:

யாழ்ப்பாணத்தில் 741.615 ஹெக்ரேயர் நிலப்பரப்பில் ஆயிரத்து 956 விவசாயிகள் புகையிலைச் செய்கையை மேற்கொண்டுள்ளனர். ஊர்காவற்றுறையில் 331 விவசாயிகள் 104.69 ஹெக்ரேயரிலும், வேலணையில் 231 விவசாயிகள் 92.85 ஹெக்ரேயரிலும், நல்லூரில் 40 விவசாயிகள் 92.85 ஹெக்ரேயரிலும், சங்கானையில் 64 விவசாயிகள் 25.1 ஹெக்ரேயரிலும், சண்டிலிப்பாயில் 16 விவசாயிகள் 2.675



ஹெக்ரேயரிலும், உடுவிலில் 420 விவசாயிகள் 102.5 ஹெக்ரேயரிலும், தெல்லிப்பழையில் 50 விவசாயிகள் 3.75 ஹெக்ரேயரிலும், கோப்பாயில் 271 விவசாயிகள் 35.7 ஹெக்ரேயரிலும், கரவெட்டியில் 188 விவசாயிகள் 299.275 ஹெக்ரேயரிலும், பருத்தித்துறையில் 232 விவசாயிகள் 39.425 ஹெக்ரேயரிலும், சாவகச்சேரியில் 113 விவசயிகள் 24.15 ஹெக்ரேயரிலும் புகையிலைச் செய்கையை மேற்கொள்கின்றனர்.

யாழ்ப்பாணத்தில் 27 ஆயிரத்து 952 குடும்பங்கள் விவசாயத்தில் ஈடுபடுகின்றன. அவற்றில் 3 ஆயிரத்து 35 குடும்பங்கள் புகையிலைச் செய்கையில் ஈடுபடுகின்றனர். 10.87 வீதத்தினர் புகையிலைச் செய்கையில் ஈடுபட்டுள்ளனர். என்றார்.

எதிர்வரும் 2020 ஆம் ஆண்டுக்குள் புகையிலைச் செய்கை முற்றாகத் தடை செய்யப்படும் என்று உலக சுகாதார ஒன்றியத்திடம் இலங்கை உறுதியளித்துள்ளது. புகையிலைச் செய்கையில் ஈடுபடுவோரை மாற்றுப் பயிர்ச் செய்கையில் ஊக்குவிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

(ம - ரி1)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## சூழலை மாசுபடுத்தும் வாகனங்களின் விவரங்களை அறிவிக்குமாறு கோரிக்கை

கொழும்பு, ஏப். 12

சீரான பராமரிப்பு இன்றி அதிகளவில் புகையை வெளியேற்றி சூழலை மாசடையச் செய்யும் வகையில் செலுத்தப்படும் வாகனங்கள் தொடர்பான விவரங்களை உடனடியாகத் தெரியப்படுத்துமாறு பொதுமக்களிடம் மோட்டார் போக்குவரத்து ஆணையாளர் திணைக்களம் கோரிக்கை விடுத்தது.

முறைப்பாடுகளை 0113 100152 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொண்டு அறியத் தரலாம்.

கிடைக்கப்பெறும் முறைப்பாடுகளின் அடிப்படையில் குறிப்பிட்ட வாகனங்களைச் சோதனையிடுவதற்காக வாகனப் புகைப் பரிசோதனை நிலையங்கள் இரண்டு இயக்கப்படவுள்ளன என்றும் திணைக்களத்தால் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஜ-10)

# இலஞ்சம் வாங்கும் கல்வி அதிகாரிகளுக்கு எதிராக வருகிறது சட்டம்

கொழும்பு, ஏப். 12

லஞ்சம் பெற்றனர் என்று குற்றஞ்சாட்டப்படும் கல்வி அதிகாரிகளுக்கு எதிராகப் புதிய சட்டங்களைக் கொண்டு வருவதற்குக் கல்வியமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது.

அதேவேளை நடைமுறையிலுள்ள சட்ட திட்டங்களைக் கடுமையாக நடைமுறைப்படுத்துவதற்குத் தேவையான பணிப்புரைகள் விசாரணை அதிகாரிகளுக்கு வழங்கப்பட்டுள்ளன.

இவ்வாறு இராஜாங்க கல்வியமைச்சின் செயலாளர் திஸ்ஸ ஹேவாவிதாரண தெரிவித்தார்.



அவர் மேலும் தெரிவித்ததாவது;

கல்வி அதிகாரிகளின் முறைகேடுகள் தொடர்பில் முன்னெடுக்கப்படும் சுற்றிவளைப்புகள் மேலும் விரிவாக்கப்படவுள்ளன. இதற்காக புதிய விசாரணை அதிகாரிகளை இணைத்து, பயிற்சிகள் அளிக்கப்பட்டுள்ளன. பாடசாலைகளில் தரம் ஒன்றுக்காகப் புதிய மாணவர்களைச் சேர்த்துக் கொள்ளும் நடவடிக்கைகளின் போது, இலஞ்சம் பெற்றுக் கொண்ட சம்பவங்களே அதிகளவில் பதிவாகியுள்ளன.

இந்தச் சம்பவங்கள் குறித்து ஏற்கனவே விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. எதிர்காலத்தில் கல்வி அதிகாரிகள் மத்தியில் கொள்கை ரீதியான மாற்றத்தை ஏற்படுத்துவதற்கான பயிற்சித் திட்டமொன்றையும் ஆரம்பிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.- என்றார். (ஜ-10)

## மனைவி கொலை: கணவனை நாடு கடத்த கனேடிய அரசு உத்தரவு

கொழும்பு, ஏப். 12

தனது மனைவியைக் கொலை செய்தார் என்ற குற்றச்சாட்டுக்கு உள்ளாகியுள்ள தமிழரை நாடு கடத்துமாறு கனேடியக் குடிவரவு மற்றும் அகதிகள் சபை உத்தரவிட்டுள்ளதாகக் கனேடிய ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

இவ்வாறு குற்றஞ்சாட்டப்பட்டுள்ள சிவலோகநாதன் தனபாலசிங்கம், இந்தத் தீர்ப்புக்கு எதிராக மேன்முறையீடு செய்ய முடியும். இதனால் அவரை நாடு கடத்தும் உத்தரவை நடைமுறைப்படுத்தக் காலம் செல்லும் என்றும் அந்தச் செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

2012 ஆம் ஆண்டு அனுஜா என்பவரது சடலம் குடி யிருப்பு ஒன்றில் கண்டு பிடிக்கப்பட்டமையை அடுத்தே, சிவலோக நாதன் தனபால சிங்கம் கைது செய்யப்பட்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஜ-10)

# மருத்துவ அதிகாரிகள் சங்கம் மீது ராஜித, கிரியெல்ல கடும் காய்ச்சல்

கொழும்பு, ஏப். 12

இலங்கை அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் பணிப்புறக்கணிப்புக்கு எதிராக அரசின் முக்கிய அமைச்சர்களான ராஜித சேனாரத்ன மற்றும் லஷ்மன் கிரியெல்ல ஆகியோர் கடுமையான கருத்துக்களை முன்வைத்துள்ளனர்.

நெடுஞ்சாலைகள் மற்றும் உயர்கல்வி அமைச்சர் லஷ்மன் கிரியெல்ல கொழும்பிலுள்ள ஆங்கில ஊடகமொன்றுக்கு வழங்கிய செவ்வியில் தெரிவித்ததாவது.

"மாலபே மருத்துவக் கல்லூரியில் பட்டம் பெற்ற மருத்துவப் பட்டதாரிகளைப் பதிவு செய்வது தொடர்பான விடயத்தில் இலங்கை மருத்துவப் பேரவையுடன் கலந்துரையாடி நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது. அரச வைத்திய அதிகாரிகள் சங்கம், வெறுமன ஒரு தொழிற்சங்கம் மாத்திரமே. இந்த விடயத்தில் (சைட்டம் விடயத்தில்) தலையிடுவதற்கு அவர்களுக்கு எந்தவொரு உரிமையும் இல்லை."என்றார்.

அலரிமாளிகையில் நேற்று நடைபெற்ற நிகழ்வில் பங்கேற்று உரையாற்றிய சுகாதார அமைச்சர் ராஜித சேனாரத்ன தெரிவித்தாவது.

"சில சுகாதார தொழிற்சங்கங்கள் மேற்கொண்ட அநாகரிகமான செயற்பாடுகளால் சுகாதாரத்துறை கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளது. அரசைக் கவிழ்ப்பதற்கு அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தினர் முயற்சிப்பார்களாயின், அவர்களுக்கு எதிராகக் கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும். சில சுகாதார தொழிற்சங்கத்தினரின் நடவடிக்கையால் நோயாளர்களின் உடல்நிலைக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது.

சுகாதாரப் பிரச்சினைகள் தொடர்பில் பேச்சுக்களை மேற்கொள்வதற்காகப் பணிப்புறக்கணிப்பில் ஈடுபடுவது ஒழுக்கக்கேடானது." - என்றார்.

இலங்கையிலிருந்து மருத்துவப் பட்டப்படிப்பை மேற்கொள்ளக் கூடிய ஒரே ஒரு கல்லூரியான மாலபே மருத்துவக் கல்லூரியை மூட வேண்டும் அல்லது தேசியமயமாக்க வேண்டும் என்று வலியுறுத்தி அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் கடந்த வெள்ளிக்கிழமை முதல் பணிப்புறக்கணிப்பை மேற்கொண்டுள்ளது.

எவ்வாறாயினும் இவ்வாறான விடயங்களில் அரச மருத்துவ அதிகாரிகளின் சங்கத்தின் பங்குபற்றுதல் இதற்கு முன்னைய நீதிமன்றத் தீர்ப்புக்களில் அங்கீகரிக்கப்பட்டுள்ளன. மாலபே மருத்துவ கல்லூரி விடயத்திலும் அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தின் தலையீடு சர்ச்சைக்குரிய ஒன்று அல்ல.

"நொவில் பெர்ணாண்டோ போதனா வைத்தியசாலையைச் சுகாதார அமைச்சின் கீழ் கொண்டுவருவதற்குப் பதிலாக மாலபே மருத்துவக் கல்லூரியைத் தேசிய மயப்படுத்த வேண்டும் "என்று அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் செயலர் நவீன் டி சொய்சா தெரிவித்தார். (ஜ-10)

## பண்டிகைக் காலத்தில் குடிபோதையில் வாகனம் செலுத்துவோருக்குச் சிக்கல்


கொழும்பு, ஏப். 12

பண்டிகைக் காலத்தில் குடிபோதையில் வாகனம் செலுத்துவோரைச் சட்டத்தின் பிடியில் சிக்க வைப்பதற்குச் சிறப்பு வேலைத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படும் என்று கொழும்பு தேசிய வைத்தியசாலையின் அவசர விபத்துப் பிரிவின் பணிப்பாளர் திருமதி மருத்துவர் சமித்தி சமரக்கோன் தெரிவித்தார். பண்டிகைக் காலத்தில் விபத்துக்கள் அதிகரித்துச் செல்வதே வழமையாகவுள்ளது. பட்டாசுப் பாவனை பண்டிகைகளின் போது ஏற்படக்கூடிய விபத்துக்கள், வாகன விபத்துக்களைத் தவிர்த்தல் என்பன குறித்துக் கவனம் செலுத்த வேண்டும் என்று மக்களுக்கு அறுவுறுத்தப்பட்டுள்ளது.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது;

"சிறு பிள்ளைகள் பட்டாசுகளைப் பயன்படுத்தும் போது, பெற்றோர் கூடுதல் கவனம் செலுத்த வேண்டும். பிள்ளைகள் பட்டாசைப் பயன்படுத்த இடமளிக்காமல் இருப்பது நல்லது. ஒவ்வொரு புத்தாண்டுக் காலப் பகுதியிலும் இதுதொடர்பில் ஊடகங்கள் வாயிலாக மக்களுக்குத் தெளிவுபடுத்தப்படுகின்ற போதிலும் இன்னமும் முன்னேற்றகரமான பிரதிபலனைப் பெற்றுக்கொள்ள முடியவில்லை. பண்டிகைக் காலத்தில் சிகிச்சை அளிப்பதற்காக அவசர விபத்துப் பிரிவு, சிறப்பு வேலைத்திட்டமொன்றும் நடைமுறைப்படுத்தும் - என்றார். (ஜ-10)

## மரண அறிவித்தல்



### சிவஞானசுந்தரம் சிவச்சந்திரன்

மிருசுவில் வடக்கைப் பிறப்பிடமாகவும் ஜேர்மனி Munster ஐ வசிப்பிடமாகவும் கொண்ட சிவஞானசுந்தரம் சிவச்சந்திரன் 04.04.2017 செவ்வாய்க்கிழமை ஜேர்மனியில் அகால மரணமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற சிவஞானசுந்தரம் - இராசேஸ்வரி தம்பதிகளின் அன்பு மகனும், குமாரசாமி (முன்னாள் கிராம சேவையாளர்), ஆனந்தேஸ்வரி தம்பதிகளின் அன்பு மருமகனும், கார்த்திகா அவர்களின் பாசமிகு கணவரும், பிரவீன், அர்வின், அஸ்வி ஆகியோரின் அன்புத் தந்தையும், கமலாட்சியின் பாசமிகு பெறாமகனும், காலஞ்சென்றவர்களான சிவசோதி, சிவரஞ்சன், சிவசேரன், சிவதீசன் மற்றும் சிவகாந்தன், சிவகாந்தினி, சிவசாந்தினி (ஜேர்மனி), சிவகலா, சிவநேசன், சிவராகினி (இத்தாலி), சிவேந்திரன், சிவகெங்கா (ஆசிரியை யா/எழுதுமட்டுவாழ் ஸ்ரீ கணேஷ வித்தியாலயம்), சிவநந்தினி ஆகியோரின் அன்பு சகோதரனும், ஜீவிதா, கருணாகரன், ராஜன் (ஜேர்மனி), ஜெயசுதா, ராஜலிங்கம் (இத்தாலி), ரேவதி (ஆசிரியை யா/மட்டுவில் கமலாசனி வித்தியாலயம்), ரமேஸ்வரன் (கொழும்பு), ரேணுகா - ரகுவிந்தன் (சுவிஸ்), பிரகாஸ் - நிருஷா (அவுஸ்ரேலியா), சுவாதிகா - ஸ்ரீசங்கர், ரோகினி - கேதிகா (அவுஸ்ரேலியா) ஆகியோரின் மைத்துனரும், துளசிகா, துலக்ஷன், பவதரன், கிருசாந், ரஞ்சீத், றோகித் ஆகியோரின் சித்தப்பாவும், விதுஷன், சார்மிகா, பிரதீஸ், பிரியந்த், பிரிஷா, சிந்துஜா, நிகாஷ் ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று 12.04.2017 புதன்கிழமை ஜேர்மன் நேரம் 2 மணியளவில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: சிவஞானசுந்தரம் குடும்பத்தினர்.

077 512 1981

கார்த்திகா (மனைவி) +49 251 798 4581

சாந்தினிராஜன் (சகோதரி) +49 17 6811 77510

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பன்னாட்டின் அழுத்தம் இலங்கை மீது இல்லை

## பிரதி அயலுறவுத்துறை அமைச்சர் தெரிவிப்பு



கொழும்பு, ஏப். 12

பன்னாட்டுச் சமுகம் இலங்கை மீது அழுத்தங்கள் எதனையும் பிரயோகிக்கவில்லை. சில சிங்கள , தமிழ்க் கடும்போக்காளர்களே இனவாதத்தை விதைக்கும் முயற்சிகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

இவ்வாறு பிரதி அயலுறவுத்துறை அமைச்சர் ஹர்ஸ டி சில்வா தெரிவித்தார். கொழும்பில் அண்மையில் நடைபெற்ற நிகழ்வொன்றிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

நல்லிணக்கத்தை ஏற்படுத்தும் முனைப்புக்கள் இலகுவானதல்ல. காணாமல் ஆக்கப்பட்டோர் அலுவலகமும் விரைவில் உருவாக்கப்படும். நல்லிணக்கத்தைக் கூடிய விரைவில் எட்டும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. ஜனநாயக நெறிமுறையில் அரசு நடவடிக்கைகளை எடுத்து வருகின்றது. பன்னாட்டுச் சமுகம் இலங்கை மீது அழுத்தங்கள் பிரயோகிக்கவில்லை.

சில சிங்கள , தமிழ் கடும்போக்காளர்கள் இனவாதத்தை விதைக்கும் முயற்சிகளில் ஈடுபட்டு வருகின்றனர். நல்லிணக்கத்தைச் சீர்குலைக்க வேண்டும் என்ற முனைப்புக்களில் அவர்கள் ஈடுபட்டு வருகின்றனர்-என்றார். (ஐ-10)

# புதிய அரசமைப்புக்கு அரசு - கூட்டமைப்பு திரைமறைவில் முயற்சி

## ஜீ.எல்.பீரிஸ் குற்றச்சாட்டு

கொழும்பு, ஏப். 12

"புதிய அரசமைப்புத் தொடர்பில் உடன்பாடு எட்டப்பட்டுள்ளதாகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் தெரிவித்துள்ளார். அவ்வாறான உடன்பாடு எதுவும் எட்டப்பட்டுள்ளதாக எமக்குத் தெரியவில்லை.

அரசு, தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் இணைந்து திரைமறைவில் புதிய அரசமைப்பைக் கொண்டு வருவதற்கு முயற்சிக்கின்றது"

இவ்வாறு முன்னாள் அயலுறவுத்துறை அமைச்சர் ஜீ.எல். பீரிஸ் தெரிவித்தார். உத்தேச அரசமைப்புத் தொடர்பாக அரசு முன்னெடுக்கும் நடவடிக்கை தொடர்பில் கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:



"நாட்டில் எழும் பிரச்சினைகளுக்கு அரசு தீர்வுகளை முன்வைப்பதாகத் தெரியவில்லை. மாறாகத் தமக்குத் தேவையான விடயங்களைத் திரைமறைவில் முன்னெடுத்துச் செல்கின்றனர்.

இதனைமக்கள்ஆணையை மீறும் செயற்பாடாகவே நோக்க வேண்டியுள்ளது. ஆட்சியைக் கொண்டு நடத்துவதற்குப் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்ப முடியாத நிலைக்கு அரசு தள்ளப்பட்டுள்ளது. அதனால் தேசிய வளங்களை விற்பனை செய்தாவது ஆட்சியைக் கொண்டு நடத்துவதற்கு அரசு முற்படுகிறது.

இவ்வாறான நடவடிக்கை மூலம் தமக்கான மக்கள் ஆதரவு குறைவடைந் துள்ளதையும் அரசு அறிந்து கொண்டுள்ளது.

அதனால் தான் அரசு தேர்தலைநடத்தாது தொடர்ந்தும் காலம் தாழ்த்திக்கொண்டு செல்கிறது. உள்ளூராட்சி சபைத் தேர்தல் நடத்தப்படாமையால், உள்ளூராட்சி சபைகளின் கட்டமைப்புச் சீர்குலைந்துள்ளது-என்றார். (ஐ-10)

# அம்பாந்தோட்டைத் துறைமுக உடன்பாட்டில் மேலும் திருத்தங்கள்

அம்பாந்தோட்டைத் துறைமுகத்தைச் சீன நிறுவனத்துக்குக் குத்தகைக்கு வழங்கும் உடன்பாட்டில் மேலும் பல திருத்தங்கள் முன்வைக்கப்பட்டிருப்பதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

அம்பாந்தோட்டைத் துறைமுகத்தின் 80 வீதப் பங்குகளைச் சீன நிறுவனத்துக்குக் குத்தகைக்கு வழங்க இலங்கை அரசு இணங்கியிருந்தது. நீண்ட காலத்துக்கு, அதிகளவு பங்குகளைச் சீன நிறுவனத்துக்கு வழங்குவதற்கு அரசுக்குள் எதிர்ப்புகள் தோன்றியுள்ளன. இதனால் இந்த உடன்பாடு கையெழுத்திடப்படுவதில் இழுபறி ஏற்பட்டுள்ளது.


அமைச்சர் சரத் அமுனுகம தலைமையில் அமைக்கப்பட்டுள்ள மூன்று பேர் கொண்ட அமைச்சரவை உபகுழு இதுதொடர் பான உடன்பாட்டை மீளாய்வு செய்யும் நடவடிக்கையில் இறங்கியுள்ளது.

குத்தகைக் காலத்தை 99 ஆண்டுகளில் இருந்து 50 ஆண்டுகளாகக் குறைக்க வேண்டும் என்று பரிந்துரை முன்வைக்கப்பட்டுள்ளது. அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவும், குத்தகைக் காலத்தை 50 ஆண்டுகளாகக் குறைக்கவேண்டும் என்ற நிலைப்பாட்டிலேயே இருப்பதாகக் கூறப்படுகிறது.

துறைமுகத்துக்கு இலங்கைக் கடற்படையேபாதுகாப்புஅளிக்கவேண்டும். அங்கு இலங்கைக்கடற்படைத்தளம்ஒன்றுஅமைக்கப்படவேண்டும் என்றும் ஒரு திருத்த யோசனை முன்வைக்கப்பட்டுள்ளது.

மூல வரைவின் படி, 80 வீதப் பங்குகளை வழங்குதற்குப் பதிலாக, 60 வீதப் பங்குகளையே சீன நிறுவனத்துக்கு வழங்க வேண்டும் என்றும் வலியுறுத்தப்பட்டுள்ளது. இந்த யோசனைகள் தற்போது கலந்துரையாடப்பட்டு வருவதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன. (ஐ-10)

LG
Life's Good
அறிவித்தல்



எச்சரிக்கையாக இருங்கள்!
LG வழங்கும் செய்தி

ஆன்லைன் வாயிலாக மற்றும் ஏனைய இடங்களில் வளிச்சீராக்கியை வாங்கும் போது எச்சரிக்கையாக இருக்கவும். வளிச்சீராக்கியின் கண்டென்சர் கொப்பர் அல்லது அலுமினியம் என்பதனை உறுதிசெய்திடவும்.

குறைந்த ஈரப்பதமுடைய நாடுகளுக்கு அலுமினியம் கண்டென்சர்களைக் கொண்ட LG வளிச்சீராக்கிகளே மிகவும் பொருந்தும். ஆனால் இலங்கையின் காலநிலைகள் அதிக உப்பும், அதிக ஈரப்பதமும் கொண்டவையாகும். அதனால் இலங்கை காலநிலையில் அலுமினியம் கண்டென்சர்கள் குறுகிய காலத்தில் மீளமைக்க முடியாத வகையில் விரைந்தழிந்து போகின்றன.

உள்நாட்டு சந்தைகளில் அதிக விலைகளுக்கு கிடைக்கும் போலி உதிரிப்பாகங்களை மாற்றீடு செய்வதால் உங்கள் வளிச்சீராக்கியின் செயல்திறன் முடக்கப்படுகின்றது.

இலங்கையின் காலநிலைகளுக்கு ஏற்றவகையில் நீடித்துழைக்கும் கொப்பர் கண்டென்சர்களைக் கொண்ட அசல் LG வளிச்சீராக்கிகளை இலங்கையில் LG வளிச்சீராக்கிகளுக்கான அங்கீகாரம் கொண்ட ஒரேயொரு ஏக முகவரான அபான்ஸில் மட்டுமே உங்களுக்குப் பெற்றுக்கொள்ள முடியும். LG வளிச்சீராக்கிகளுக்கு தேவையான PCB, தெர்மோஸ்டாட்ஸ் மற்றும் கண்டென்சர் உள்ளிட்ட அசல் உதிரிப்பாகங்கள் அபான்ஸில் மட்டுமே கிடைக்கின்றது.

அபான்ஸ் காட்சியறைகள், அங்கீகாரம் பெற்ற முகவர்கள் மற்றும் அபான்ஸ் நிறுவனத்தின் அதிகாரப்பூர்வ இணையதளமான www.buyabans.com தவிர்ந்த வேறு இடங்களில் கொள்வனவு செய்யும் LG வளிச்சீராக்கிகளுக்கான பழுதுபார்த்தல் மற்றும் கண்டென்சர் மாற்றீடுகளுக்கான பொறுப்பை அபான்ஸ் ஏற்காது.

LG இலெக்ட்ரோனிக் Inc
தென்கொரியா

# மூன்றாவது தடவையும் பதவிக் காலத்தை நீடிக்குமாறு கிரிசாந்த டி சில்வா கோரிக்கை

கொழும்பு, ஏப். 12

இலங்கை இராணுவத் தளபதி லெப். ஜெனரல் கிரிசாந்த டி சில்வா மூன்றாவது தடவையும் தனது பதவிக்காலத்தை நீடிப்பதற்கான கோரிக்கையை, அரச தலைவரிடம் விடுத்துள்ளார் என்று ஆங்கில ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

அதில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:

இலங்கை இராணுவத் தளபதி லெப். ஜெனரல் கிரிசாந்த டி சில்வாவின் தற்போதைய பதவிக்காலம் எதிர்வரும் ஓகஸ்ட் மாதத்துடன் நிறைவடைகிறது. 2015 ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் 21 ஆம் திகதி, 55 வயதை எட்டிய அவர், ஓய்வு பெற்றிருக்க வேண்டும்.

ஆனால், முதலில் அவருக்கு ஆறு மாதங்களுக்கும், பின்னர் ஒன்றரை வருடங்களுக்கும் சேவை நீடிப்பு வழங்கப்பட்டன. அவருக்கு மீண்டும் ஆறு மாதங்கள் சேவை நீடிப்பு வழங்கப்பட்டால், மூன்றாவது சேவை நீடிப்பைப் பெற்ற இராணுவத் தளபதியாக அவர் விளங்குவார்.

இராணுவத் தளபதிப் பதவியைக் குறிவைத்திருக்கும் பல மூத்த மேஜர் ஜெனரல்களின் கனவு, இதனால் நொருங்கிப் போகும். இவர்களில் மேஜர் ஜெனரல் பொனிபஸ் பெரேரா முக்கியமானவர். இவர் எதிர்வரும் டிசெம்பர் மாதம் 3 ஆம் திகதி ஓய்வு பெற வேண்டிவரும். இவரையடுத்து. மேஜர் ஜெனரல்கள் சுதந்த ரணசிங்க, ரேனக உடவத்த, ஆர். இரத்தினசிங்கம், பி.பிரிந்துகுலசூரிய ஆகியோரும் ஓய்வு பெற வேண்டியிருக்கும்.



2018 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 13 ஆம் திகதி முன்னாள் இராணுவப் புலனாய்வுப் பணிப்பாளரான மேஜர் ஜெனரல் அமால் கருணாசேகரவும், ஓய்வு பெறநேரிடும். இராணுவத் தளபதியாக நியமிக்கப்படாது போனால், மேஜர் ஜெனரல் மகேஸ் சேனநாயக்கவும், எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் 18 ஆம் திகதியுடன் ஓய்வுபெற வேண்டியிருக்கும்.

இராணுவத் தளபதி லெப். ஜெனரல் கிரிசாந்த டி சில்வாவின் இரண்டாவது பதவி நீடிப்புக் காலத்தில், இராணுவத்தில் இருந்து 22 மேஜர் ஜெனரல்கள் ஓய்வு பெறும் நிலை ஏற்பட்டுள்ளது.

கூட்டுப்படைகளின் தளபதியாக உள்ள கோலித குணதிலக எதிர்வரும் ஜூலை மாதம் 16ஆம் திகதி ஓய்வு பெறவுள்ள நிலையில், முப்படைகளின் தளபதிகளும் அந்தப் பதவியின் மீது குறிவைத்துள்ளனர்.

கூட்டுப்படைகளின் தளபதிப் பதவி, இராணு வத் தளபதியாக உள்ள லெப். ஜெனரல் கிரிசாந்த டி சில்வாவுக்கு வழங்கப்பட்டால், அடுத்த இராணுவத் தளபதியாகும் வாய்ப்பு மேஜர் ஜெனரல் மகேஸ் சேனநாயக்கவுக்குக் கிடைக்கும் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது. (ஐ-10)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# தீர்க்கமான தீர்வு வழங்கும் வரை போராட்டம்

## காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள் உறுதி

கிளிநொச்சி, ஏப்.12

காணாமல் ஆக்கப்பட்டவர்களை வெளிப்படுத்தவும், விடுவிக்கவும் வலியுறுத்தி அவர்களின் உறவினர்கள் கிளிநொச்சியில் நடத்தும் தொடர் போராட்டம் நேற்று 51நாள்கள் கடந்தும் தொடர்ந்தது.

தமக்கு தீர்க்கமான தீர்வு கிட்டும் வரை போராட்டத்தைக் கைவிடப் போவதில்லை என்று அவர்கள் தெரிவித்தனர். போராட்டத்துக்கு பல்வேறு தரப்பினரும் ஆதரவு தெரிவித்து வருகின்றனர்.

தமக்கு உரிய தீர்வுகள் வழங்கப்படாது இழுத்தடிக்கப்படும் பட்சத்தில் போராட்ட வடிவத்தை மாற்றத் தீர்மானித்துள்ளோம் என்று அவர்கள் தெரிவித்தனர். போராட்டத்தில் ஈடுபட்டுள்ளவர்களுக்குப் பாதிப்புகள் ஏதும் ஏற்படின் சர்வதேசமும், கூட்டர சுமே பதில் கூற வேண்டும்என்றும்அவர்கள் குறிப்பிட்டனர்.

வடக்கில் வவுனியா, முல்லைத்தீவு, யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டங்களிலும் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் தொடர் போராட்டம் நடத்தி வருகின்றனர். அவர்களின் போராட்டங்களுக்கும் பல்வேறு தரப்பினர் ஆதரவு தெரிவித்து வருகின்றனர். (ற-6)

நுரைச்சோலை மின்நிலையத்தால்

## சுற்றுச் சுழலில் ஏற்படும் பாதிப்பை ஒழுங்குபடுத்த பணிப்பு

கொழும்பு, ஏப். 12

வடமேல் மாகாணத்தில் அமைந்துள்ள நுரைச்சோலை மின்னிலையத்தால் ஏற்பட்ட சுற்றுச்சூழல் பாதிப்புக்களை ஒழுங்குபடுத்தவேண்டும் என்று உயர் நீதிமன்றம் இலங்கைப் பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவைப் பணித்துள்ளது.

மின்னிலையத்தால் ஏற்பட்ட சுற்றுச்சூழல் பாதிப்பு தொடர்பான அடிப்படை உரிமை மனு மீதே இந்த முடிவு எடுக்கப்பட்டது என இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு அனுப்பிய ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டது.

அதில் உள்ளதாவது:

சாம்பல் துகள் காற்றில் பரவுதல் மற்றும் எஞ்சியிருக்கும் நிலக்கரி ஆகியவற்றால் ஏற்பட்ட சேதங்களைக் குறைக்கும் செயன்முறை ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டு விட்டதை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு நிரூபித்தது.

2016 மார்ச் மாதத்தில் இலங்கைப் பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவால் நியமிக்கப்பட்ட விற்பன்னர்கள் அடங்கிய குழு இலங்கையில் அனல் மின்னிலையங்களால் ஏற்படும் சுற்றுச்சூழல் தாக்கங்கள் பற்றிய கற்றலை ஏற்கனவே ஆரம்பித்துள்ளது. சட்டத்தால் அதிகாரமளிக்கப்பட்டவாறு இலங்கைப் பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழுவே சுற்றுச்சூழல் பிரச்சினை தொடர்பான விடயங்களை அவதானிக்கும் என உயர் நீதிமன்றம் தெரிவித்துள்ளது.

உயர் நீதிமன்றத்தின் பணிப்பின்படி இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவானது 2017 ஏப்ரல் 5 ஆம் திகதி அன்று விற்பன்னர்கள் குழுவைக் கூட்டியது. இந்தக் கூட்டத்தில் இலங்கை மின்சாரசபை, மத்திய சுற்றாடல் அதிகாரசபை, வடமேல் மாகாணசுற்றாடல் அதிகாரசபை, கடலோரப் பாதுகாப்புத் திணைக்களம் ஆகியவற்றின பிரதிநிதிகளும் பங்கேற்றனர்.

நுரைச்சோலை மின்னிலையம் என்று அழைக்கப்படும் "லக்விஜய" மின்னிலையமானது நிலக்கரியால் இயக்கப்படும் இலங்கையின் பெரிய மின்னிலையம் ஆகும். 900 எம்.டபிள்யூ சக்தியை பிறப்பிக்கும் இந்த மின்னிலையம் நாட்டின் ஒட்டுமொத்த சக்தித்தேவையில் 39 வீதத்தை முழுமை செய்கின்றது.

இந்தக் குழுவின் அடுத்த கூட்டமானது எதிர்வரும் 24 ஆம் திகதி திங்கட்கிழமை கூடவுள்ளது. இந்தக் கலந்துரையாடல்களின் முடிவுகள் இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவால் உயர் நீதிமன்றத்துக்கு அறிவிக்கப்படும். என்றுள்ளது. (ற-10)

## ஜீ.எஸ்.பி. பிளஸ் ஆய்வு மேற்கொள்ள விசேட குழு

கொழும்பு, ஏப். 12

ஜீ.எஸ்.பி. பிளஸ் வரிச்சலுகையை வழங்குவதற்கான ஆய்வை மேற்கொள்ளும் வகையில் சிறப்பு பிரதிநிதிகள் குழுவொன்று இலங்கைக்கு வந்துள்ளது என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.

நாட்டில் நிலவும் அரசியல்தன்மை, மனித உரிமைகள் மற்றும் தொழிலாளர் சட்டங்கள் உள்ளிட்ட நிலைமைகளை இவர்கள் அவதானிப்பார்கள் எனத் தெரியவருகிறது.

ஏற்கனவே பிரதிநிதிகள் சிலர் இலங்கைக்குச் சென்று கண்காணிப்புகளை மேற்கொண்டனர். அவர்களின் பரிந்துரைகளுக்கு அமைய, இலங்கைக்கு ஜி.எஸ்.பி. பிளஸ் வரிச்சலுகையை வழங்குவதற்கான ஆரம்பக் கட்ட நடவடிக்கைககள் தற்போது முன்னெடு க்கப்பட்டுள்ளன.

வரிச்சலுகை தொடர்பான சிறப்புக் கலந்துரையாடல் எதிர்வரும் 19 ஆம் திகதி பெல்ஜியத்தின் பிரசல்ஸ் நகரில் நடைபெறவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ற-10)

## வரித் திருத்தம் தொடர்பில் அறிவித்தல் இல்லை

கொழும்பு, ஏப்.12

வரவு செலவுத் திட்டத்தில் பிரேரிக்கப்பட்ட சில வரித்திருத்தங்களை நடைமுறைப்படுத்த முடியாத நிலையில் வரித் திருத்தம் தொடர்பிலான அமைச்சரவைப் பத்திரம் இதுவரை தமது திணைக்களத்துக் குக் கிடைக்கவில்லை என உள்நாட்டு இறைவரித் திணைக்களம் தெரிவித்தது.

வரவு செலவுத்திட்ட பிரேரணைகளுக்கு ஏற்ப, வருமான வரி மற்றும் பொருளாதார சேவைக் கட்டணங்களில்ஏப்ரல்மாதத்தில்திருத்தங்களை நடைமுறைப்படுத்த வேண்டும்.

2006 ஆம் ஆண்டு 10 ஆம் இலக்க வருமான வரி சட்டத்தின் படி, முதலீடுகளுக்கான வரிச்சலுகை, ஏற்றுமதிக்கான வரிச்சலுகை, மூலதன கொடுப்பனவு உள்ளிட்ட பல திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டன.

வரி தொடர்பான திருத்தங்களை நடைமுறைப்படுத்துவதற்கு, அது நாடாளுமன்றத்தில் முன்வைக்கப்பட்டு அது தொடர்பிலான சட்டமூலத்துக்கு அனுமதி பெறப்படவேண்டும். (ற-10)

## மிதிபலகைப் பயணங்களை தவிர்க்குமாறு வேண்டுகோள்

பண்டிகைக் காலத்தில் ஏற்படக்கூடிய போக்குவரத்து நெரிசலின்போது தொடருந்து மிதிபலகைகளில் பயணம் செய்வதைத் தவிர்க்க வேண்டும்என்றுதொடருந்துத் திணைக்களம்பயணிகளுக்கு அறிவுரை வழங்கியுள்ளது.

பாடசாலை விடுமுறைகள் இப்போது ஆரம்பித்திருப்பதால் பெரும்பாலானோர் தொடருந்துகளில்பிரயாணம் செய்வதில் ஆர்வம் காட்டி வருகின்றனர். அதனால்தொடருந்துகளில் நெரிசல் ஏற்படும்போது மிதிபலகைகளில் நின்றவாறே பயணம் செய்வதை வழக்கமாகக் கொண்டிருக்கின்றனர். அவ்வாறான செயல் உயிராபத்தை விளைவிக்கக்கூடியது என்பதால் மிதிபலகை பயணங்களை முற்றாகத் தவிர்க்குமாறு தொடருந்துத்திணைக்களம்பொதுமக்களுக்குவேண்டுகோள் விடுத்துள்ளது.

தொடருந்துகளில் முன்பின் அறிமுகம் இல்லாதவர்கள் தரும் உணவுகள், சிற்றுண்டிகள் மற்றும் பானங்களையும் தவிர்க்குமாறும் தொடருந்துத் திணைக்களம் வேண்டுகோள் விடுத்திருக்கிறது. (ற-10)

வீடமைப்புத் திட்டங்களுக்கு

## பார ஊர்தி உரிமையாளர்கள் மணல் அகழ்வதற்கு அனுமதி

யாழ்ப்பாணம், ஏப்.12

தேசிய வீடமைப்பு அதிகார சபையால் யாழ். மாவட்டத்துக்கு வழங்கப்பட்ட வீடமைப்புத் திட்டங்களுக்கு மணல் அகழும் அனுமதி பார ஊர்தி சங்க உரிமையாளர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது என்று தேசிய வீடமைப்பு அதிகார சபையின் யாழ். மாவட்ட பணிப்பாளர் ரவீந்திரன் தெரிவித்தார்.

மணல் அகழ்தல் தொடர்பான பிரச்சினை யாழ். மாவட்டச்செயலரின் கவனத்துக்குக்கொண்டுவரப்பட்டதை அடுத்து மணல் அகழ்வதற்கான அனுமதி தற்பொழுது வழங்கப்பட்டுள்ளது. ஒரு வாரத்தில் ஞாயிற்றுக்கிழமையைத் தவிர ஏனைய நாள்களில் பாரஊர்தி உரிமையாளர்களால் மணல் விநியோகிக்கப்படும் என்று தெரிவிக்கப்படுகின்றது. (ற-ரி)

## கொத்தியாகும்பம் பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்கு நடவடிக்கை

முல்லைத்தீவு, ஏப்.12

முள்ளியவளை, கொத்தியாகும்பத்தைச் சேர்ந்த தமிழ் பேசும் முஸ்லிம் மக்களின் காணிப் பிரச்சினைக்குத் தீர்வு எட்டப்பட்டுள்ளது.

காணிகளுக்கு அனுமதிப் பத்திரங்கள் வழங்க வேண்டும் என்று வலியுறுத்தி கொத்தியாகும்பம் மக்கள் கடந்த 12 நாள்களாகத் தொடர் போராட்டம் நடத்துகின்றனர். போராட்டம் நடைபெறும் இடத்துக்கு அமைச்சர் ரிசாத் பதியுதீன், தேசிய ஐக்கிய முன்னணியின் தலைவர் அசாத் சாலி, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிவமோகன் ஆகியோர் நேற்றுச் சென்று மக்களைச் சந்தித்தனர். இந்தச் சந்திப்புக்கு முல்லைத்தீவு மாவட்ட செயலர் ரூபவதி கேதீஸ்வரன், கரைதுறைப்பற்றுப் பிரதேச செயர் சி.குணபாலன் ஆகியோர் அழைக்கப்பட்டனர்.

77 குடும்பங்களுக்குச் சொந்தமான 38 அரை ஏக்கர் காணி வனவளத் திணைக்களத்திடம் உள்ளது என்று மாவட்ட செயலர் அங்கு குறிப்பிட்டார்.

"அந்தக் காணிகள் வனவளத் திணைக்களத்துக்குள் உள்வாங்கப்படவில்லை. வன்னியர்மேடு பகுதியில் துப்புரவாக்கப்பட்ட காணி வனவளத் திணைக்களத்துக்கு உள்வாங்கப்பட்டுள்ளது" என்று வடக்கு மாகாண சபை உறுப்பினர் ஜவாகிர் குறிப்பிட்டார்.

கொத்தியாகும்பம் காணி தொடர்பாக கரைதுறைப் பற்று பிரதேச செயலக ஆவணங்களை ஆய்வு செய்த அதிகாரிகளும். மக்கள் பிரதிநிதிகளும் காணியை மக்



களுக்கு வழங்குவதில் பெரிதாக சிக்கல்கள் இருப்பதாகத் தெரியவில்லை. காணி அரச காணி என்பதால் வடக்கு மாகாண காணி ஆணையாளரிடம் நேரில் அனுமதியை பெற்றுக் கொள்ள அமைச்சர் ரிசாத்தும், அசாத் சாலியும் நேற்றுச் சென்றனர்.

அதேவேளை, காணிகள் அளவிடப்பட்டு, அனுமதிப்பத்திரம் தருவதற்கான உறுதிமொழிகள் வழங்கப்படும் வரை போராட்டம் அமைதி வழியில் தொடரும் என்று போராட்டத்தில் ஈடுபடும் மக்கள் தெரிவித்தனர். (ற-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சோமாலியாவில் குண்டு வெடிப்பு; 13 பேர் உயிரிழப்பு

சோமாலியாவில் நேற்றுமுன்தினம் நடத்தப்பட்ட கார்க் குண்டுத் தாக்குதலில் 13 பேர் சாவடைந்தனர் என்று பன்னாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டன.

சோமாலியாவில் அரச படைகளுக்கு எதிராக அல் சகாப் ஆயுததாரிகள் போரிட்டு வருகின்றனர். இராணுவத்தை குறிவைத்து தற்கொலைப்படைத் தாக்குதல்களும், வெடிகுண்டுத் தாக்குதல்களும் அவ்வப்போது நடைபெற்று வருகின்றன.

சோமாலிய இராணுவத் தளபதி ஜிமாலி, மூத்த அதிகாரிகளுடன் பயணித்த வேளையில் அவர்களை இலக்கு வைத்தே இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டது என்று தெரிவிக்கப்படுகிறது.

பாதுகாப்புக்குச் சென்ற 5 சிப்பாய்கள், 8 பொது மக்கள் என ஒட்டுமொத்தமாக 13 பேர் உயிரிழந்தனர்.

அல் சகாப் ஆயுததாரிகள் சரணடைவதற்காக வழங்கப்பட்டுள்ள பொதுமன்னிப்புக் காலத்தில் (60 நாட்கள்) இந்தத் தாக்குதல் நடத்திருப்பது குறிப்பிடத்தக்கது. (ம)



# வடகொரியாவின் விடயத்தில் சீனா நடவடிக்கை எடுக்கும்

## டில்லர்சன் நம்பிக்கை

வடகொரியாவின் அணு ஆயுத ஏவுகணை தொடர்பாக நடவடிக்கை எடுக்க சீனா தயாராக இருப்பதாக அமெரிக்கா தெரிவித்தது.

அமெரிக்க அதிபர் ட்ரம்ப், சீன அதிபர் ஜி ஜின் பிங் இடையிலான சந்திப்பு கடந்த வாரம் புளோரிடாவில் நடைபெற்றது. இந்தச் சந்திப்பில் வடகொரியாவின் தொடர் ஏவுகணைச் சோதனை, தென் சீனக் கடல் விவகாரம், சீனா அமெரிக்க நாடுகளின் வணிகம் மற்றும் முதலீடுகள் போன்றவை ஆலோசிக்கப்பட்டது என்று இருதரப்பிலும் தெரிவிக்கப்பட்டது.

"வடகொரியாவின் தொடர் அணுஆயுத ஏவுகணை சோதனையால் ஏற்பட்டுள்ள பாதிப்பை சீன அதிபர் ஜி ஜின்பிங் நன்கு உணர்ந்துள்ளார். விரைவில் வடகொரியாவின் மீது சீனா நடவடிக்கை எடுக்கும்" என்று அமெரிக்க அயலுறவு அமைச்சர் ரெக்ஸ் டில்லர்சன் தெரிவித்தார். (ம)



# விவசாயிகள் அறப்போருக்கு பெரும் ஆதரவு

## உலக அளவில் வலுக்கிறது

புதுடெல்லி, ஏப். 12

பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி தமிழக விவசாயிகள் இந்தியத் தலைநகர் டெல்லியில் போராடி வரும் நிலையில் அவர்களின் போராட்டத்துக்கான ஆதரவு பல்வேறு நாடுகளிலும் எதிரொலிக்க ஆரம்பித்துள்ளது. இதன் முதல்கட்டமாக அமெரிக்காவில் தமிழக விவசாயிகளின் நிலைப்பாட்டை எடுத்தியம்பி ஆர்ப்பாட்டம் ஒன்று நடத்தப்பட்டது.

தேசிய, தனியார் மற்றும் கூட்டுறவு வங்கிகளில் விவசாயிகள் பெற்றுள்ள பயிர்க்கடன்கள் அனைத்தையும் தள்ளுபடி செய்வது, வறட்சி நிவாரணம் வழங்குவதில் சிறு பெரு விவசாயிகள் என வித்தியாசம் காட்டாமல் ஏக்கர் ஒன்றுக்கு 25 ஆயிரம் ரூபா வீதம் அனைவருக்கும் வறட்சி நிவாரணம் வழங்குவது, விவசாயத் தொழிலாளர்களுக்கு நிவாரணம் வழங்குவது, காவிரி மேலாண்மை வாரியம் அமைத்தல், அண்டை

> இவர்களில் சிலர் நேற்றுமுன்தினம் இந்தியப் பிரதமர் அலுவலகத்துக்கு முன்பு நிர்வாணமாகப் போராட்டம் நடத்தினர். இந்த நிர்வாணப் போராட்டம் இந்தியா மட்டுமல்லாமல் உலக அளவில் கவனத்தைப் பெற்றுள்ளது.

மாநிலங்களிடமிருந்து தமிழகத்துக்கு கிடைக்க வேண்டிய நீர் உரிமைகளை நிலைநாட்டுவது, நெடுவாசலில் இயற்கை எரிவாயுத் திட்டத்துக்கு ஒப்பந்தம் போட்ட மத்திய அரசுக்கு கண்டனம், மீனவர்களின் பிரச்சினைகளுக்கு நிரந்தர தீர்வு என்பன உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து தமிழக விவசாயிகள் டெல்லியில் கடந்த மாதம் 14 ஆம் திகதி முதல் போராட்டம் நடத்தி வருகின்றனர்.

மண்டையோட்டை வைத்துக் கொண்டும், சாவு வீடு நடத்தியும், தூக்குக் கயிறுடனும், எலி மற்றும் பாம்புகளை கடித்துக் கொண்டும் இதற்கு முன்னர் போராட்டம் நடத்தி ஊடகங்கள், மக்கள், அரசியல் கட்சிகள் ஆகிய தரப்புக்களின் கவனத்தையும் ஆதரவையும் பெற்றுள்ள இவர்களில் சிலர் நேற்றுமுன்தினம் இந்தியப் பிரதமர் அலுவலகத்துக்கு முன்பு நிர்வாணமாகப் போராட்டம் நடத்தினர்.

இந்த நிர்வாணப் போராட்டம் இந்தியா மட்டுமல்லாமல் உலக அளவில் கவனத்தைப் பெற்றுள்ளது. அமெரிக்காவின் வொஷிங்டனில் உள்ள இந்தியத் தூதரகம் முன்பாக நூற்றுக்கணக்கான தமிழர்கள் இணைந்து தப்பு அடித்தும், முழக்கங்கள் எழுப்பியும் நேற்றுமுன்தினம் போராட்டம் நடத்தினர். இந்தியப் பிரதமர் மோடி, தமிழக முதல்வர் எடப்பாடி பழனிச்சாமி ஆகியோருக்கு மனு ஒன்றையும் அவர்கள் அனுப்பி வைத்தனர். (ம)

ரக்கா இ…
சிரியப் …



டமஸ்கஸ், ஏப். 1…
சிரியாவின் ரக்க…
யம் ஐ.எஸ்.ஐ.…
இருந்து சிரியட்…
என்று சிரிய இர…
ஈராக், சிரிய நா…
கைப்பற்றி அவ…
அறிவித்திருந்த…
சிரிய …லாமி…
அமைப்பின் பிடி…
இருந்தது.
ரக்காவை மீட்…
ஆரம்பத்தில் இ…
நேற்றுமுன்தின…
நிலையம் ஐ.எ…
யில் இருந்து மீட்…
அங்கு இருந்த …
னூர்திகள், பே…
வற்றை ஐ.எஸ்.…
கச் சேதமாக்கியு…
தளபாடங்கள் த…
படும் என்ற அச்…
இவ்வாறு நடந்த…
னாட்டு ஊடகங்…

# கொரியத் தீபகற்பத்தில் போர்ப் பதற்றம்

# அமெ. - வடகொரியா முறுகல் உச்சம்

பியாங்யாங், ஏப். 12

கொரியத் தீபகற்பத்தில் அதிகளவான போர்க் கப்பல்களை அமெரிக்கா குவித்து வருவதாலும், வடகொரியா தனது ஆறாவது அணுவாயுத் சோதனைக்குத் தயாராகி வருவதாலும் அங்கு போர்ப் பதற்றம் ஏற்பட்டுள்ளது என்று பன்னாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டன.

ஐக்கிய நாடுகள் சபையால் ஏற்படுத்தப்பட்டுள்ள பன்னாட்டு விதிமுறைகளை மீறி வடகொரியா அவ்வப்போது பல்வேறு ஏவுகணை மற்றும் அணுவாயுதச் சோதனைகளை நடத்தி வருகிறது. வடகொரியாவின் பரம வைரியான தென்கொரியாவுக்கு அமெரிக்கா பெரும் ஆதரவைக் கொடுத்து வருவதால் தமது ஏவுகணைச்சோதனைகளில் பெரும்பாலானவை அமெரிக்காவைத் தாக்குவதற்கே என்றும் வடகொரியா முழங்கியது. தற்போது அடுத்த அணுவாயுதச் சோதனையை வடகொரியா நடத்தவுள்ளது என்று எதிர்பார்க்கப்படும் நிலையில் விமானம் தாங்கிப் போர்க் கப்பல் உள்ளிட்ட பல்வேறு போர்க் கப்பல்களை கொரியத் தீபகற்பத்துக்கு அமெரிக்கா அனுப்பியுள்ளது.

யு.எஸ்.எஸ். வின்சன் போர்க் கப்பல் ஏற்கனவே அங்கு அனுப்பப்பட்டிருந்த நிலையில் தற்போது மேலும் சில போர்க்கப்பல்கள் கொரியத் தீபகற்பத்திலும் தென்கொரியாவிலும் நிறுத்தப்பட்டுள்ளன. இதனால் வடகொரியா - அமெரிக்கா இடையே போர்ப் பதற்றம் ஏற்பட்டுள்ளது.

சீனா, இந்த இரு நாடுகளுக்கும் இடையில் அமைதிப் பேச்சுக்கு முனைந்து வருகிறது என்றும் பன்னாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டன. (ம)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆர்.கே. தேர்தலுக்கு இன்னும் 5 மாதங்கள்

சென்னை, ஏப். 12

தமிழகம் ஆர்.கே. நகரில் இன்று நடைபெறவிருந்த இடைத்தேர்தல் கைவிடப்பட்டுள்ள நிலையில் அடுத்த தேர்தலை அங்கு நடத்த இன்னும் குறைந்தது 5 மாதங்கள் ஆகலாம் என்று இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டன.

முன்னாள் முதல்வர் ஜெயலலிதா உயிரிழந்ததை அடுத்து அவர் போட்டியிட்டு வெற்றி பெற்ற ஆர்.கே. நகரில் இன்று இடைத்தேர்தல் நடத்தப்படும் என்று அறிவிக்கப்பட்டிருந்தது. தேர்தலில் சசிகலா தரப்பில் இருந்து தினகரன் போட்டியிட்டார்.

தினகரன், ஆர்.கே. நகரில் வாக்குகளை விலைக்கு வாங்குகிறார் என்று எதிர்க் கட்சிகள் குற்றம்சாட்டின. தினகரனின் தீவிர ஆதரவாளரும், தமிழக சுகாதாரத் துறை அமைச்சருமான விஜய பாஸ்கரின் வீட்டில் ஆர். கே. நகரில் வாக்காளர்களுக்கு வழங்கப்படவிருந்த கோடிக் கணக்கான பணமும் துண்டுப்பிரசுரங்களும் அண்மையில் மீட்கப்பட்டது. இது தொடர்பில் பரிசீலித்துவந்த இந்தியத் தேர்தல் ஆணையம் ஆர்.கே. நகர இடைத் தேர்தலை கைவிட்டு நேற்றுமுன்தினம் அதிகாலை தீர்ப்பிட்டது.

எனினும் தேர்தல் எப்போது நடத்தப்படும் என்று அறிவிக்கப்படவில்லை. இந்த நிலையில் அங்கு தேர்தல் நடத்தப்பட இன்னும் 5 மாதங்கள் ஆகலாம் என்று கருதப்படுகிறது. (ம)



பிரிட்டன் நாடாளுமன்றம் அருகே கடந்த மாதம் 22 ஆம் திகதி ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பால் தாக்குதல் நடத்தப்பட்டது. இந்தத் தாக்குதலில் ஐவர் உயிரிழந்தனர். அவர்களில் பொலிஸ் உத்தியோகத்தரும் ஒருவர். அவரின் இறப்பு பிரிட்டனையே துயரத்தில் ஆழ்த்தியது. அவரது இறுதிச் சடங்குகள் நூற்றுக்கணக்கான மக்களின் பங்குபற்றலுடன் நேற்றுமுன்தினம் நடத்தப்பட்டன. (ம)

# ...ராணுவ விமான நிலையம்
# ...படையின் அதிரடியில் மீட்பு



...2

...ா இராணுவ விமான நிலை
...எஸ். அமைப்பின் பிடியில்
... படையால் மீட்கப்பட்டது
...ராணுவம் அறிவித்தது.
...டுகளின் சில பகுதிகளைக்
...ற்றை ஒரு தனிநாடு என்று
...து ஐ.எ...ஐ.எஸ். (ஈராக்
...க் ஸ்... அமைப்பு. அந்த
...யில் சிரியாவின் ரக்கா நகர்

...ம் பேர் இந்த வருடத்தின்
...ந்து நடைபெற்று வருகிறது.
...ம் ரக்கா இராணுவ விமான
...ஸ்.ஐ.எஸ். அமைப்பின் பிடி
...கப்பட்டது.
...விமானங்கள், உலங்குவா
...ார்த் தளபாடங்கள் ஆகிய
...ஐ.எஸ். அமைப்பு கடுமையா
...ுள்ளது. இந்த இராணுவத்
...மக்கு எதிராகப் பயன்படுத்தப்
...சத்திலேயே அந்த அமைப்பு
...கொண்டுள்ளது என்று பன்
...ள் குறிப்பிட்டுள்ளன. (ம)



## சீனாவில் தமிழ் புத்தாண்டு

சீனாவின் பிஜிங் நகரில் தமிழ் புத்தாண்டு விழா பெரும் எடுப்பில் கொண்டாடப்பட்டு வருகின்றது என்று பன்னாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டன. பீஜிங்கில் உள்ள தமிழர்கள் ஒன்றி ணைந்து கடந்த 2013 ஆம் ஆண்டு பீஜிங் தமிழ்ச் சங்கத்தை உருவாக்கினர். இந்த அமைப்பின் சார்பில் புத்தாண்டுக் கொண்டாட்டங்களுக்கான ஏற்பாடுகள் நேற்றுமுன்தினம் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. பல்வேறு கட்டங்களாக நடைபெற்று வரும் நிகழ்வுகளில் பீஜிங் நகரில் பணிபுரியும் தமிழர்கள், அங்குள்ள பல்கலைக்கழகங்களில் பயிலும் தமிழ் மாணவர்கள், சீன பன்னாட்டு வானொலியின் தமிழ்ப் பிரிவில் பணியாற்றும் தமிழர்கள் திரளாக கலந்துகொண்டனர் என்று செய்திகள் வெளியாகின. (ம)






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450

செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## ஜனநாயகத்தின் கேலிக்கூத்து

தமிழகத்தின் தலைநகரான சென்னையின் இராதா கிருஷ்ண நகர் (ஆர்.கே. நகர்) இடைத் தேர்தல் நிறுத்தப்பட்டுள்ளது. ஊழல், மோசடி மலிந்துபோனதால் இந்த முடிவை இந்தியத் தேர்தல் ஆணையம் எடுத்தது. குறிப்பாக வாக்குகளைக் காசு கொடுத்து வாங்க முயன்ற அரசியல்வாதிகள் ஜனநாயகத்தைக் கேலிக்கூத்தாக்கிய தன் விளைவாகத் தேர்தல் ஆணையம் இந்த அதிரடி முடிவை எடுத்தது.

தமிழக முன்னாள் முதல்வர் ஜெயலலிதா திடீரென நோய் வாய்ப்பட்டு இறந்து போனதனால் ஏற்பட்ட வெற்றிடத்திற்கே தற்போது இடைத்தேர்தல் நடத்தப்படுகிறது. ஆர்.கே. நகர் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் (அ.தி.முக) கோட்டை, இங்கு மிக் அரிதாக ஓரிரு தடவைகள்தான் திராவிட முன்னேற்றக் கழகமே (திமுக) வென்றிருக்கிறது.

அப்படியிருக்க இவ்வளவு ஊழலும், மோசடியும், பணப் பரிமாற்றமும் ஏன் என்கிற கேள்வி இயல்பானதுதான்.

ஜெயலலிதாவின் மறைவின் பின்னர் அதிமுக இரண்டாக உடைந்து போயிருப்பதுதான் இத்தனை போட்டியும் ஊழலும் அங்கு மலிந்து கிடப்பதற்கான காரணம். ஜெயலலிதாவின் பின்னர் முதலமைச்சராகப் பொறுப்பேற்ற ஓ.பன்னீர்செல்வம், கட்சியின் தற்போதைய பொதுச் செயலாளர் ந.சசிகலாவுடன் முரண்பட்டுக்கொண்டதால் கட்சி இரண்டு பட்டுள்ளது. அதனால் இந்தத் தேர்தலை எப்படியாவது வென்றுவிடவேண்டும் என்பதில் அதிமுகவின் இரு பிரிவினருக்குள்ளும் ஏற்பட்டுள்ள மோதலே ஒட்டுமொத்த கேலிக்கூத்துக்களுக்கும் காரணம்.

வருமானத்துக்கு அதிகமான சொத்துச் சேர்த்த வழக்கில் சசிகலாவுக்குச் சிறைத்தண்டனை கிடைத்தமையும், முன்னாள் முதல்வர் ஓ.பன்னீர்செல்வம் கட்சியில் பிளவை ஏற்படுத்தியமையும் ஒரே நேரத்தில் நடந்ததால், கட்சியில் தனது இடத்தைப் பாதுகாக்க, தக்கவைக்கத் தனது உறவினரான தினகரனைசசிகலாகட்சியின்துணைப்பொதுச் செயலாளர் ஆக்கினார். ஆர்.கே. நகர் தேர்தலில் வெல்வதன் மூலம் கட்சியில் தமது தரப்புப் பிடியைப் பலப்படுத்தி அதனை வசப்படுத்த முடியும் என்று தினகரன் தரப்புக் கருதுவதால் எப்படியாவது தேர்தலை வென்று விட அது முயல்கிறது. அதன் விளைவே வாக்குக்கு 4 ஆயிரம் ரூபா வரையில் லஞ்சம் கொடுக்கும் மோசடி என்கிறார்கள்.

இப்படிப்பட்ட மோசடிகள் இடம்பெறும் என்று எதிர்பார்த்து பறக்கும் படை, பார்வையாளர்கள், சிறப்புப் பார்வையாளர்கள் மற்றும் இந்திய நடுவன் அரசு அதிகாரிக் கண்காணிப்பாளர்கள், தமிழக காவல்துறை அதிகாரிகள் பலரை இடமாற்றியமை, வருவாய்த்துறை மற்றும் மாநகராட்சி அதிகாரிகள் ஆகியோரை இடமாற்றியமை என்று பல்வேறு தீவிர நடவடிக்கைகளையும் இந்தியத் தேர்தல் ஆணையம் எடுத்தது. இதற்கும் மேலாகத் தேர்தல் முறைகேடுகளில் ஈடுபட்டார்கள் என்று கூறப்படும் 82 பேரைக் கைது செய்துமிருக்கிறார்கள்.

இந்தத் தீவிர பாதுகாப்பு ஏற்பாடுகளுக்கு மத்தியிலும், அதையெல்லாம் தாண்டியும் பணம் கொடுத்து வாக்கு வாங்குவதற்கு எடுக்கப்பட்ட முயற்சிகள் நவீன தொடர்பாடல்சாதனங்கள் மூலம் ஆதாரத்தோடு நிரூபிக்கப்பட்டன. போதாததற்கு, தமிழக சுகாதாரத் துறை அமைச்சரின் வீட்டிலிருந்தும் கோடிக் கணக்கான பணத்தை அதிகாரிகள் மீட்டுள்ளனர்.

இவற்றையடுத்தே தேர்தலை இடைநிறுத்துவது என்கிற முடிவை அதிகாரிகள் எடுத்தார்கள். எனினும் இவ்வாறு மக்களின் ஜனநாயக உரிமையைக் கேலிக்கூத்தாக்கி இழிவுபடுத்தியதற்காக எவரும் இதுவரை கைது செய்யப்படவோ தண்டிக்கபடவோ இல்லை. எனினும் தேர்தல் ஆணையத்தின் இந்த முடிவு நேர்மையான, எளிமையான வேட்பாளர்களுக்கு விழுந்த பலத்த அடி என்கின்றனர் அவதானிகள். சிலர் செய்த குற்றத்துக்காகக் கூட்டுத் தண்டனையை அனைவருக்கும் எப்படி வழங்க முடியும் என்று அவர்கள் கேள்வி எழுப்புகிறார்கள்.

இதைவிட வேடிக்கை என்னவென்றால், மீண்டும் தேர்தல் அறிவிக்கப்படும்போது இப்போது தவறு செய்த வேட்பாளர்கள் அனைவரும் மீண்டும் போட்டியிடப் போகிறார்கள் என்பதுதான். அவர்களில் எவரும் தமது தவறுக்காகத் தண்டிக்கப்படமாட்டார்கள். மீண்டும் பண விநியோகம் நடைபெறாது என்பதையும் உறுதிப்படுத்த முடியாது. ஜனநாயகம் கேலிக் கூத்தாகத் தொடரப் போகிறது.

# இந்திய எதிர்ப்பைச் சமாளிக்க அரசு அவசர நடவடிக்கை

## இந்தியாவின் உதவியும் எங்களுக்குத் தேவை

### தலைமை அமைச்சர் ரணில்

## அம்பாந்தோட்டை துறைமுக ஒப்பந்தம் இன்னமும் இழுபறியில்

சண்டேரைம்ஸ் கட்டுரையில் இருந்து
ரெங்கன்



கடந்த செவ்வாய்க் கிழமை இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் உணர்ச்சி வசப்பட்டுப் போன தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க, ஒருகட்டத்தில் அமைச்சர் ஒருவரைப் பார்த்து “எங்களுக்கு இந்தியாவும் தேவைப்படுகின்றது ஓய், நாங்கள் இந்தியாவுடன் பகைத்துக் கொள்ள முடியாது ஓய்” என்று சிங்களத்தில் கோபத்துடன் கூறியுள்ளார். “ஓய்” என்று பிரதமர் பயன்படுத்தியிருந்த சொல் சற்றுமரியாதைக் குறைவான சொல்தான். நட்பு ரீதியான முறையிலும், வேறு சந்தர்ப்பங்களிலும் நிலைமைக்கு ஏற்ப இந்தச் சொல் பயன்படுத்தப்படுவதுண்டு.

பொருளாதாரத் திட்டங்களில் இணைந்து செயல்படுவதற்கான இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையிலான புரிந்துணர்வு ஒப்பந்த வாசகத்துக்கு அமைச்சரவையின் ஒப்புதல் பெற தலைமை அமைச்சர் அதனைச் சமர்ப்பித்த சமயத்தில் இந்த விதமாக அவர் கோபத்தை வெளிப்படுத்த நேர்ந்தது.

இந்த ஒப்பந்தம் ஏற்கனவே பொருளாதார முகாமைத்துவம் தொடர்பான உபகுழுவினால் அங்கீகரிக்கப்பட்டிருந்த ஒன்றுதான். திருகோணமலைத் துறைமுகத்தை அபிவிருத்திசெய்வது மற்றும் எண்ணெய்க் குதங்கள் பராமரிப்பு, எண்ணெய் சுத்திகரிப்பு நிலையம் அமைப்பதுபோன்ற இருதரப்புத் திட்டங்கள் மற்றும் கொழும்புத் துறைமுகத்தின் கடைக்கோட்டில் கொள்கலன் கட்டடங்களை அமைத்தல் போன்ற விடயங்களில் இரு நாடுகளும் இணைந்து பங்களிப்புக்களைச் செய்வது தொடர்பானது இந்தப் புரிந்துணர்வு ஒப்பந்தம்.

விளையாட்டுக்கள் துறை அமைச்சர் தயாசிறி ஜெயசேகர எழுப்பிய சில பிரச்சினைகளின் போது பிரதமர் இவ்வாறு வெகுண்டு பதிலளித்திருந்தார். வெளிநாடுகளுக்கு எமது நாட்டின் வளங்களை வழங்கும் போது நாம் மிகக் கவனமாக இருப்பது அவசியம் என்று கூறிய ஜெயசேகர, அம்பாந்தோட்டத் துறைமுகத் திட்டமானது ஏற்கனவே பிரச்சினைகளைத் தோற்றுவித்துள்ளது. அதனால் இந்தியாவுடனான ஒப்பந்தமும் அவ்வாறான நிலைமைக்கு உள்ளாகக்கூடாது என்றார். இந்தச் சமயத்தில் கோபத்துக்குள்ளான நிலையில் நாம் இந்தியா மற்றும் சீன நாடுகளுடன் நட்புறவுடன் இருக்கவே விரும்புகிறோம். எல்லா நாடுகளுடனும் சமத்துவமாகச் செயற்படுவதே ஐ.தே.கட்சியின் கொள்கை என்றும் தலைமை அமைச்சர் குறிப்பிட்டார். இந்த விடயத்தில் நாம் விட்டுக் கொடுப்புகளுக்கு இடம் தரவிரும்பவில்லை என்றார் தலைமை அமைச்சர். பெற்றோலிய வளங்கள் அபிவிருத்தியமைச்சர் சன்டிமல் வீரக்கொடி கருத்து வெளியிடுகையில் திருகோணமலை ‘சைனா பேயி’ல் பிரித்தானியரால் இரண்டாம் உலகப் போர்க்காலத்தில் நிறுவப்பட்ட எண்ணெய் சேகரிக்கும் தாங்கிகள் பதினைந்தை, இலங்கை இந்திய எண்ணெய்க்கூட்டுத்தாபனம் பொறுப்பேற்றுக் கொண்டுள்ளபோதிலும், அவைகளை மேம்படுத்த எந்தவித நடவடிக்கையும் எடுக்கவில்லையென்று குற்றஞ்சாட்டினார். வேறுநாடுகளுடன் தொடர்புகளை வைத்துக் கொள்ளாமல் கட்டுப்படுத்துவதற்கே இந்தியா இலங்கையுடன் ஒப்பந்தங்களைச் செய்கின்றது என்றார் அவர்.

பெருநகரங்கள் மற்றும் மேல் மாகாண அபிவிருத்தி அமைச்சர் பாட்டலி சம்பிக்க ரணவக்க கூறுகையில் ஒப்பந்தத்தில் கையெழுத்திடுவதற்கு முன்னராக இதில் சம்பந்தப்படும் எல்லாத்தரப்பினரோடும் கலந்துரையாடப்பட வேண்டும் என்றார்.

தொழிற்சங்கங்களும் கூட இதில் உள்ளடக்கப்பட வேண்டும் என்றார் அவர். இந்த நிலையில் இதற்காக ஏப்ரல் 25ஆம் திகதி கூட்டமொன்றை நடத்துவதற்குத் தீர்மானிக்கப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**இந்திய அயலுறவு செயலர் வருகை**

அமைச்சர்கள் விரசேகர மற்றும் வீரக்கொடி ஆகிய இருவரையும் செவ்வாய்க்கிழமை இலங்கை வரவிருந்த இந்திய வெளிவிவகாரச் செயலாளர் சுப்பிரமணியம் சிவசங்கரைச் சந்தித்து உரையாடும்படியாக தலைமை அமைச்சர் வலியுறுத்தினார். சிவசங்கரின் வருகை பரப்புரைக்கு உட்படுத்தப்படாது போனாலும் ஆசியப் பிராந்தியத்திலுள்ள ஜேர்மன் தூதுவர்களுக்கான பிராந்திய பிரச்சினைகளை ஆராய்வதற்கான கூட்டத்தில் கலந்துகொள்ளவே அவர் வருகை தரவிருந்தார். சிவசங்கர் இலங்கை அரசதலைவர் சிறிசேனமற்றும் தலைமை அமைச்சர் ரணிலுடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் தொடர்பாக விவாதித்துள்ளார். இந்திய வெளியுறவுச் செயலரைச் சந்திக்கும் முன்பதாகவே அமைச்சரவையில் ஒப்பந்தம் அங்கீகரிக்கப்பட்டுவிடவேண்டும் என்று தலைமை அமைச்சர் விரும்பியதாக இப்போது தெளிவாகியுள்ளது.

அமைச்சரவையில் சூடான விவாதம் இடம்பெற்றாலும் ஒப்பந்தத்துக்கு அமைச்சரவையின் ஒப்புதலைப் பெற்றுக்கொள்வதில் தலைமை அமைச்சர் வெற்றி கண்டார்.

அம்பாந்தோட்டை துறைமுக அபிவிருத்தியில் சீனாவுடனான ஒப்பந்தம் குறித்துஇந்தியாவின்கடும்விசனத்தை சிவசங்கர் மீண்டும் வலியுறுத்திக்கூறியிருப்பதாகத் தெரியவருகிறது.

தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கவின் இந்தியாவுடனான புரிந்துணர்வு ஒப்பந்தம் தொடர்பாக அமைச்சரவையில் விவாதம் நடைபெற்ற போது தலையீடு செய்த அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன, ஒருகட்டத்தில் இந்த மாதிரி விடயங்களில் சம்பந்தப்பட்ட அமைச்சர்கள் கலந்துகொள்ளாமல் போவதனாலேயே பிரச்சினைகள் தலைதூக்குகின்றன. எனவே விடயத்துடன் தொடர்புடைய அமைச்சர்களுடன் தொடர்பு கொள்வதும் விவாதிப்பதும்எப்போதுமே பயனுள்ளதாக விருக்கும் என்றார் சிறிசேன. விடயங்கள் கட்சித் தொடர்புடையவை அல்ல; அந்தந்த அமைச்சுடன் தொடர்புடையவை என்று கருதப்பட வேண்டும் என்று மேலும் கூறினார். அமைச்சரவையிலுள்ள ஐ.தே.கட்சி அமைச்சர்கள் பெரும்பாலும் சிறிலங்கா சுதந்திரக்கட்சி அமைச்சர்களை ஓரங்கட்டி விடுகிறார்கள் என்பதையே அரசதலைவர் இதன் மூலம் தொட்டுக்காட்டியுள்ளார். விடயங்கள்எப்பொழுதும்தேசியமட்டத்தில் வைத்துக் கணிக்கப்பட வேண்டும் என்று அவர் மேலும் சொன்னார்.

அம்பாந்தோட்டை விவகாரத்தில் பிரதான சூத்திரதாரியான அபிவிருத்தி மூலோபாயங்கள் மற்றும் பன்னாட்டு வர்த்தகத்துறை அமைச்சரான மலிக்சமரவிக்கிரம கூறுகையில் துறைமுக விவகாரங்களுக்குப் பொறுப்பான அமைச்சர் அர்ஜுன ரணதுங்கவுடன் இந்தத் திட்டம் குறித்து ஆலோசனை நடத்தப்பட்டுள்ளது. ஆனால் அவர் வெவ்வேறு வித்தியாசமான அறிக்கைகளையும் அமைச்சரவைப்பத்திரங்களையும்வெளியிட்டுக்கொண்டிருகிறார் என்றார்.

நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்கவுக்கும் சமூக வலுவூட்டல் மற்றும் நலவுரிமை அமைச்சர் எஸ்.பி. திசாநாயக்கவுக்குமிடையில் கடுமையான வார்த்தைப்பிரயோகம் இடம்பெற்றது. திசாநாயக்கவை குரலை உயர்த்திப் பேச வேண்டாம் என்றும், அப்படிச் செய்வதால் தாம் பயந்துவிடப்போவதில்லையென்றும் கருணாநாயக்க கூறினார். தாம் அப்படிச்செய்யவில்லையென்றார் திசாநாயக்க. பட்டதாரிகளைப் பதவிகளில் அமர்த்துவது தொடர்பில் இவர்களுக்கிடையில் பிரச்சினை ஏற்பட்டது. 570 பட்டதாரிகளைப் பெரும்பாலும் வடக்குக் கிழக்கிலிருந்து வேலைக்கமர்த்துவதென்று முடிவுசெய்யப்பட்டது. அந்த இரண்டு மாகாணங்களில் தான் அதிக பட்டதாரிகள் வேலையின்றிக் காணப்படுகிறார்களென்று அரசதலைவர் சிறிசேன குறிப்பிட்டார்.

**இழுபறியில் அம்பாந்தோட்டை துறைமுகத் திட்டம்**

அம்பாந்தோட்டைத் துறைமுக அபிவிருத்தித்திட்டத்தின் விவரங்கள் பகுதிபகுதியாக பொதுமக்கள் மத்தியில் பரவியுள்ள நிலையில் கடும் சர்ச்சைகளுக்கும் உள்ளாகியுள்ளது. சீன துறைமுக ஹோல்டிங்ஸ் நிறுவனத்துடனான ஒப்பந்த வடிவமைப்பு, திருத்தங்களுடன் கையெழுத்தாகியுள்ளது.

அதேபோல் சலுகை வழங்கும் ஒப்பந்தமானது அமைச்சரவை ஒப்புதலைப் பெற்றுவிட்டபோதிலும், கொழும்பில் அதன் மீதான கலந்துரையாடல்கள் நடைபெற்றுவருகின்றன. அதனால் கையெழுத்திடுவது மேலும் தாமதமாகி வருகின்றது.

அம்பாந்தோட்டைத் துறைமுக ஒப்பந்தம் தொடர்பாக இந்தியாவில் பெரும் கவலை தோன்றியிருப்பது இரகசியமன்று. இவை புதியவையும் கிடையாது. முன்னாள் அரசதலைவர் மகிந்த ராஜபக்ச காலத்தில் இந்தப்பிரச்சினை மிக உச்சநிலை அடைந்திருந்தது. அதுவும்குறிப்பாக சீன ஆதரவில் கொழும்புத்துறைமுகம் விரிவாக்கப்பட விருந்தமையாகும். சீன நீர்மூழ்கிகள் கொழும்புத்துறைமுகத்தில் நங்கூரம் இட்டபோது இந்தியாவிடமிருந்து ராஜதந்திர எதிர்ப்புகள் தோன்றியிருந்தன.

அதேபோலே அம்பாந்தோட்டைத் துறைமுக அபிவிருத்தியில் சீனாவின் பங்களிப்பு அதிகமாக நாடப்படுவதும் எதிர்ப்புக்குள்ளாகியிருந்தது. அரச தலைவர் தேர்தலின்போதும், பொதுத்தேர்தலின்போதும் இந்தவிடயத்தையே சிறிலங்கா சுதந்திரக்கட்சி (சிறிசேனபிரிவு)யும் ஐ.தே.கட்சியும்தமது பரப்புரைப்பேசுபொருளாகப் பயன்படுத்தியிருந்தன.

சீனாவின் பொருளாதார நடவடிக்கைகள் தொடர்பாக இந்த இரு கட்சிகளும் கடும் கருத்துக்களை வெளியிட்டு வந்தன. இவைகள் யாவும் கைவிடப்படும் என்றும் பெரிய குரலில் பரப்புரையை மேற்கொண்டிருந்தன. வெற்றியீட்டியதன் பின்னர் இப்போது ராஜபக்சவின் கொள்கைகளையே சீனா தொடர்பில் பின்பற்றுவதைக் காணமுடிகின்றது.

நாட்டின் நிதி நிலைமையே வெளிநாட்டுக் கொள்கையையும் தேசிய கரிசனைகளையும் மீறி நிற்பதாகக் காணப்படுகின்றது. இந்த நிலையில் மிகப் பிந்திப்போனாலும்கூட, இந்தியாவுடனான புரிந்துணர்வு ஒப்பந்தமானது மேலும் பாதகமான சூழ்நிலை வளர்வதைத் தடுப்பதற்கான அவசர நடவடிக்கையாகக் காணப்படுகின்றது.

ஆனால் இவ்வாறுதேசியப் பிரச்சினைகள் உற்பட பல்வேறு சிக்கலான பிரச்சினைகளுக்கு அரசு முகங்கொடுக்க நேர்ந்துள்ள இன்றைய நிலையில், அவசர அவசரமாக அரசுசெயற்பட ஆரம்பித்திருப்பது சந்தேகத்தைத் தோற்றுவித்துள்ளது. இந்தியாவின் கரிசனையை எதிர்கொள்ள நேரும் என்ற நிலைதெரிந்திருந்தால், அம்பாந்தோட்டைத் துறைமுக அபிவிருத்திக்காக உலகளாவிய முறையில் முன்மொழிவுகளைக் கோரி, தகுதியான கேள்வியாளரை தேர்ந்தெடுத்திருக்கலாம். அதற்குப் பதிலாக சீனத் தூதுவர் அழைக்கப்பட்டு முன்மொழிவுகள் சமர்ப்பிக்கும்படி கேட்கப்பட்டுள்ளது. அவர் இரண்டு நிறுவனங்களைக் குறிப்பிட்டுள்ளார். அவற்றில் ஒன்றுதெரிவு செய்யப்பட்டுள்ளது.





# வாசகர் திருமுகம்

## மனச்சாட்சியுடன் செயற்பட்டு உதவிடுக

வர்த்தக முயற்சிகளில் ஈடுபடுவோர் ஏதோ ஒரு வகையில் நுகர்வோர்களைச் சுரண்டி அதிக அளவில் இலாபமீட்டும் விதத்தில் செயற்படுவது வழக்கம் எனபது எம் மத்தியில் நிலவும் ஒரு பொதுக் கருத்து. பலதரப்பட்ட வாழ்க்கை நிலைகளிலுள்ள பொது மக்களாகிய நுகர்வோர் வர்த்தகத் தரப்பினரால் சுரண்டப்படாது பாதுகாக்கும் பொறுப்புடைய அரசு மற்றும் அதன் அதிகாரத் தரப்புக்களும் தம்மால் முடிந்த அளவுக்குப் பொதுமக்களை இத்தகைய தரப்பினரிடமிருந்து பாதுகாக்கும் பணியில் ஈடுபட்டும் அந்தத் தரப்பினரால் தமது முயற்சியில் முழுமையான வெற்றி பெற இயலவில்லை என எண்ண வேண்டியுள்ளது.

இந்த ஆண்டின் பெப்ரவரி மாதத்தில் மட்டும் யாழ். மாவட்டத்தில் பரவலாக இயங்கும் வர்த்தக நிலையங்களுக்கு எதிராக 93 வழக்குகள் குடாநாட்டில் இயங்கும் நீதிமன்றங்களில் பதிவு செய்யப்பட்டதாகப் பத்திரிகைச் செய்தியொன்று தெரிவித்துள்ளது.

பொதுமக்களது உடலாரோக்கியத்துக்குக் கெடுதல் ஏற்படுத்தும் வகையில் காலாவதியான பொருள்களை விற்பனை செய்தமை, சட்டப்படி வெளிப்படுத்த வேண்டியுள்ள விற்பனைப் பொருள்களது உற்பத்தித் திகதி மற்றும் விலை விவரம் பொறிக்கப்படாமை, மற்றும் கட்டுப்பாட்டு விலைகள் நிர்ணயிக்கப்பட்ட சில பொருள்களை நிர்ணயிக்கப்பட்ட விலையை விடக்கூடிய விலைக்கு விற்றமை போன்ற குற்றங்கள் இனங்காணப்பட்டதன் பேரில் குறித்த வர்த்தக நிலையங்களது உரிமையாளர்களிடமிருந்து தண்டப் பணம் அறவிடுமாறு தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளதான செய்தி யாழ். குடாநாட்டில் பெரியது, சிறியது என அடையாளப்படுத்தப்படும் அத்தனை வர்த்தக நிலையங்களையும் சந்தேகக் கண்களுடன் நோக்க வைத்துள்ளது.


ஏற்கனவே வாழ்க்கைச் செலவு நாளுக்கு நாள் அதிகரித்துச் செல்வதால், வாழ்க்கையைப் போராட்டமாகக் கருதி சிரமத்துடன் மேற்கொள்ளும் குடாநாட்டு மத்தியதர மற்றும் வறுமைக் கோட்டுக்கு உட்பட்ட பொதுமக்கள், வர்த்தகத் தரப்பினரது இத்தகைய சுரண்டல்களால் மென்மேலும் வாழ்க்கையில் சிரமப்பட நேர்வது புதுமையானதல்ல.

எனவே குடாநாட்டு வர்த்தக சமூகத்தினர் குடாநாட்டுச் சாதாரண தர மக்களது தற்கால வாழ்க்கைச் சிரமங்களைப் போக்கும் வகையில், நியாயமான விதத்தில் தமது வர்த்தக நடவடிக்கைகளை மேற்கொள்ள முன்வருவார்களா?

பொ.காங்கேசு
இருபாலை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சங்க இலக்கியத்தில் தோழி




எஸ்.மல்லிகா

தலைவனும் தலைவியும் சந்தித்துத் தம் காதலைப் பரிமாறுவதில் பேரானந்தம் கொள்வர். இரவு பகலென இந்தச் சந்திப்புக்கள் தொடரும். தினைப்புனம் காத்து நிற்கும் போதுதான் தலைவன் தலைவியர் பகலில் சந்திப்பதற்குரிய வாய்ப்புக்கள் அதிகமாகும். தினை முற்றி அறுவடையானதும் அவர்கள் சந்திக்க முடியாது. தலைவி வீட்டினின்றும் வெளியே வரமுடியாது. இத்தனை அறிவுறுத்திப் பகற்குறியைத் தடுக்கிறாள் தோழி. இதனைப் பின்வரும் அகநானூற்றுப் பாடலில் காணமுடியும்.

"யாமே கண்ணினும் கடும் காதலனே
எந்தையும் நிலனுறப் பொறா அன்சீறடி சிவப்ப
எவனில் குறுமகள் இயங்குதி? என்னும்
யாமே பிரிவின் றியைந்த துவரா நட்பின்
இருதலைப் புள்ளின் ஓருயிரம்மே

**கண்ணினும் கடுமையான அன்பு**

கண்ணினும் கடுமையான அன்புடையாளாகித் தாய் தலைவியைக் காக்கின்றாள். தந்தையோ தன் மகள் வெளியில் செல்வதற்கு உடன்படாமல், "இளை மகளே! உன் சீறடி சிவக்க எங்கு செல்கின்றாய்?" என்று பரிவோடு கேட்கின்றார். தலைவியோ ஓருயிர் ஈருடல் கொண்ட இருதலைப் புள்ளைப் (இருதலைப் பறவை) போல் தன்னிடம் நிறைந்த அன்புடையவளாய் இருக்கின்றாள் எனக்கூறிப் பகற்குறியை விலக்கி இரவுக்குறி வரும்படி கூறுகின்றாள். அதேநேரம், தலைவன் தலைவியை மணம் செய்ய விரைந்து வராது களவை நீடிக்கின்ற பொழுது தோழியானவள் இரவுக்குறியைப் பல காரணங்கள் காட்டி விலக்குவாள்.

"தனியை வந்தவாறு நினைந்து அல்கலும்
பனியொடு கலுழும் இவள் கண்ணே என்ற

அகநானூற்றுப் பாடலில், "இரவில் நீ தனிமையாக வந்த வழியினை நினைந்து தலைவியின் கண்கள் எப்பொழுதும் நீரினாலே நிரம்பி நிற்கும்" என்று தலைவியின் அன்பின் மிகுதியைத் தலைவனிடம் எடுத்துக்காட்டி இரவுக்குறியை விலக்குவாள். அத்துடன் தாய் தூங்காமை, நாய் தூங்காமை, ஊர் தூங்காமை, காவலர் கடுகல், நிலவு வெளிப்படல் முதலான காரணங்களைக் காட்டியும் இரவுக்குறியைத் தோழி மறுப்பாள் என்பதனைச் சங்க இலக்கியங்கள் சுட்டுகின்றன. தோழி தலைவியின் உரிமையையும் செயலையும் தனதாக்கிக் கொண்டு செயற்படும் தன்மை உடையவள் என்பதையும் அறவழியில் நிற்கும் பண்புடையவள் என்பதையும் இதன்மூலம் அறியமுடிகின்றது.

இத்தகைய பெற்றி வாய்ந்த தோழி, தலைவனுடைய உள்ளத்தைச் சோதிக்கும் திறன் விதந்து சுட்டத்தக்கது. தலைவியைத் தலைவன் சந்திக்க முடியாது என்பதைத் தோழி தலைவனிடம் கூறுவாள். அவளைத் தான் சந்திக்காவிடில், மடல் ஏறுவதாகத் தலைவன் சூளுரைக்கின்றான். தலைவன் வாயாலேயே அவன் மனதை அறிந்து கொண்ட தோழி, தலைவியை அவனுடன் சந்திக்கச் செய்கிறாள். அதன் பின்னரும் தலைவனைச் சோதிக்கக் கருதி பகலில் தலைவியைச் சந்திக்க வரும் தலைவனை இரவில் சந்திக்கும் படியும், இரவில் தலைவியைச் சந்திக்க வரும் தலைவனைப் பகலில் சந்திக்கும் படியும் மாற்றி மாற்றிக் கூறி அவனுக்குத் துன்பத்தைக் கொடுப்பாள். இத்தனை சோதனைகளுக்கும் உட்பட்டுத் தனது களங்கமற்ற காதலைத் தலைவன் வெளிப்படுத்தி நிற்பதைச் சங்க இலங்கியங்கள் குறிப்பிடுகின்றன. இங்கே தலைவனின் காதல் நெஞ்சத்தைத் தோழி பரிசோதிக்கும் திறன் மேலோங்கி நிற்கிறது.

இரவிலும் பகலிலும் மாறி மாறித் தலைவனும் தலைவியும் சந்திப்பர். இந்தக் களவுப் புணர்ச்சியால் தலைவியில் மாற்றம் தென்படும். இதனைக் கண்ணுற்றுத் தாய்மார் தோழியிடம் வினவுவது வழமை. இச்சந்தர்ப்பத்தில் தோழி, களவை வெளிப்படக் கூறாமல் கூறும் மதிநுட்பம் போற்றுதற்குரியது. இதனாலேயே "அறத்தொடு நிற்றல்" என அகத்திணை இலக்கியங்கள் தோழியைப் பாராட்டிப் பேசுகின்றன. அறத்தொடு நிற்றல் (இறையனார் களவியல்) என்பது, கற்பின் தலை நிற்றல் என்று பொருள்படும். தலைவியின் களவொழுக்கத்தைப் பெற்றோருக்கு வெளிப்படுத்தும் பொழுது, தலைவி ஏற்கனவே கற்பு நெறிப்பட்டுவிட்டாள்.

அறத்தொடு பொருந்தவே தலைவி நடந்துள்ளாள் என்பதனை முதன்மையாக வலியுறுத்துவதே தோழியின் நோக்கமாகும். சங்க இலக்கியங்கள் இதனைத் தெளிவாகக் குறிப்பிட்டுள்ளன. பின்வரும் குறுந்தொகைப் பாடலில் இதனைக் காணலாம்.

"பால் வரைந்து அமைத்தல் அல்லது அலர்வயின்
சால்பு அளந்து அறிதற்கு யாஅம் யாரோ
எனயான் கூறவும் அமையாள் அதன்தலைப்
பைங்கண் மாச்சுனைப் பல்பிணி அவிழ்ந்த
வள் இதழ் நீலம் நோக்கி உள் அகைபு
அழுத கண்ணள் ஆகிப்
பழுது அன்று அம்ம இவ் ஆயிழை துணிவே

இப்பாடலில் தலைவியிடம் வேறுபாடு கண்டு இது எதனால் ஆனது என்று செவிலித்தாய் தோழியிடம் வினவ, அதற்குத் தோழி மதிநுட்பமான முறையில் அவளுக்குப் பதிலளிப்பது உயிரோட்டமானது. "சுனையிடத்திலே பல கட்டுகள் அவிழ்ந்த இதழ்களையுடைய நீலமலரைப் பார்த்து நெஞ்சுக்குள்ளே வருந்தி அழுத நீர் சிந்தும் கண்களையுடைய தலைவியின் துணிவு குற்றமற்றது. நீலப் பூவைக் கண்டு அழுதபோது, அந்த மலரை ஒரு தலைவன் அவள் கையில் கொடுத்தான். தலைவி அவன்பால் நன்றியறிதலை உடையவள் ஆயினாள்.

நீலமலர் தந்து நட்புப் பூண்டுள்ள ஒருவனையே இவள் காதலித்தாள்" என நன்றியறிதலைக் காட்டி அறத்தொடு நிற்கும் தோழியின் செயலைச் சங்க இலக்கியங்கள் பாராட்டுகின்றன. இங்கே தோழியின் பக்குவப்பட்ட மனதைத் தெற்றெனப் புரிந்து கொள்ள முடிகின்றது.

தலைவன் தலைவியர் வாழ்வில் பெருநலனும் அக்கறையும் கொண்டிருக்கும் தோழி, அவர்கள் இல்லறத்தில் இணைந்துவிட்டால் தன் கடல் முடிந்துவிட்டது என்று நினைக்கவில்லை. அவர்கள் வாழ்வில் அவள் இறுதிவரை பயணிக்கிறாள். இன்ப துன்பத்தில் பங்கெடுத்து நிற்கிறாள்.

தலைவன் தலைவியர் தப்புச் செய்தால் தட்டிக்கேட்பவ்ளாக நிற்கிறாள். இந்த அன்புத் தோழியைச் சங்ககால அகத்திணை இலக்கியங்களில் பார்க்கக் காணலாம்.

(தொடரும்...)

இலங்கையில் முதல் தடவையாக
பெண்களுக்கான அழகுக்கலை கல்லூரி

ஒளி அழகன் ஸ்ருடியோ

British College of Beauty Studies இணைந்து நடத்தும்
பெண்களுக்குப் பொருத்தமான பாடநெறிகளும் பயிற்சி வகுப்புக்களும்.

அழகுக்கலை | தையற்கலை | சிங்களம்
கேக்ஜசிங் | ஆங்கிலம் | சிகையலங்காரம்
Ladies Skills Development | சமையற்கலை

- அனைத்து பயிற்சி வகுப்புக்களும் பெண் ஆசிரியர்கள் மூலமாகவே பயிற்சி அளிக்கப்படும்.
- 3, 6 மாதகால பயிற்சி வகுப்பாகவும் குறுகிய கால வகுப்பாகவும் பெற்றுக் கொள்ள முடியும்.
- வெளிநாடுகளிலும் வேலைவாய்ப்பை பெற கூடிய தரமான சான்றிதழை வழங்கி வருகின்றோம்.

**01. Ladies Skills Development**
**02. Self Makeup**
**03. Self Hairstyle**
**04. Self Threading**
**05. Self Cleanup and Facial**
**06. Self Saree draping**
**07. Personality Development**



பண்டிகைக் காலத்தை முன்னிட்டு ஒருநாள் பயிற்சி பட்டறை

போன்ற பயிற்சி வகுப்புக்கள் உங்களுக்கு நீங்களே எவ்வாறு செய்து கொள்வது ? என்று மிக தெளிவாக ஒரு நாள் பயிற்சி வகுப்பில் இடம் பெற உள்ளது.

உங்களுக்கு நீங்களே செய்து கொள்வதன் மூலம் பணத்தை சேமிக்க சுய நம்பிக்கை நான் அழகாக மாற முடியும் என்னாலே! என்ற Self Confidence பெற்றுக் கொள்வீர்கள்.

அன்றைய தினமே சான்றிதழ் வழங்கப்படும்.

பெண்களே இது உங்களுக்கு மட்டுமான கல்லூரி

இடம் : British College of Beauty Studies
நேரம் : 10.00 to 5.00
காலம் : 13.04.2017

இணைய விரும்புவோர் பதிவுகளை மேற்கொள்ளுங்கள். மட்டுப்படுத்தப்பட்ட மாணவர்களே அனுமதிக்கப்படுவர்.
076 7011645

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருடன்

# மனோதர்ம சங்கீதம்

ஏற்கனவே தாம் பெற்ற கல்பித சங்கீதப் பயிற்சியின் பிரகாரம் மனதிலே உடனுக்குடன் எழுகின்ற கற்பனைகளை இலக்கணம் தவறாமல் வெளிப்படுத்துவதையே மனோதர்ம சங்கீதம் என்று கூறுகிறோம். ஓர் இசைக் கலைஞனின் இசைஞான முதிர்ச்சியையும் ஆற்றுகைத் திறனையும் மனோதர்ம சங்கீதம் மூலமாகவே நிர்ணயிக்க முடியும். மனோதர்மமே கர்நாடக சங்கீதத்தின் உயிர் நாடியாகும். இது 5 வகைப்படும். அவையாவன: இராகம், தாளம், பல்லவி, நிரவல், கற்பனாஸ்வரம் எனச் சுருக்கமாக இயம்பலாம். கி.பி. 5ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த மதங்கர் என்பவரே இராக ஆலாபனையின் தந்தை எனப் போற்றப்படுகின்றார். அக்ப்திக் ஷிகா, இராகவர்த்தனி, மகரிணி என மூவகைப் பத்ததி (பந்ததி) இதிலுண்டு. ஆரம்பம், விஸ்தாரம், முழுமை என இராகத்துக்கு உயிர் கொடுத்துப் பாடுதல்.

**தானம், இராக ஆலாபனை**

தானம் இராக ஆலாபனைக்கு அடுத்தடுத்ததாகப் பாடப்படும். அ, னம், தம், தனம் தா ஆனந்தம் தா என்ற இசையமுதச் சொல், இராக பாவம் ததும்ப திரிகாலத்தில் மனோலயமாகப் பாடப்படும். மிருகங்கள், பட்சிகள் ஆகியவற்றின் சப்தங்கள் போல தானம் ஒலிக்கும். சாத்தனூர் பஞ்சு ஐயர் தான மேதாவி எனப் போற்றப்படுகிறார். மானவ, அஸ்வ, கஜ, மார்க்கட, மயூர, குக்குட மண்டூக, சக்ரம் என 8 தானங்களுண்டு. தானம் இரம்மியம் மிக்கதாகும். கனம் கிருஷ்ணய்யர், கனம் சீனய்யர், கனம் கேசவ ஐயர் புகழ்பெற்றவர்கள். பல்லவியானது பதத்தை லயத்தில் வின்னியாசப்படுத்தலைக் குறிப்பதாகும். இராகம், தானம் பாடிய பின் பல்லவி பாடப்படும்.



சுருங்கச் சொல்லி விளங்க வைப்பதாகும். பல்லவியில் சாகித்தியம் பெரும்பாலும் பக்தி சம்பந்தமாகவும் ஏனையவை சிருங்காரம், இகழ்ச்சி, புகழ்ச்சி சம்பந்தமாகவும் இருக்கும். பிரதமாங்கம் த்விதியாங்கம் என 2 பாகங்கள் உண்டு. இவற்றை முன்பாதி (பூர்வாங்கம்) எனவும் பின்பாதி (உத்தராங்கம்) எனவும் அழைக்கப்படும். இரண்டுக்கும் இடையில் பதகர்ப்பம் (அறுதி) அமைந்திருக்கும். இதில் விஸ்ராந்தி (அக்ஷரகார்வை) அமையும். சிறிய, பெரிய, 2களை, 4களை, 8களை மணிப்பிரவாள இராகமாலிகா தாளமாலிகாப் பல்லவிகள் என வகைப்படுத்தலாம். அனுலோமம், பிரதிலோமம் பல்லவிகளைச் செப்பனிடுகிறது. தாளம் முதலாம் காலத்தில் அமைந்து செல்ல பல்லவியை திரிகாலப்படுத்தல் அனுலோமம் எனவும் பல்லவியை முதல் காலத்திலேயே பாடிக் கொண்டு தாளத்தைத் திரிகாலப்ப டுத்தல் பிரதிலோமம் எனவும் முற்காலத்தில் பாடியுள்ளார்கள். ஒரு பல்லவியை 6 தடவை விளங்குமாறு அறிமுகம் செய்து பாடுதல் வேண்டும். உதாரணமாக பல்லவியொன்று:

**இராகம் ஹரஹரப்பிரியா (22)**
**தாளம் ஆதி 1500 (2களை)**
**அனாகத எடுப்பு**

;பா, தநித பா, ம கரி ஸா, கமா /பா தநிஸா/ நித நீ , நித பம

"மால் மருகனை நினைந்திடு மனமே கணமே தினமே உதவிய நிரவல்" என்பது எடுக்கப்பட்ட சாகித்தியத்தைப் பொருள், நயம் இராக சொரூபம் பிரகாசிக்கும் படியாகத் தாளலயம் பிசகாமல் சௌக்க துரித அலங்காரங்களுடன் பாடுதலாகும். பதங்களைப் பரப்பி விஸ்தரிப்பது.

**கற்பனாஸ்வரம்**

பொருத்தமான ஸ்வரத்தில் முடியும் விதமாக 1/4,1/2, 3/4,1,1 1/4, 11/2,2,21/2,3 என குறில், நெடில் தீர்க்க கம்பிதஜீவ, வர்ஜ, வக்ர ஸ்வரங்கள் பிரகாசிக்கும்படியாகத் தாளம் ஓடாமல் கொள்ளாமல் காலப்பிரமாணம் கலையாதபடி பாடுதல் அல்லது வாசித்தல் வேண்டும்.

மேலும் இராமமாலிகையாகவும் கற்பனாஸ்வரம் பாடுவதென்பது கலைஞரின் ஆழ்ந்த இசைப் புலமையையும் ஆளுமையையும் புலப்படுத்தும்.

> ஓர் இசைக் கலைஞனின் இசைஞான முதிர்ச்சியையும் ஆற்றுகைத் திறனையும் மனோதர்ம சங்கீதம் மூலமாகவே நிர்ணயிக்க முடியும். மனோதர்மமே கர்நாடக சங்கீதத்தின் உயிர் நாடியாகும்.







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Facebook : UTHAYAN.PRINT
Twitter : UTHAYANPRINT

# மாதவம் புரிந்து மண்ணுக்குள்ளே ஓவியமாய் ஜொலித்தவரே ஆதவன்

கே.எஸ்.சிவஞானராஜா




கலைஞர்கள் ஒருபோதும் இறப்பதில்லை. காலங்களும் அவர்களை மறப்பதுமில்லை. நிலையான அவர் திறமைக் கீடிணை இல்லை. நீடித்த பொன் ஓவியங்கள் ஆதவனை மறந்ததில்லை.

ஆம்! ஆதவன் என்ற புனைபெயர் இவருக்கு அணி செய்தாற்போல், இவர் கைபட்ட அத்தனையும் உயிர் பெற்றுத் துலங்கிற்று. பொன்னாக ஒளி வீசிற்று. தந்தையின் பெயரிலும் சிதம்பரப் பொருள் சூட்சுமமாய் விளங்கியது போல், இவரது பெயரிலும் தில்லையம்பலப் பொருள் பொன்னாக இழையோடிற்று. அதனால் போலும் சிதம்பரப்பிள்ளை தம்பதிகளும், இவருக்குச் சூட்டிய நாமம் பொன்னம்பலம் என குடும்ப சௌபாக்கியம் பெற்றனர். சித்திர சுரபி எனப் பொன் மகவு பத்திரமாய் வளர்ந்தது.

**கந்தரோடையும் அளவெட்டியும்**

1917ஆம் ஆண்டில் கந்தரோடையும் அளவெட்டியும் மருத நிலங்களோடு, ஆன்மிக விளைச்சலும் பேறு பெற்றவனாய் விளங்கின. நிலங்களைப் போலவே மக்களும் உடல் உள உணர்வுகளில் பூரிப்போடு பூத்திட வாழ்ந்தனர். வீட்டில் சந்தோசம், வயலில் சந்தோசம், உழைப்பில் சந்தோசம் போதும் என்ற பிறப்பில் சந்தோசம். வீடு பேற்றில் சந்தோசம். குழந்தைச் செல்வங்களில் சந்தோசம். இவ்வாறான பின்னணியில் 'பொன்னம்பலம்' எனும் செல்ல மகவானது நாளொரு வண்ணமும் பொழுதொரு மேனியுமாகச் செழிப்போடு பெற்றோரை மகிழ்வித்தது. பிள்ளை பொன்னாக வளர்ந்து பொன் போன்ற பிள்ளையாக ஒளி வீசியது. பதக்கமாய் மின்னியது.

**கலை**

பன்னிரண்டாம் திகதியில் பிறந்தவர்கள் யாவரும் பெரும் ஸ்தானத்தில் மிதப்பார்கள் என்பதற்கமைய, பாடசாலை வாழ்வில் இயல், இசை, நாடக, நடன புத்தாக்கப் படைப்பில் இனங்காணப்பட்டார். இதன் பிரகாரம் ஸ்கந்தவரோதயக் கல்லூரியில் நடைபெற்ற மாவட்ட மட்டச் சித்திரப் போட்டியிலும் ஆன்மிக நாடகப் போட்டியிலும் முதற் பரிசு பெற்றதாக, அளவெட்டி சதானந்தா வித்தியாலயத்தில் நடைபெற்ற நிகழ்வொன்றில் பேசியது என் ஞாபகத்தில் இப்போது கொலுவாகிறது. கந்தரோடையானது கண்களைத் திறக்கவல்ல கல்வியை ஆயுதமாகக் கொண்டமையால், இலங்கையிலே முதற் தரமான ஒரு பாடசாலை உதயமானது. சிறிமான்கள் கந்தையா உபாத்தியாயர்கள் இருவராக கந்தரோடை என்ற நாமத்தை உலகெங்கும் பரப்பும் தலை சிறந்த தலைவர்களாக மிளிரும்போது, பொன்னம்பலத்தின் சித்திர ஓவிய இலக்கியப் படைப்புக்கள் எடுத்தியம்பப்பட்டன.

மகாத்மா காந்தி, சுவாமி விவேகானந்தர், வீரபாண்டிய கட்டபொம்மன், யோகர் சுவாமிகள், செல்லப்பா சுவாமிகள், ரவீந்திரநாத் தாகூர், ஜவகர்லால் நேரு, சிவபெருமான், விநாயகர் நவாலியூர் சோமசுந்தரப் புலவர், சேர் பொன் இராமநாதன், குமார சுவாமிப் புலவர் "மௌனகுரு தவத்திரு கைலாசபதி" சிவ சத்தர் ஆகிய பெரியார்களை மாணவப் பருவத்திலே உயிரோட்டமாக வரைந்து கல்விச் சமூகத்தவர்களின் கண்களுக்கு விருந்தாகினார். அப்போதைய காலமும், சாதகமும் அவருக்குக் கைகொடுக்கச் சின்ன வயதிலேயே ஆசிரிய நியமனம் கிடைத்தது.

**மெலிதான உயர்ந்த உருவம்**

வட்டமுகம், வடிவான கண்கள், நீண்ட, அகன்ற நெற்றி, மேவிய தலைமுடி , பவ்வியமான முகப்பொலிவு, பலிதமிகு பார்வை, கள்ளங்கபடமற்ற இதயம் கருத்தாடல்மிக்க கேள்விஞானச் செவிகள் ஐந்தரை அடிக்கும் மேலான வாகான ஆனால், மெலிதான உயர்ந்த உருவம், திருவாயால் உதிரும் தமிழ் அமுத மொழிகள், கரங்களில் விளையும் உயிர் ஓவியங்கள், உடை நடை பாவனையில் மிளிரும் தமிழ் பாரம்பரியம் நெஞ்சினில் ஈரம் கடமையில் கீதை, இவ்வாறு ஆசிரியம் ஒரு கனவானைச் சிருஷ்டித்தது. இதன் விளைவாகவே நியமனம், கந்தரோடை தமிழ்க் கந்தையா வித்தியாலயத்திலும், ஸ்கந்தவரோதயக் கல்லூரியிலும் வரலாறாகியது. தமிழ்க் கந்தையா வித்தியாலயத்தில் கனிஷ்ட அதிபராக விளங்கியபோது, ஏகப்பட்ட மாணவர்கள் அதி சிறந்த பெறுபேறுகளுக்குச் சொந்தக்காரர்களானார்கள்.

> யாழ் முத்துக்களாகப் பரிணமித்த ஒப்புரவாளர்கள் வரிசையில் முதன்மையானவர் அமரர் கந்தையா உபாத்தியாயர். இவரே ஸ்கந்தவரோதயக் கல்லூரியை ஆரம்பித்த புண்ணியவாளன். 1894ஆம் ஆண்டு ஸ்தாபிக்கப்பட்ட ஸ்கந்தாவின் சிற்பியான கந்தையா வள்ளலை ஒரு கொடையாளியாக பொன்னம்பல ஆசான் ஓவியமாக வரைந்துள்ளர்.அது ஒரு தாற்பரியமான, பேசு கின்ற, உயிருள்ள ஓவியம் அற்புதம்.

இரண்டு பாடசாலை மாணவர்களும் இவரிடத்தே மேலதிக வகுப்புக்களுக்கு அதுவும் முழுக்க முழுக்க இலவசமாகத் தோற்றி கலைகளின் ஊற்றுக்களைத் தேடிக் கண்டு கொண்டனர். யார் எங்கு படித்தாலும் ஒரு தாய் பிள்ளைகள்போல சகோதர சகவாழ்வையும், அன்னியோன்னியத்தையும் வளர்த்த உத்தமராக இன்றும் கந்தரோடையில் உச்சரிக்கப்படுகின்றார். ஒற்றுமையை வளர்த்த உத்தமரானார்.

அமரர் சிற்பி சரவணபவன், கவிஞர் துரைசிங்கம், பேராசிரியர் கிருஷ்ணராஜா, பேராசிரியர் சபா ஜெயராசா, அமரர் ஆ.சி. நடராஜா, டி.டி.நாணயக்கார முன்னாள் அரச அதிபர் விமல் அமர சேகரா ஆகியோர் பேறுடைய மாணவர்களாகவும் மற்றும் வரகவி வீரமணி ஐயா, ஓவியர் ரமணி, குரல் இசைக் கலைஞர் வி.கே. நடராஜா, ஞானம் ஆட்ஸ் ஞானசேகரம், லயஞான சுரபி சிவபாதம், குரலிசை ஞான சுரபி திலகேஸ்வரன், கான ஞான திலகம் என்.கே.பத்மநாதன், பண்ணிசை வாணர் வர்ணகுலசிங்கம், ஹார்மோனிய விற்பன்னர் சிவஞானம், புராண படன வித்தகர் சோமு, ஓவிய கலா மேதை சிவப்பிரகாசம், ஓவிய இளவல் சுபாஷ் சந்திரன், பிரபல்யமான சோதிடர் பொன்னுத்துரை, இசைமணி ஞானப்பழம் செல்லத்துரை, முதுபெரும் புலவர் சிற்றம்பலம், இசைமணி பொன். முத்துக்குமார், கவிஞர் கதிரேசர் பிள்ளை, பண்டிதர் மாணிக்கம், கதாகால பிரசங்க பூசணம் பொன்னம்பலம்,சைவப் பழம் பிலவனைப் பொன்னம்பலம் சிவஸ்ரீ சோமசுந்தரேஸ்வரக் குருக்கள் ஆகியோர் இவரால் அயராது ஊக்குவிக்கப்பட்ட துறைசார் விற்பன்னர்களாவார்கள்.

**சிவபெருமானின் ஓவியம்**

அளவெட்டி திருவடி நிழலில் வரையப்பட்ட சிவபெருமானின் ஓவியம் எம்மை வணங்க வைக்கிறது. இடது பாதம் தூக்கி ஆடும் நடராஜனைப் பலமணி நேரம் பசியாற வைக்கும் அற்புதக் காட்சியென அமரர் விஸ்வநாதன் கைலைப் புராண வெளியீட்டின்போது குறிப்பிட்டு மகிழ்ந்தார்.

அளவெட்டி கேணிக்கரை ஆலய முகட்டு விதான ஓவியக் காட்சியில் வைரவப் பெருமானின் காவல் காக்கும் அற்புதப் பேறுடன் அடியாரை அரவணைக்கும் காட்சியே வரையப்பட்ட ஓவியங்களில் வரம் தரும் ஓவியமென அமரர் பொன்னையா ஆசிரியப் பெருந்தகை இற்றைக்கு முப்பது வருடங்களுக்கு முன்னதாக ஆலயத்தில் நடைபெற்ற கூட்டத்தின்போது குறிப்பிட்டு வியந்தார்.

கும்பழாவளைப் பிள்ளையார் ஆலயம் தோன்றிய வரலாற்றைச் சித்திரிக்கும் சுவரோவியங்கள் பலவற்றுக்கும், பாலித்த புகழுக்கும் இவர் சொந்தக்காரராகப் பலராலும் உரிமையாக்கப்பட்டார்.

மாருதப் புரவீக வல்லியினது வரலாற்றைப் படம் பிடித்துக் காட்டுவதுபோல ஒளிர்ந்தது.

இதைவிட வற்றாத வாழ்வளிக்கும் கந்தரோடை வற்றாக்கை அம்மன் ஆலயத்தின் கண்ணமைந்த எம்பெருமாட்டியுடன் அமைந்த எம்பெருமானின் அற்புத ஓவியங்கள் பிரம்மாதம்! ஆமாம்! அவை எமக்குப் பிரசாதம்.

மேலும், மருதநிலம் கொழிக்கும், மணி நெற்குவியலாய் சொரிவிக்கும், மோதகப் பிரியனாம் பெருமாக் கடவைப் பிள்ளையாரின் மீளா அடிமையாக இவரும், இவர்தம் குடும்பமும் மிளிர்ந்தமையால் ஓவியங்கள் அடியவர்களோடு பேசிற்று. கூடவே நடமாடிற்று. வீடுவரை சென்று விளைந்தது.

அருட்கவி ஐயாவின் ஆசியோடு அளவெட்டி ஸ்ரீ நாகவரத நாராயண தேவஸ்தானத்தில் வரையப்பட்ட ஓவியங்கள் எப்படி என்றால்,

``பார்க்கும் மரங்கள் எல்லாம்
நந்தலாலா - நின்தன்
பச்சை நிறந்தோன்றுதையே
நந்தலாலா" என்பதுபோல ஆன்மிக சுகம் அளிக்க வல்லதாகும்.

மேதாவிகள்

யாழ் முத்துக்களாகப் பரிணமித்த ஒப்புரவாளர்கள் வரிசையில் முதன்மையானவர் அமரர் கந்தையா உபாத்தியாயர் . இவரே ஸ்கந்தவரோதயக் கல்லூரியை ஆரம்பித்த புண்ணியவாளன். 1894ஆம் ஆண்டு நிறுவப்பட்ட ஸ்கந்தாவின் சிற்பியான கந்தையா வள்ளலை ஒரு கொடையாளியாக பொன்னம்பல ஆசான் ஓவியமாக வரைந்துள்ளார்.அது ஒரு தாற்பரியமான, பேசுகின்ற, உயிருள்ள ஓவியம் அற்புதம்.

இதேபோல, கந்தரோடை தமிழ்க் கந்தையா வித்தியாலய நிறுவுநர் கந்தையா உபாத்தியாயரின் மகிமை தரு ஓவியமும் பொற்புடன் விளங்குகிறது. கந்தரோடையின் மணம், குணம் ஓவியத்தில் தொனிக்கிறது. பலே!

(24ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




ராசிகளுக்கான

# சித்திரைப் புத்தாண்டுப் பலன்கள்

ஜென்ம ராசியில் குருபகவான் சஞ்சார நிலையோடு புத்தாண்டைத் தொடங்கும் உங்களது வாழ்க்கையில் மறக்க முடியாத ஆண்டாக அமையும் என்பதில் ஐயமில்லை. வலிமையான சாதக அமைப்புக் கொண்டவர்கள் இந்த வருடம் நிச்சயம் பிரபல்ய யோகம் அடைவார்கள். இந்தப் புத்தாண்டு பரவலாக நன்மை தந்து வாழ்க்கைத் தரத்தை உயர்த்தும். வாழ்க்கையில் இதுநாள் வரை கண்டுணர்ந்த அனுபவத்தால் செய்யும் செயல்களில் நிதானமும், பக்குவமும் கூடுதலாக வெளிப்படும். சுய உழைப்பால் உயர்வு பெறுவீர்கள். தொழிலில் புதிய யுக்திகளைக் கையாண்டு வெற்றி பெறுவீர்கள். படபடப்பைத் தவிர்க்கவும். நான்கு பேர் மத்தியில் உங்களது விவேகமான செயற்பாடுகளால் உங்கள் பெருமை, கௌரவம் என்பன மேலும் அதிகரிக்கும்.

உழைப்புக்கேற்ற ஊதியம் கிடைக்கும். இதுநாள் வரை உண்மையாக உழைத்து வந்ததன் பயனை இந்த ஆண்டில் அனுபவிக்க உள்ளீர்கள். நெடுநாள்களாக எதிர்பார்த்துக் காத்திருக்கும் வரவு வந்து சேரும். சொத்துச் சேர்க்கையில் ஈடுபடுவதற்குச் சரியான சந்தர்ப்பம் அமையும். பேச்சில் நிதானம் இருக்கும். அதிகம் பேசாமல் அளந்து பேசி நற்பெயர் காண்பீர்கள். அடுத்தவர்கள் அறிவுரையை அன்றாட வாழ்வில் நடைமுறைப்படுத்தி வெற்றி காண்பீர்கள். குடும்பத்தில் மகிழ்ச்சியான சூழல் நிலவும். கூட்டுக் குடும்பத்தில் வசித்து வருவோர் குடும்பத்தினரின் ஒத்துழைப்புடன் எடுத்த பணியை செவ்வனே செய்து முடிப்பார்கள். உடன்பிறந்தோர் உங்களுக்கு உதவி செய்வர்.

புதிய நண்பர்களால் ஆதாயம் உண்டு. மிகவும் நெருங்கிய நபர் ஒருவரின் குடும்பத்துக்காக தியாகங்கள் செய்ய நேரிடும். உறவினர்களால் அனுகூலமும், சோதனைகளும் இருக்கும். தகப்பனார் வழி உறவினர்களுடன் கருத்து வேறுபாடு தோன்றும் வாய்ப்பு உண்டு. வாகன மாற்றம் செய்ய நினைப்போருக்கு நேரம் சாதகமாக அமையும். திட்டமிட்ட ஆன்மிகப் பயணம் செல்வீர்கள். வாழ்க்கைத்துணையின் பணிகளில் உங்களது ஆலோசனைகள் உதவியாக அமையும். பிள்ளைகளின் உடல்நிலையில் கூடுதல் கவனம் அவசியம்.

புதிய தோழிகளால் உலக அனுபவங்கள் கூடும். பொதுவாக இந்த ராசிக்காரர்கள் அனைவருக்குமே அவர்கள் செய்து வரும் தொழில் சிறக்கும். ஆதாயம் கிடைக்கும். மற்றப் படி ஜாதக ரீதியான பலன்களுக்கு ஏற்ப இருக்கும். எப்படியும் மிகப்பெரிய லாபத்தை காண இயலாவிட்டாலும் நேரத்துக்கு தகுந்தாற் போல் வியாபார யுக்தியை மாற்றிகொண்டு செயல்பட்டு வெற்றி பெறவேண்டியிருக்கும்.

வியாபாரிகள் புதிய யுக்தியால் வெற்றி காண்பார்கள். உணவுப் பொருள்கள் வியாபாரம், குளிர்பான விற்பனை, தோல்பொருள்கள் ஏற்றுமதி, செல்போன், சிம்கார்டு விற்பனை ஆகியவை முன்னேற்றம் காணும். புத்தாண்டில் எதிர்பார்த்தபடி வாழ்க்கைத் தரம் முன்னேற்றம் காணும். எதிர்பார்த்தவை வெற்றியாக முடியுமாதலால் முழுமையான திருப்தியுடன் வாழ்க்கையை அனுபவிக்க உள்ளீர்கள்.

**பரிகாரம்:**
வெள்ளிக்கிழமைகளில் அருகில் உள்ள மாரியம்மன் கோயிலுக்கு சென்று அம்மனை வழிபட்டு வாருங்கள். நேரம் கிடைக்கும்போது சத்தியமங்கலம் அருகில் உள்ள பண்ணாரி அம்மன் கோயிலுக்கு சென்று வழிபடவும்.



# முசலியில் கலை, கலாசார, இலக்கிய விழா

மன்னார் மாவட்டம் முசலிப் பிரதேசத்துக்கான கலை,கலாசார ம றும் இலக்கிய விழா முசலி பிரதேச செயலர் செல்லத்துரை கேதீ ரன் தலைமையில் கடந்த புதன் கிழமை மதியம் முசலி பிர செயலக கேட்போர் கூடத்தில் இடம் பெற்றது.

இந்த நிகழ்வில் முதன்மை அதிதியாக மன்னார் மாவட்ட உதவி அதிபர் திருமதி நந்தினி ஸ்ரான்லி டிமேல் கலந்து கொண்டார்.

இதன்போது கலை கலாசார நிகழ்வுகள் இடம் பெற்றதோ முசலிப் பிரதேசத்தில் உள்ள எழுத்தாளர்கள், ஊடகவியலாளர்க கவிஞர்கள், மற்றும் இலக்கியவாதிகள் கௌரவிக்கப்பட்டு. அவர்களுக்கான நினைவுச் சின்னங்கள் வழங்கப்பட்டதோடு, முசலிப் பிரதே சத்துக்கான நித்திலம் புத்தகத்தின் இரண்டாம் பதிப்பும் வெளியீடு செய்து வைக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் சமூர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள்,கிராம அதிகாரிகள்,அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் மற்றும் முசலிப் பிரதேச சமூக மட்ட அமைப்புகளின் பிரதிநிதிகள் எனப் பலர் கலந்து கொண்டமை குறிப்பிடதக்கது. (56)



வல்வை அனந்தராஜின் வல்வையின் முதுசொம் நூலை வடமராட்சி வடக்குப் பிரதேச செயலர் ஆர்.ரி. ஜெயசீலன் வெளியிட்டு வைக்க முதற்பிரதியை பம்பலப்பிட்டி இந்துக்கல்லூரியின் இளைப்பாறிய பிரதி அதிபர் சிவா.கிருஷ்ணமூர்த்தி பெற்றுக் கொண்டார். நூலாசிரியர் அனந்தராசும் பாரியாரும் அருகில் நிற்கின்றனர்.

## வரலாற்றில் இன்றைய தினம்

**12.04.2017**

1980-சாமுவேல்டுபுரட்சிச்சதிமூலம்சைபீரியாவின் கட்டுப்பாட்டை எடுத்ததன் மூலம் அங்கு 130 ஆண்டுகால சிறுபான்மை அமெரிக்க சைபீரியர் ஆட்சி முடிவுக்கு வந்தது.

1981 -மீள் விண்வெளி ஓடம் கொலம்பியா முதன் முதலாக செயற்பாட்டைத் தொடங்கியது.

2000-திருமலையில் கலை நிகழ்ச்சியின்போது நடைபெற்ற குண்டு வெடிப்பில் 12 வயதுச் சிறுவன் உட்பட 4 பேர் சாவு 65இற்கு மேற்பட்டோர் காயம்.

2000-அரச தலைவர் சந்திரிகா சிகிச்சைக்காக வெளிநாடு பயணமானார்.

2000-பௌத்தர்கள் இனவாதிகளல்லர் நோர்வே கொடி எரிப்பு தவறானது என பெல்பொல விபஸ்ஸி தேரர் தெரிவிப்பு.

2002- ஜெருசலேம் மகானே யெஹீடா சந்தை நுழைவாயிலில் பெண் தற்கொலைக் குண்டுதாரி குண்டை வெடிக்க வைத்ததில் 7 பேர் உயிரிழந்ததுடன் 104 பேர் காயமடைந்தனர்.

2009-சிம்பாபே டொலர் சிம்பாவேயின் நாணயமாகத் தொடராதென சிம்பாவே உத்தியோக பூர்வமாக அறிவித்தது.

2016 - வடக்குக் காணி குறித்து ஆராய வடக்கு முதலமைச்சருக்கு மைத்திரி அவசர அழைப்பு .

2016 - வடக்கு மாகாண சபையில் போக்குவரத்து நியதிச் சட்டம் ஏகமனதாக நிறைவேறியது.

2016 - பிரதேச செயலகங்களில் மாதிரிக் கிராமத்துச் சுகாதார செயற்பாடுகளை முன்னெடுக்கத் தீர்மானம் . யாழ்.மாவட்ட அரச அதிபர் வேதநாயகன் தெரிவிப்பு.

2016 - காணிகள் சுவீகரிக்கப்பட்டால் மோசமான விளைவுகளே ஏற்படுமென நல்லாட்சி அரசுக்கு சிவாஜிலிங்கம் எச்சரிக்கை.

**நாளை**

**பங்குனி-31**
வியாழக்கிழமை -13.04.2017
திதி: துதியை பி.ப.02.35
நட்சத்திரம்: சுவாதி கா.07.34
சுபநேரம்:07.36-09.06 வரை
ராகுகாலம்:01.36-03.06 வரை



# போதைப்பொருள் விழிப்பூட்டல் நிகழ்வு



உலக தரிசன நிறுவனத்தின் அனுசரணையில் தென்மராட்சி வலய அழகியல் பிரிவினரால் நாடக ஆற்றுகை இடம்பெற்றது. கடந்த நான்காம் திகதி அன்று 2மணிக்கு வரணி மத்தியகல்லூரியின் பிராதான மண்டபத்தில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் தென்மராட்சி வலயக்கல்விப் பணிப்பாளர் சு.கிருஸ்ணகுமார் கலந்து கொண்டார். 'இனியதைச் செய்வோம்' என்ற தலைப்பில் நாடக ஆற்றுகை இடம்பெற்றதைத்தொடர்ந்து. போதைப் பொருட்பாவனை மற்றும் துஸ்பிரயோகங்களிலிருந்து எமது எதிர்காலத்தைக் காப்போம் என்ற தொனிப்பொருளில் பார்வையாளர்களால் கருத்துக்கள் பகிரப்பட்டன. இதன் மூலம் போதைப்பொருட் பாவனைக்கு எதிராக மக்களிடமிருந்த கருத்துக்கள் மனந்திறந்து பகிரப்பட்டமை குறிப்பிடத்தக்கதாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







## நூற்றாண்டு நினைவு விழா

அளவெட்டி கலாசார மண்டபத்தில் அமரர் ஆசிரியர் சிதம்பரப்பிள்ளை பொன்னம்பலத்தின் நூற்றாண்டு நினைவு விழாவும், நூற்றாண்டு நினைவு மலரான "ஆதவன்" வெளியீட்டு விழாவும் இடம்பெற்றன.
நிகழ்வின் தலைவர் இ.சர்வேஸ்வரா தலைமையுரையை ஆற்றினார். நினைவுரையை வை.பால சுப்பிரமணியம் ஆற்றினார். மலர் வெளியீடு தொடர்பாக கண்ணோட்டத்தை ம.பா.மகாலிங்க சிவமும் வெளியீட்டுரையை திருமதி சிவமலர் அனந்தசயனும் நிகழ்த்தினர். விழாவுக்கு வருகை தந்த அறிஞர்கள், பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள், கலைஞர்கள் மற்றும் ஆர்வலர்களையும் நன்றியுரையை அமரர் பொன்னம்பலத்தின் மகன் கந்தேஸ்வரன் நிகழ்த்துவதையும் காணலாம். (36)

# கலாநிதி ஓ.கே. குணநாதனுக்கு பன்னாட்டு குழந்தை இலக்கிய விருது




சுமார் 65 ஆயிரம் மாணவர்களையும் 2 ஆயிரத்து 500 விரிவுரையாளர்களையும் மருத்துவத்துறை, பொறியியல்துறை, கலைத்துறை, மொழித்துறை எனப் பல்துறை கொண்டு இந்தியாவின் முதன்மைப் பல்கலைக்கழகமாகத் திகழும் எஸ்.ஆர்.எம்.பல்கலைக்கழகம் தமிழ்மொழி, இலக்கியம், பண்பாடு மேன்மைகளைக் குறிக்கோளாகக் கொண்டு ஆண்டு தோறும் தமிழ்



இலக்கியப் படைப்பாளிகள் 12 பேருக்கு தமிழ்ப்பேராய பன்னாட்டு இலக்கிய விருதையும் சுமார் 50 லட்சம் ரூபா பணப்பரிசையும் வழங்கி வருகிறது.
2016 ஆம் ஆண்டுக்கான 5 வது ஆண்டு விருது வழங்கும் நிகழ்வு கடந்த பெப்ரவரி மாதம் 8 ஆம் திகதி எஸ்.ஆர்.எம்.பல்கலைக்கழகத்தின் முனைவர் தி.பொ.கணேசன் அரங்கில் நடைபெற்றது. பல்கலைக்கழக வேந்தர் முனைவர் தா.இரா.பாரிவேந்தர் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் சுமார் 4 ஆயிரம் எழுத்தாளர்கள், தமிழறிஞர்கள், மாணவர்கள் கலந்து கொண்டனர்.
இந்த நிகழ்வின்போது சொட்டுத்தண்ணீர் என்ற சிறந்த சிறுவர் நூலை எழுதிய மட்டக்களப்பைச் சேர்ந்த கலாநிதி ஓ.கே.குணநாதன் சிறுவர் இலக்கியத்திற்கான தமிழ்ப்பேராய பன்னாட்டு குழந்தை இலக்கிய விருதும் நான்கு இலட்சம் ரூபா பணப்பரிசும் வழங்கிக் கௌரவிக்கப்பட்டார். எஸ்.ஆர்.எம்.பல்கலைக்கழகத்தினால் படைப்பிலக்கியத்துக்காக வழங்கப்படும் விருது இந்தியர் தவிர்ந்த எழுத்தாளர் ஒருவர் பெறுவது இதுவே முதற் தடவையாகும். 38 வரு டங்களாக இலக்கியப்பணி ஆற்றி வரும் கலாநிதி ஓ.கே.குணநாதன் இதுவரை சுமார் 40 குழந்தை இலக்கிய நூல்களைத் தமிழுக்குத் தந்துள்ளார். இவர் நவீனத்துவ குழந்தை இலக்கியத்தின் முன்னோடியாகத் திகழ்கின்றார். நவீனத்துவ கவிதை, நவீனத்துவ சிறுகதை, நவீனத்துவ நாவல், நவீனத்துவ நாடகங்கள் போன்றன பேசப்படுவது போல நவீனத்துவ சிறுவர் இலக்கியத்துறையில் ஆழக்கால் பதித்துள்ளமைக்கு இவரின் படைப்புக்கள் சான்றாகும்.
இந்தியாவில் இவருடைய குழந்தை இலக்கியப் படைப்புக்கள் பெரும் கவனத்திற்குள்ளாக்கப்பட்டுள்ளன. இவர் எழுதிய குழந்தை இலக்கிய நூல்களுக்காக ப் பல தடவைகள் இலங்கையிலும் வெளிநாடுகளிலும் விருதுகளை வென்றுள்ளார். சிறுவர் இலக்கியத்துக்காக இந்தியாவில் இவர் பெற்ற விருதுகளில் செம்பணிச் சிகரம் விருது, குழந்தைக் கவிஞர் அழ.வள்ளியப்பா வாழ்நாள் சாதனையாளர் விருது, திருப்பூர் விருது, தமிழ்நாடு கலை இலக்கி யப் பெருவிருது, சின்னப்ப பாரதி அறக்கட்டளை விருது, திருப்பூர் தமிழ்ச்சங்க விருது போன்றவை குறிப்பிடத் தக்கவை. இலங்கயில் 8 தடவைகள்குழந்தை இலக்கியத்துக்காக அரச சாகித்திய விருதுகளையும் சான்றிதழ்களையும் பெற்ற பெருமை இவருக்கு உண்டு. இவருடைய நூல்கள் ஆங்கிலம், சிங்களம், மலையாளம் ஆகிய மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டிருப்பது குறிப்பிடத் தக்கது. மட்டக்களப்பு அமிர்தகழியைச் சேர்ந்த இவர் இலங்கை இளைஞர் நாடாளு மன்றத்தில் உதவிப்பணிப்பாளராக இருந்து ஓய்வு பெற்றவர். தற்பொழுது மதுரை காமராசர் பல்கலைக்கழகத்தின் இந்திய இலங்கை ஒருங்கிணைப்பாளராகப் பணிபுரிகின்றார். இவர், குழந்தை இலக்கியத்தை முறையாகப் பயின்று எழுதுவது ஆரோக்கியமான குழந்தை இலக்கியத்தின் அடையாளமாகும்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





## கவிதைத் தொகுப்பு நூல் வெளியீடு

தென்மராட்சி வயலூரான் எழுதிய ' நெஞ்சுறுத்தும் நிஜங்கள் ' கவிதைத் தொகுப்பு நூல் வெளியீடு அண்மையில் மட்டுவில் மாதுமை கல்வி நிலைய மண்டபத்தில் இடம்பெற்றது. கல்வி நிலைய இயக்குநர் சி.சிவகாந்தன் தலைமையில் நடைபெற்ற விழாவுக்கு முதன்மை விருந்தினராக ஓய்வுநிலை அதிபர் க.அருந்தவபாலனும் சிறப்பு விருந்தினராக தென்மராட்சி உதவிப் பிரதேச செயலர் செல்வி ரஞ்சனா நவரத்தினமும் கலந்து கொண்டனர்.

நூல் வெளியீட்டுரையை தென்மராட்சி பிரதேச செயலக கலாசார அலுவலர் சி.சிவ முகுந்தனும் ஆய்வுரையை பருத்தித்துறை பிரதேச செயலர் கவிஞர் த.ஜெயசீலனும் நிகழ்த்தினர். நூலின் முதற் பிரதியை சாவகச்சேரி திருக்கணித பதிப்பக முகாமையாளர் கா.சிவஞானசுந்தரம் தம்பதியினர் பெற்றுக் கொண்டனர். (9)



## சிலுவைப் பேரணி

தவக்காலத்தையொட்டி பாசையூர் புனித அந்தோனியார் ஆலய மக்களும் மணியந்தோட்டம கர்த்தர் ஆலய மக்களும் கூட்டாக மேற்கொண்ட மாபெரும் சிலுவைப்பாதைப் பேரணியில் சிலுவை தாங்கிய இயேசுவின் திருவுருவம் பவனியாக எடுத்துவரப்படுகிறது. பாசையூரில் தொடங்கி மணியந்தோட்டத்தில் நிறைவடைந்த பேரணியில் பெருமளவு பக்தர்கள் கலந்து கொண்டனர். (135)

50 வருட காலமாக யாழ் நகரில் இயங்கிவரும் உங்கள் அபிமான

M 89V மைதிலி நகைமாடம்

89V கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.



இன்று (12.04.2017) புதன்கிழமை தொடக்கம் மைதிலி நகைமாட ஸ்தாபகர் **ஐயம்பிள்ளை நடராசா** அவர்களின் **70 ஆவது (14.04.2017)** பிறந்த தினத்தை முன்னிட்டு புதுப் பொலிவுடன் பிரகாசமாக அதே இடத்தில் இயங்குகின்றது என்பதை எமது மதிப்புக்குரிய வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

**வாடிக்கையாளர் அனைவருக்கும் ஓர் அரிய சந்தர்ப்பம்**

அட்சய திருதியையை முன்னிட்டு ஏப்ரல் முதலாம் திகதி தொடக்கம் ஏப்ரல் 29ஆம் திகதி வரை எம்மிடம் நகைகளை வாங்குபவர்களுக்கு மைதிலி நகைமாடம் வழங்கும் மூன்று சிறப்பு பரிசுகள் காத்திருக்கின்றன. மேலும் 2 பவுணுக்கு மேல் நகைகள் கொள்வனவு செய்யும் அனைத்து வாடிக்கையாளர்களுக்கும் தங்க நாணயம் வழங்கப்படும்




**அட்சய திருதியை**

**அர்த்தமுள்ள அட்சய திருதியில் பொன், பொருள் வாங்கினால் செல்வம் பெருகும் என்பது அசைக்க முடியாத நம்பிக்கையாகும்.**

செல்வத்துக்கு அதிபதியான குபேரன் நான் இழந்த சாங்க நிதி, பதும நிதிகளை பெற்றது அட்சய திருதியை நாளில் தான். பாண்டவர்கள் வன வாசத்தின் போது சூரியனிடம் இருந்து அள்ள அள்ள குறையாத அட்சய பாத்திரம் பெற்றது இந்த நாளில் தான். அதே போல் மணிமேகலையும் இந்த நாளில் தான் அட்சய பாத்திரம் பெற்றுள்ளார். ஆம் உங்கள் சௌபாக்கியம் குறையாத வாழ்வின் அதிர்ஷ்டம் பெருகிட தூய தங்க ஆபரணங்களை உங்கள் ஒவ்வொருவரது இல்லத்துக்கு எடுத்துச் செல்லத் தவறாதீர்கள்.

மேலும் 10 ஆறுதல் பரிசில்களையும் பெற்று மகிழுங்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அம்பலவாணர் கலையரங்கத் திறப்பு விழா

புங்குடுதீவு கலைப்பெருமன்றத்தின் அம்பலவாணர் கலையரங்க திறப்புவிழா நிகழ்வுகள் எதிர்வரும் 15,16 ஆம் திகதிகளில் கொண்டாடப்படவுள்ளன. முதல் நாள் நிகழ்வாக 15 ஆம் திகதி சனிக்கிழமை காலை 9 மணியளவில் வடக்கு மாகாண ஆளுநரின் செயலாளர் இ.இளங்கோவன் தலைமையில் இடம்பெறவுள்ளது.

இந்த நிகழ்வில் முதன்மை விருந்தினராக வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் கலந்துகொள்ளவுள்ளார். மதிப்புறு விருந்தினர்களாக வடக்கு மாகாண கல்வி அமைச்சர் த.குருகுலராஜா, விவசாய அமைச்சர் பொ.ஐங்கரநேசன், வடக்கு மாகாண சபையின் பிரதம செயலாளர் எ.பத்திநாதன், யாழ்ப்பாண மாவட்டச் செயலர் நா.வேதநாயகன், ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர்.

முதலாம் நாள் நிகழ்வின் மாலை நிகழ்வுகளுக்குப் பேராசிரியர் கா.குகபாலன் தலைமை தாங்குவதுடன் முதன்மை விருந்தினராக வடக்கு மாகாண சபையின் அவைத்தலைவர் சி.வி.கே.சிவாஞானம் கலந்துகொள்ளவுள்ளார். மதிப்புறு விருந்தினராக யாழ்ப்பாணப் பல்கலைக்கழக முன்னாள் துணை வேந்தர் பொ.பாலசுந்தரம்பிள்ளை கலந்துகொலவுள்ளார்.

இரண்டாம் நாள் நிகழ்வு முற்பகல் 9 மணியளவில் சட்டத்தரணி மு.நேமிநாதன் தலைமையில் இடம்பெறவுள்ளது. இந்த நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக நாடாளுமன்ற உறுப்பினர் மாவைசேனாதிராஜா கலந்துகொள்ளவுள்ளார். மதிப்புறு விருந்தினர்களாக நாடாளுமன்ற உறுப்பினர்களான சி.சிறிதரன், ஈ.சரவணபவன், ஆகியோரும், வடக்கு மாகாண சபை உறுப்பினர்களான க.விந்தன், பா.கஜதீபன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

இரண்டாம் நாள் நிகழ்வின் மாலை நிகழ்வுகள் கலைப் பெருமன்றத் தலைவர் சு.நித்தியானந்தன் தலைமையில் நடைபெறவுள்ளது. இந்த நிகழ்வுக்கு முதன்மை விருந்தினர்களாக சிறுவர் மற்றும் மகளீர் விவகார இராஜாங்க அமைச்சர் திருமதி விஜயகலா மகேஸ்வரனும், இந்திய துணைத்தூதுவர் ஏ.நடராஜனும் கலந்துகொள்ளவுள்ளனர். (8)

# மாதவம் புரிந்து மண்ணுக்குள்ளே ஓவியமாய் ஜொலித்தவரே ஆதவன்

(20 ஆம் பக்கத் தொடர்ச்சி)

நாடகத்துறையில் அமரர் பொன்னம்பல ஐயாவின் பங்களிப்பு விசாலமானதைக் குறிக்கும் முகமாக, நாடகப் பேரரசு கலையரசு சொர்ணலிங்கத்தின் சேவைக்குப் பதக்கம் சூட்டியதுபோல் அவரது ஓவியம் பளிச்சிட்டது.

அவரது மீசை, அவரது பொல்லு, அவரது முக்கால் சட்டை, அவரது மைப் பேனா, சட்டையில் தொங்கும் பொத்தான், பரமாஸ் வேட்டியும், பரமாஸ் சால்வையும், நீண்ட தோப்றாச் சட்டைக்குள்ளிருந்து எட்டிப்பார்க்கும் கைலேஞ்சிக் கைக்குட்டை உத்தூளனமாய்ப் பரவிய திருநீறு, பூரண சந்திரனாய்க் குளிர்ந்த சந்தனப் பொட்டு, வெள்ளிக்கம்பிகளை நறுக்கி வளைத்து எடுத்தாற்போல தலைமுடி வார்ப்பு, குழந்தை சிரித்தாற்போல் மலர்ந்த ரோஜா முகம் யாவற்றையும் ஒருங்கே சேர பாலிதமாக வரைந்தவர் தான் அமர தேவர் பொன்னம்பலம் ஐயா. எந்த ஒரு வரையும் அம்சம் தவறாமல் அச்சொட்டாகக் கீறுவதென்பது தெய்வீகமேயொழிய வேறொன்றுமில்லையெனலாம்.

``மனிதருள்ளும் தேவருண்டு
மாண்புமுண்டு.
கனியமிர்தம் போலவரைத்
தெரிவதுண்டு!" என்பதுபோல பொன்னம்பலம் ஐயாவும் தேவராக உயர்த்தப்படுகின்றார். அவரது பிள்ளைகளும் அவரைப் போற் றும் பேறினால் வெல்லப்படுகின்றார்கள்.

மேலுமொரு ஓவியப் படைப்புக்காகத் தனது உடல் பொருள் ஆவி உழைப்பைக் கொட்டி அளவெட்டிக்கு உயிரூட்டிய ஒரு பெரியவரின் படம் தான், மயில்வாகன உபாத்தியாயரின் படமாகும். அவரும் ஒரு தேவரே.

கும்பழாவளைப் பிள்ளையாரை உலகறியச் செய்த பெருமை மயில் வாகனம் ஐயாவையே சாரும். அத்தகு பெரியாரை, செக்கச் சிவந்த மேனி ததும்ப, கீழ்நோக்கி விரைந்த பஞ்சு நிறத் தாடி நிரம்ப, தூய வெண்ணிறப் பருத்தி வேட்டியும் சால்வையும் அரையில் கட்டி விளங்க, கந்தபுராணக் கலாசார ஒழுக்கம் உடலெங்கும் பிரகாசிக்க ஆதவன் தானும் மயில்வாகன வடிவமாக மாறி அவருக்கு உயிர் கொடுத்தார். முன்னாள் அரச அதிபர் ம.ஸ்ரீகாந்தா தனது தந்தையாரை வானுலகில் இருந்து வணங்க வழி புரிந்தவர் பொன்னம்பலம் ஐயாவேதான். ஆதலால் அவர் வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படுகிறார். இன்று நூற்றாண்டு காணும் அமரர் பொன்னம்பலம் ஐயாவைப் பெருமகனாகவும், திருமகனனாகவும் குருவரனாகவும், கலாநிதியாகவும் வணங்குவதற்கும், வாழ்த்துவதற்கும் அளவை மண் அவாக் கொள்கிறது. இவரது தொல்பொருள் சேமிப்பு பழைய கால நாணயம் சேகரிப்பு, நடன நாடக ஒப்பனைக் காட்சிகள், சிவ தாண்டவங்கள், இவை சார்ந்த கட்டுரைகள், கோப்புக்கள், சிற்பங்கள், சித்திரங்கள், திரைசீலைகள் முகமூடிகள், அணிகலன்கள், இசைக் கருவிகள், மனோதர்ம அலங்காரங்கள், மங்கள சொரூபங்கள் யாவற்றையும் அவர் வாழும் பொழுதே யாம் அனுபவித்துள்ளோம். சிங்களச் சகோதரர்களின் அரவணைப்பும், முன்னாள் யாழ். மாவட்ட அரச அதிபர் விமல் அமர சேகராவின் முழு அவதானமும் இவர் பால் இருந்த நிலையில் தமிழ் பௌத்த இஸ்லாமிய சகவாழ்வு வேண்டப்பட்டபோது இந்து மத முதன்மையாளராக அங்கீகரிக்கப்பட்ட அமரர் பொன்னம்பலம் ஐயா வர்துவை சிங்கள மகா வித்தியாலய முன்னாள் அதிபர் டி.டி.நாணயக்காரவினால் ஒரு சிறந்த கலைஞனாக பரிந்துரை செய்யப்பட்டபோதும் அரச விருதுகளை அவர் சொந்தமாக்க விரும்பவில்லை. இவரது ஆற்றல்களையும், திறமைகளையும் ஒரு பல்கலைக்கழகம் ஆராயுமாயின் கலாநிதி என்ற பட்டம் இவரைக் கையெடுத்துக் கும்பிடுமே! இப்போது எல்லாம் மாறியே! பணமும் முகமனும், விளம்பரமும், பந்தமும் ஒரு கலைஞனை ஒருபோதும் வாட்டுவதில்லை.

**மாதவம்**

கந்தரோடையும் 'அளவெட்டியும்' குடும்பமும் செய்த மாதவத்தின் பயனாக, மண் மகிழ, மண் பயனுற, மண் ஈடேற, மண்ணுக்குள்ளே பொன்னாக விளைந்து, மண்ணுக்குள்ளே ஓவியமாய் ஜொலித்த மன்னவனாக பொன்னம்பலம் ஐயா அன்றும் இன்றும் என்றும் சூரிய சந்திரர்போல் நீடு வாழ்வார் என்பது நூற்றாண்டுக் குழுவினரின் வேதமாக ஒலிக்கிறது. உண்மையிலேயே அவரது ஓவியக் கனவு பலித்திட, அவர் அளவையில் வாழ்ந்து அனுபவித்த அந்த மண்ணில் அவரது முழு உருவச் சிலையினூடாக அவர் உயிர் பெறவேண்டும். சிறுவர்களுக்கான அழகியல் கலைக்கூடம் அவரது பெயரால் உச்சரிக்கப்பட வேண்டும். அவரது பிள்ளைகள் அதற்குப் பக்கபலமாக விளங்குவார்கள். அளவையம்பதியும் இந்த முயற்சிக்காக மாதவம் செய்கிறது. நிச்சயம் வெற்றி பெறும்! பொறுத்திருக்கலாமே!

# மரண அறிவித்தல்

## திருமதி றொபேட் புளோறன்ஸ் இமாக்குலேற்றா



**அன்னை மடியில்**
**30.09.1956**

**ஆண்டவன் அடியில்**
**07.04.2017**

யாழ்ப்பாணம், மத்தியூஸ் வீதியைப் பிறப்பிடமாகவும், 17/8, சந்தனமாதா கோயில், 2ஆம் ஒழுங்கை, பாண்டியந்தாழ்வை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி றொபேட் புளோறன்ஸ் இமாக்குலேற்றா 07.04.2017 வெள்ளிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மைக்கல் - ஞானம்மா தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான ஜோசப் பெஞ்சமின் - அன்னம்மா தம்பதிகளின் அன்பு மருமகளும், றொபேட்டின் அன்பு மனைவியும், ஜான்சி, லென்சியா, ஷாலினி, ஷாம் ஆகியோரின் பாசமிகு தாயாரும், சுறைஸ், ஜோண்சன், நிறோஷன் (ஆசிரியர் - மானிப்பாய் இந்துக்கல்லூரி) ஆகியோரின் பாசமிகு மாமியாரும், அதுரியா, அக்ஷல், பெறோன், றொய்ஷன் ஹறிஷன், பிராங்ளின் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிச்சடங்கு இன்று (12.04.2017) புதன்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் பிற்பகல் 3 மணியளவில் யாழ்.மரியன்னை பேராலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு நல்லடக்கத்துக்காக கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்:**
**றொபேட் (கணவர்),**
**ஷாம் (மகன்)**

**17/8, சந்தனமாதா 2ஆம் ஒழுங்கை,**
**பாண்டியந்தாழ்வு, யாழ்ப்பாணம்.**

**077 302 4445, 077 315 1175**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எமது கல்விச் சுற்றுலா



*(சென்றவாரத் தொடர்ச்சி)*

**இஸ்லாமியப் பெண்**

அங்கு நின்ற ஓர் இஸ்லாமியப் பெண் அங்கு நடைபெறும் தொழிற்பாடுகளை விளங்கப்படுத்தினார். இலங்கையிலேயே செம்மலையிலிருந்து நிலாவெளி வரையான பகுதியே அதிக கனிய வளம் கொண்ட பகுதியெனக் கூறினார். மேலும் கனியப் பொருள்களைப் பெறும் முறையையும் விளங்கப்படுத்தினார். அந்தக் கனியவளம் மூலம் பிரித்தெடுக்கப்படும் கனியப் பொருள்களையும் அவை கிடைக்கும் சதவீதத்தையும் அவை பிரித்தெடுக்கும் முறையையும் அவற்றின் மூலம் உற்பத்தி செய்யும் பொருள்களையும் அறிந்து கொண்டோம். அப்படியே நண்பகல் 12.30க்குப் பேருந்தில் ஏறி கும்புறுப்பிட்டிப்பாலம் தாண்டிச் சென்றோம், இது எமது விஞ்ஞானம்சார் அறிவை மேம்படுத்தியது.

1.30 தொடக்கம் 1.45வரை நிலாவெளிக் கடற்கரையில் பொழுதைக் களித்தோம். அங்கேயே எமது மதிய உணவையும் முடித்துக் கொண்டோம். திருகோணமலை மாவட்டத்தின் பிரசித்தி பெற்ற இடமான கிண்ணியா ஏழு வெந்நீர் ஊற்றுப் பகுதிக்கு 2.10க்கு வந்தோம். இராவணன் தனது தாயின் அந்திமக் கிரியையை நிறைவேற்ற ஏழு வெந்நீர் ஊற்றுக்களை நிறுவியதாகக் கேள்விப்பட்டோம்.

அந்த ஏழு வெந்நீர் ஊற்றுக்களும் உயர் வெப்ப நிலையில் சிறிது சிறிது வித்தியாசங்களுடன் காணப்பட்டன. அந்தச் சூழலில் குரங்குக் கூட்டங்களையும் பார்வையிட்டு மீண்டும் 2.45க்கு பேருந்தில் ஏறினோம்.

மாலை 4மணிக்குத் திருகோணமலைத் துறைமுகத்தை அடைந்தோம். அங்கு பெரிய கப்பல்கள் கரைகளிலே காணப்பட்டன. சிமெந்து பெற்றோலியம் என்பவற்றை இறக்குமதி செய்யும் கப்பல்களையே கண்டோம்.

அந்தத் துறைமுகம் மலைகளால் சூழப்பட்ட இயற்கைத் துறைமுகமாகக் காணப்பட்டது. 4.30க்கு பேருந்தில் ஏறி திருகோணமலை விமானநிலையம் தாண்டிச் சென்று கொண்டிருந்தோம். 4.35க்கு மாபிள் கடற்கரையை அடைந்தோம்.

அங்கு குளித்து விட்டு மாலை 6.10க்கு பேருந்துக்குச் சென்று உப்புவெளிப்பகுதியைத் தாண்டிச் சென்று கொண்டிருந்தோம். 7.10க்கு லக்சுமி நாராயணன் கோயிலை அடைந்தோம். அது மிகவும் அழகான அற்புதமான அழகுக் காட்சிகள் நிரம்பிய கோயில்.

**அணையா விளக்கு**

அங்கு நவநாக மகாஜோதி எனப்படும் அணையாத விளக்கு காணப்பட்டது. அங்கு நின்ற அந்தணர் ஒருவர் அந்தக் கோயில் இறைவனின் பெருமைகளைக் கூறினார். அந்தக் கோயில் வழிபாடு எமது மனதுக்கு அமைதியை அளித்தது. பின் தரம் 11 மாணவி பிறித்திகாவின் உறவினர் வீட்டுக்குச் சென்று தேநீர் அருந்திவிட்டுத் திருகோணமலை விபுலானந்தாக் கல்லூரியை அடைந்து அங்கேயே எமது உணவை உண்டு விட்டு உறங்கினோம்.

எமது இரண்டாம் நாள் பயணத்தை காலை 6.10 மணிக்குத் தேவாரம், பெரியபுராணம் மற்றும் பாடசாலைக்கீதம் இசைத்துத் தொடங்கினோம். பின் 7.10க்கு காளி கோயிலுக்குச் சென்று வழிபட்டோம். அன்று சிவராத்திரி தினம் என்பதால் வழக்கத்துக்கு மாறாக எல்லாம் விமரிசையாக நடைபெற்றன.

அந்தக் கோயில் முற்றிலும் சிற்ப வேலைப்பாடுகள் கூடிய இடமாகக் காணப்பட்டது இந்தக் கோயில் எம் கலை உணர்வைத் தூண்டச் செய்தது. பின் 7.45க்கு திருக்கோணேச்சரம் சென்றோம்.

சிவனுக்குரிய நாளில் சென்றதால் அங்கு மக்கள் நிறைந்த கூட்டம் காணப்பட்டது. இந்தக் கோயில் கி.பி.16ஆம் நூற்றாண்டில் போர்த்துக்கேயரால் அழிவுக்குட்பட்டது. தன் தாயின் இயலாமையால் அவர் வணங்கும் பொருட்டு இராவணன் கோணேச்சர மலையை வெட்டியதாகக் கூறப்படுகிறது. அதுவே இங்கு காணப்படும் இராவணன் வெட்டாகும். இவ்வாறு பல விடயங்களை அறிந்த நாம் அங்குள்ள சூழலில் எம் காலை உணவையும் முடித்துக் கொண்டு 10 மணிக்கு திருகோணமலையை விட்டுப் புறப்பட்டோம். கிண்ணியா பாலம் ஊடாகச் சென்று 11.30 அளவில் மட்டக்களப்பை வந்தடைந்தோம். சுமார் நண்பகல்12.30 க்கு பாசிக்குடா கடற்பகுதியை அடைந்த நாம் சொற்ப வேளையில் எம் மதிய உணவை முடித்துவிட்டு அங்கிருந்து புறப்பட்டோம். பின்னர் 2.30 அளவில் மாமாங்கப் பிள்ளையார் ஆலயத்துக்குச் சென்றோம். அங்கிருந்த அந்தணர் சில விளக்கங்கள் அளித்தார். இந்தக் கோயில் சுமார் 8000 ஆண்டுகள் பழைமையானது என்பதையும் உன்னரசுகிரி அரசி ஆடகசவுந்திரிக்கு இராமன் கனவில் அனுக்கிரகித்தபடி தன் குறை நீங்க இந்தப் பகுதிக்கு வருகை தந்தனர் எனும் சிறப்பைக் கொண்டது என்பதையும் அறிந்து கொண்டோம். இது எமக்கு மிகவும் பயனைத் தந்தது. பி.ப.3.20 அளவில் அங்கிருந்து புறப்பட்டோம். பின்னர் 3.50க்குக் கொக்கட்டிச்சோலை சிவன் கோயிலுக்கு வந்தோம். அன்று சிவராத்திரி தினம் என்பதால் பூசைகளும் புனஸ்காரங்களும் மிகவும் விமரிசையாக நடைபெற்றன. அது எமக்கு மனநிறைவைத் தந்தது. அப்படியே பாண்டிருப்பு பிரதேசத்தைத் தாண்டி இரவு 10.30க்கு அம்பாந்தோட்டை மாவட்டத்துக்குச் சென்றோம். அங்குள்ள கதிர்காமக் கிராமத்துக்கு நள்ளிரவு 12.15க்கு வருகை தந்தோம். அங்கேயே நள்ளிரவு தங்கினோம்.

மூன்றாம் நாளும் எம் சுற்றுலா தோத்திரப் பாடலுடனும் பாடாசாலைக் கீதத்துடனும் காலை5.50க்குத் தொடர்ந்தது. கதிர்காமக் கோயிலின் அடிவாரத்தை 6.30 க்கு அடைந்த நாம் சுமார் ஒரு மணித்தியாலத்தில் கதிர்காமக் கோயிலை வந்தடைந்தோம். அங்குள்ள முருகனை வழிபட்டு அதன் மேற்றளத்தில் உள்ள பௌத்த விகாரையையும், சிவன் கோயிலையும் பார்வையிட்டோம். மலையின் உச்சிப்பகுதியில் சில்லெனக் காற்றுவீச புத்துணர்வுடன் மன ஆறுதலையும் பெற்று பிரியமுடியாமல் மலையிலிருந்து கீழே இறங்கினோம். காலை 9.30 க்கு மீண்டும் பேருந்தில் ஏறி எம் பயணம் செல்லக் கதிர்காமம் நோக்கிப் பயணித்தது. 10.35க்கு செல்லக்கதிர்காமத்தை அடைந்து நாம் அங்கும் இறை தரிசனத்தை முடித்துவிட்டு 11.50க்கு மாணிக்கப்பிள்ளையார் ஆலயத்துக்குச் சென்றோம். நண்பகல் 12.15க்கு மாணிக்குப் பிள்ளையார் கோயிலை வந்தடைந்தோம். அந்தக் கோயிலின் புனித தீர்த்தமான மாணிக்ககங்கையில் எம் கால்களை நனைத்து விட்டு மீண்டும் எம் வழிபாட்டைத் தொடர்ந்து நுவரெலியாவை நோக்கிப் புறப்பட்டோம். சுமார் பி.ப.4.30 மணியளவில் நுவரெலியாவை வந்தடைந்த நாம் அங்கிருந்த பிரசித்தி பெற்ற நீர்வீழ்ச்சியான இராவண எலவைப் பார்த்தோம். மலையிலிருந்து ஊற்றெடுத்த அந்த நீர்வீழ்ச்சி ஓர் இரம்மியமான அழகைத் தந்தது. மாலை நேரம் ஆகிவிட்டதால் தங்கும் இடத்தை நோக்கிப் புறப்பட்டோம். கரைப்பகுதியில் அழகிய மலைகளையும் முகில்கள் ஒடுங்கும் காட்சியையும் நீர்வீழ்ச்சிகளையும் பனிப்படலங்களையும் பார்த்து இரசித்துக் கொண்டே சென்றோம். இரவு 9.30க்கு எம் தங்குமிடத்துக்கு வந்து இரவு உணவையும் உண்டு அடுத்தநாளுக்காகக் காத்துக் கொண்டிருந்தோம்.

எம் சுற்றுலாவின் இறுதி நாளன்று மிகவும் சுவாரஷ்யமாக இருந்தது. காலை 6.45க்குப் பேருந்தில்ஏறி சீதா எலியப்பகுதியை நோக்கிப் புறப்பட்டோம். 7.45க்கு சீதா எலியவை வந்தடைந்தோம். இதமான குளிரில் சிறிய சாரல் மழையும் பொழிந்தது. சீதா எலிய என்பது இராவணன் சீதையைக் கவர்ந்து வந்து அடைத்து வைத்த இடமாகும். அது அசோகா வனப்பகுதியில் அமைந்திருந்தது. அனுமான் சீதா தேவிக்கு இராமனின் மோதிரத்தை வழங்க வரும்போது தோன்றிய கால்ப்பாதம் அடையாளப்படுத்தப்பட்டிருந்ததைப் பார்த்தோம்.


அங்கிருந்து புறப்பட்டு ஹக்கல தேசிய தாவரவியற் பூங்காவை காலை 8 மணிக்கு வந்தடைந்தோம். இந்தப் பூங்கா 1861 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்டது. மிகவும் ஆவலுடன் உள்ளே சென்று பன்னத் தாவரங்கள், சிறிய வனப்பகுதி நீருற்றுக்கள், கண்ணாடி வீட்டுக்குள் வளர்க்கப்பட்ட சிறிய பூத்தாவரங்கள் முதலானவற்றைப் பார்வையிட்டு; காலை உணவையும் அங்கேயே முடித்துவிட்டு சில ஒளிப்படங்களும் எடுத்துவிட்டு மீண்டும் 10.30க்கு பேருந்தில் ஏறிப்புறப்பட்டோம்.

நுவரெலியாவின் ஓர் இடத்தில் பொருள்களை வாங்க நேரம் ஒதுக்கித் தரப்பட்டது. அதனையும் முடித்துவிட்டு 11.30க்கு தேயிலைத் தொழிற்சாலைக்குச் சென்றோம். தேயிலைக் கொழுந்துகள் பறிக்கப்பட்டு அவை உலர்த்தப்பட்டு பின் தூளாக்கப்பட்டு தரம் பிரிக்கப்பட்டு நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகிறது என ஆசிரியர் விளக்கம் கூறினார். பி.ப.1.20க்கு பேருந்தில் ஏறி றம்பொட ஆஞ்சநேயர் கோயிலை நோக்கிப் புறப்பட்டோம். இது ஓர் இயற்கை அழகுநிறைந்த இடமாகும். இங்கு மிகவும் பெரிய ஆஞ்சநேயர் சிலை அமைந்துள்ளது. தைசன்ய சாமியாரே இந்தக் கோயிலின் நிர்வாகி என்பதை அறிந்தோம். இந்தக் கோயில் எமக்கு ஆன்மிக உணர்வை அளித்தது. நுவரெலியாவை விட்டு 4மணிக்குப் புறப்பட்டோம். பி.ப. 5.30 அளவில் கண்டிக்கு வருகை தந்தோம்.

எம் சுற்றுலாவின் இறுதி நாள் பேருந்தில் ஆடலும் பாடலும் கோலாகலமாகவே இருந்தது. பேராதனையின் பொறியியல்பீடம், விஞ்ஞானபீடம், கலைப்பீடம் மற்றும் மருத்துவபீடம் முதலானவற்றைக் கண்டு களித்தோம். மாலை 5.30 மணியளவில் பேராதனை தாவரவியல் பூங்காவையும் பார்வையிட்டோம்.

மாலை 6மணிக்குக் கண்டி தலதாமாளிகையை அடைந்தோம். தன் கணவனை உத்தமன் என நிரூபித்து உடன்கட்டை ஏறிய கண்ணகியை பத்தினித் தெய்வமாகக் கருதி சிங்களவர்கள் வழிபட்டனர். இது மிகவும் ஆனந்தத்தைத் தந்தது. தலதாமாளிகையின் வாயிலின் நாகராஜவடிவம் கொண்ட காவற் சிலைகளும் தாவர அலங்காரங்கள் கொண்ட சந்திரவட்டக்கல்லும் கைப்பிடி வரிசைகளையும் பார்த்தோம். யானைத்தந்தங்களால் அலங்கரிக்கப்பட்ட புத்தரின் புனித தந்த தாதுவைப் பார்த்தோம். பின் பத்திரிப்பு எனப்படும் எண்கோண மண்டபத்தையும் பார்வையிட்டோம்.

அங்குள்ள அரும்பொருள் காட்சியகத்துக்குச் சென்றோம். அங்கு அரசரின் ஆடைகள், கைக்குட்டைகள், ஆபரணங்கள், வெண்கலக் கலசங்கள், பௌத்த அடையாளச் சின்னங்களைப் பார்த்தோம். சோலியஸ் மென்டிஸ் எனும் ஓவியரால் வரையப்பட்ட ஹேமமாலாவும் மித்த இளவரசனும் புனித தந்த தாதுவை இலங்கைக்கு கொண்டுவரல் எனும் ஓவியம் பொறிக்கப்பட்டிருந்தது. பெரஹராக் காலங்களில் நீண்டகாலமாகப் புத்தரின் புனித தந்த தாதுவை தாங்கிச் சென்ற ராஜா எனப்படும் யானை 1988ஆம் ஆண்டு இறந்தது. அதன் நினைவாக மருந்தடிக்கப்பட்டு காட்சிப்படுத்தப்பட்டிருப்பதைப் பார்த்தோம். பின் அங்கிருந்து புறப்பட்டோம். ஆடலும் பாடலுமாகச் சென்று முல்லைத்தீவிலுள்ள முறிகண் டியை அதிகாலை 3.30க்கு வந்தடைந்தோம். பின் கிளிநொச்சி இந்தச் சுற்றுலா கல்வி சார்ந்த பல விடயங்களை எமக்கு அளித்தது. மேலும் பல வாழ்க்கை அனுபவங்களையும் நற்பழக்கங்களையும் சுமந்து கொண்டு பிரியமுடியாமல். அனைவரும் பிரிந்து சென்றோம்.







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முச்சக்கரவண்டி ஒன்றை வாடகை அடிப்படையில் பெற்றுக்கொள்ளல் - அறிவுரைப் பத்திரம்

## இலங்கை புகையிரத சேவை

மூன்று மாத காலத்துக்காகப் புகையிரத ஓட்ட பணியாளர் குழு யாழ்ப்பாண புகையிரத நிலையத்துக்கும், தங்குமிட வதிவிடத்துக்கும் இடையே நாளாந்தம் போக்குவரத்துச் செய்வதற்கு முச்சக்கர வண்டி உரிமையாளர்களிடமிருந்து விலைமனு கோரப்படுகின்றது.

**இதற்குரிய அறிவுறுத்தல் மற்றும் கேள்விப் பத்திரம் புகையிரத நிலையப் பொறுப்பதிகாரி - யாழ்ப்பாணம் அலுவலகத்தில் மற்றும் போக்குவரத்து அதிகாரி - அநுராதபுரம் அலுவலகத்தில் 11.04.2017 ஆம் திகதியிலிருந்து 23.04.2017 ஆம் திகதி வரை இலவசமாக விநியோகிக்கப்படும்.**

**இது தொடர்பான சகல விவரங்களையும் பின்வரும் தொலைபேசி இலக்கங்களுக்கு அழைத்துப் பெற்றுக் கொள்ள முடியும்.**

**பிரதம புகையிரத நிலையப் பொறுப்பதிகாரி - யாழ்ப்பாணம் - 021 222 2371**

**போக்குவரத்து அதிகாரி அலுவல்கம் - அநுராதபுரம் - 025 223 5005**

**பிரதேச போக்குவரத்து அதிகாரி,**
**பிரதேச போக்குவரத்து அதிகாரி அலுவலகம்,**
**அநுராதபுரம்.**

(C/22840) (11,17,18)


### குடும்பத்தலைவர்...

தேவராசா (வயது -58) என்பவரே உயிரிழந்தார்.

"கடந்த 5ஆம் திகதி அவருக்குக் காய்ச்சல் ஏற்பட்டுள்ளது. 6ஆம் திகதி தெல்லிப்பழை வைத்தியசாலையில் அவர் சிகிச்சைக்காகச் சென்றபோது மருந்து மாத்திரைகள் வழங்கப்பட்டன. குருதிப் பரிசோதனை எதுவும் அங்கு இடம்பெறவில்லை.

காய்ச்சல் குறையாததால் அவர் கடந்த 8ஆம் திகதி யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்குச் சிகிச்சை பெறச் சென்றார். பரிசோதனையின் பின்னர் அவர் மருத்துவ விடுதியில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டார். எனினும் சிகிச்சை பயனளிக்காது குடும்பத்தலைவர் நேற்று உயிரிழந்தார்" என்று விசாரணையில் தெரிவிக்கப்பட்டது.

அவரது குருதியில் காணப்படவேண்டிய குருதிக் கலங்கள் குறைந்தமையே இறப்புக்குக் காரணம் என்றும் இறப்பு விசாரணையில் தெரிவிக்கப்பட்டது.

திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ந.பிறேமகுமார் விசாரணை மேற்கொண்டு உடலத்தை உறவினர்களிடம் நேற்று ஒப்படைத்தார். (வ-4)


#### லிகிதர் தேவை

திருநெல்வேலியில் இயங்கும் கிட்ஸ் பாக் முன்பள்ளிக்கு கணக்கு லிகிதர் (பெண் பிள்ளை) தேவை.

**தொடர்பு : 077 386 7458**

#### வீடு வாடகைக்கு

3 அறைகள் உள்ள வீடு ஒன்று வாடகைக்கு உள்ளது.

**அச்சுக்கூட ஒழுங்கை, கொக்குவில்.**
**தொடர்பு : 077 543 3049**

#### வாடகைக்கு

யாழ் ஆஸ் பத்திரி வீதியில் கடைகள் வாடகைக்கு உண்டு நிறுவனங்களுக்கும் ஏற்றது. தொடர்பு.0777651826

#### பேக்கரி வேலைக்கு ஆள் தேவை

பாண் தவிர்ந்த ஏனைய பேக்கரி உற்பத்திப் பொருள்கள் செய்வதற்கு நன்கு அனுபவம் உள்ள ஆள் தேவை. நல்ல வேதனம் வழங்கப்படும். பகுதி நேரமாகவும் வேலை செய்யலாம்.

**தொடர்பு : 076 383 8926**

## மாவட்ட அனர்த்த முகாமைத்துவ இணைப்பு அலகு, மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம்

## கேள்வி அறிவித்தல்

தவிசாளர் பெறுகைக்குழு மாவட்ட செயலகம் சார்பாக அரசாங்க அதிபர் / மாவட்ட செயலரால் கீழ் குறிப்பிடப்படும் நிர்மாண வேலைகளுக்கான தகமையுடையோரிடம் இருந்து குறியீடு செய்யப்பட்ட விலைக் கேள்விகள் கோரப்படுகின்றன.

1. விலைக் கேள்வியானது தேசிய போட்டி விலைக்கேள்வியின் மூலம் நடத்தப்படும்.

2. தகைமைகள் பற்றிய தேவைப்பாடுகள் விலைக்கேள்வி ஆவணத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளது.

3. ஆர்வமுள்ள தகைமையுடைய விலைக்கேள்வியாளர்கள் அனர்த்தமுகாமைத்துவ இணைப்பு அலகு, மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் 12.04.2017 ஆம் திகதி தொடக்கம் காலை 9.00 மணியில் இருந்துமாலை 3.00வரை விலைக்கேள்வி ஆவணங்களைப் பரிசோதனை செய்யலாம் என்பதுடன் மாவட்ட உதவிப் பணிப்பாளர், அனர்த்தமுகாமைத்து இணைப்பு அலகு, மாவட்ட செயலகம், யாழ்ப்பாணம் (தொலைபேசி இல.0212221676) அவர்களிடமிருந்து மேலதிக தகவல்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

4. விலைக்கேள்வி ஆவணங்களின் பூரணமான தொகுதியொன்றை அனர்த்த முகாமைத்துவ இணைப்பு அலகு. மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம் எனும் முகவரியில் எழுத்து மூலமான விண்ணப்பமொன்றை சமர்ப்பித்து 12.04.2017முதல் 04.05.2017 ஆம் திகதிவரை காலை 9.00 மணியிலிருந்து மாலை 3.00 மணிவரையான காலப் பகுதியில் மீளளிக்கப்படாத தொகையான 1000/= கட்டணமாக செலுத்தி பெற்றுக்கொள்ளலாம்.

5. பூர்த்தி செய்யப்பட்டு பொதியிடப்பட்ட விலைக்கேள்விகள் யாவும் தவிசாளர் பெறுகைக்குழு, மாவட்ட செயலகம், யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு 05.05.2017ஆம் திகதியன்று பி.ப 2:00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் நேரடியாகவோ அல்லது பதிவுத்தபால் மூலமாகவோ இரு பிரதிகளில் ஒப்படைத்தல் வேண்டும். நேரடியாக ஒப்படைப்பவர்கள் அனர்த்த முகாமைத்துவ இணைப்பு அலகு, மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் இடுதல் வேண்டும். காலந்தாழ்த்தப்பட்ட விலைக் கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்விதாரர்கள் வேலையின் பெயர் மற்றும் கேள்வி இலக்கத்தை தபாலுறையின் இடதுமேல் மூலையில் குறிப்பிடுதல் வேண்டும். கேள்விகள் யாவும் மேல் குறிப்பிடப்பட்ட முகவரியில் நேரடியாக வருகைதர விரும்பும் விலைக் கேள்வியாளர்கள் அல்லது பிரதிநிதிகளின் முன்னிலையில் 05.05.2017ஆம் திகதி பி.ப 2.30 மணிக்கு திறக்கப்படும்.

6. கேள்விகளை ஏற்றுக்கொள்வதும் நிராகரிப்பதும் பெறுகைச் சபையின் இறுதித் தீர்மானத்திற்கு அமைவானதாகும்.

7. கீழ் அட்டவணையில் குறிப்பிடப்பட்ட விலைக்கூறல் பிணையானது கேள்விப்பத்திரம் திறக்கப்படும் திகதியிலிருந்து 90 நாள்களுக்குச் செல்லுபடியாகும் விதத்திலும், கேள்விப்பிணைப்பொறுப்பு 120 நாள்கள் இலக்கமிடப்பட்டும் இருத்தல் வேண்டும்.

8. கேள்வி கோரப்பட்டவிடயம் தொடர்பான முற்கூட்டம் மாவட்டச் செயலகத்தில் 28.04.2017 ஆம் திகதி மு.ப. 10.30 மணிக்கு நடைபெறும்.

| கேள்வி இல | வேலைவிபரம் | மதிப்பீட்டுத் தொகை (மில்லியன்) | ஒப்பந்தகாலம் (மாதம்) | தேவையான தரம் | கேள்வி பிணைத் தொகை (ரூ) | மீளளிக்கப் படாத தொகை (ரூ) |
|---|---|---|---|---|---|---|
| JF/GA/DDMCU/FMP/ 2017/01 | நல்லூர்பிரதேசசெயலகப் பிரிவிற்குட்பட்ட பறவைக்குள வெள்ளவாய்க்கால் மேம்படுத்தல் | 5.0 | 03 | C7 | 49,800.00 | 1000.00 |
| JF/GA/DDMCU/FMP/ 2017/02 | கோப்பாய் பிரதேச செயலகப் பிரிவிற்குட்பட்ட புத்தூர் - 9ஆம் மைல்கல் மற்றும் புத்தூர் கிழக்கு வெள்ளவாய்க்கால் மேம்படுத்தல் | 5.0 | 03 | C7 | 49,800.00 | 1000.00 |
| JF/GA/DDMCU/FMP/ 2017/03 | ஊர்காவற்றுறை பிரதேச செயலகப் பிரிவிற்குட்பட்ட சூரியாவத்தைப் பகுதியில் வெள்ளவாய்க்கால் மேம்படுத்தல் | 5.0 | 03 | C7 | 49.800.00 | 1000.00 |
| JF/GA/DDMCU/FMP/ 2017/04 | ஊர்காவற்றுறை பிரதேச செயலகப் பிரிவிற்குட்பட்ட சூரியாவத்தைசுரு வில் உவர்நீர்த் தடுப்பனை மேம்படுத்தல் | 5.0 | 03 | C7 | 49,800.00 | 1000.00 |

நா.வேதநாயகன்
அரசாங்கஅதிபர் / மாவட்டச் செயலாளர்
யாழ்ப்பாணமாவட்டம்.

## மரணஅறிவித்தல்



## திரு.நல்லதம்பி ஆறுமுகம்

**( MANTEX,யோகா ஆரணியம் )**


காரைநகர், கருங்காலியைப் பிறப்பிடமாகவும், கொழும்பு பம்பலப்பிட்டியை வதிவிடமாகவும் கொண்ட திரு.நல்லதம்பி ஆறுமுகம் 10.04.2017 திங்கட்கிழமை அன்று காலமானார். அன்னார் அன்னலட்சுமியின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற நல்லதம்பி - இலட்சுமி ஆகியோரின் அன்பு மகனும், அரன், நவநீதன், உதயன், அமுதினி, அனுசியா ஆகியோரின் அன்புத் தந்தையும், கேமலதா, அமுதா, யோகதர்ஷினி,ஆரா அமுதன் ஆகியோரின் மாமனாரும், மணிஷ், ஜெய்ஷ்னவி, மோஹித் ராம், தனுஷ்கா, அனன்னியா ஆகியோரின் பேரனுமாவார்

அன்னாரின் ஈமைக்கிரியைகள் 13.04.2017 வியாழக்கிழமை காலை 7.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, காலை 10.00 மணியளவில் தகனக்கிரியைக்காக பொரளை இந்துமயானத்திற்கு பூதவுடல் எடுத்துச்செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல் : மனைவி,பிள்ளைகள்,மருமக்கள்
22,பெல்டோனா அவெனியு,பம்பலப்பிட்டி. தொ.பேசி : 0112506497,0721040369

## மரண அறிவித்தல்

பிறப்பு
12
.
06
.
1940



இறப்பு
08
.
04
.
2017

## கனகசபை ஆறுமுகவடிவேல்

கோப்பாய் வடக்கு, கோப்பாயை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கனகசபை ஆறுமுகவடிவேல் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கனகசபை-வள்ளிப்பிள்ளை தம்பதிகளின் சிரேஷ்ட புதல்வனும், ஜெரல்டீன் சரோஜாவின் அன்புக்கணவரும் திருச்செல்வத்தின் (பிரான்ஸ்) அன்புச் சகோதரனும், அனாவின் (பிரான்ஸ்) மைத்துனரும், அஜித் ராஜேந்திரகுமார் (ஜேர்மனி), ரஞ்சித் சைலேந்திரகுமார் (ஆனைக்கோட்டை), சுஜித் விஜேந்திரகுமார் (அமெரிக்கா), லலித்லக் ஷேந்திரகுமார் (கொழும்பு) ஆகியோரின் பாசமிகு தந்தையும், ஷெரீன் (ஜேர்மனி), ஜனார்த்தனி (ஆனைக்கோட்டை), ராஜி (அமெரிக்கா), ஷாந்தி (கொழும்பு) ஆகியோரின் அருமை மாமனாரும், கிஷானி, ஷெரோனா, அபிஷேக், லிடியா, கேஷ்யா, செலினா, நிதீஷ் ஆகியோரின் அன்புப் பேரனும், நவராஜா (உரும்பிராய்), காலஞ்சென்ற ஜெயமணி (செட்டிகுளம்) மற்றும் வசந்தாதேவி (ஜேர்மனி), காலஞ்சென்ற கமலாதேவி (கனடா) ஆகியோரின் உடன்பிறவா சகோதரனும், மேற்றில் (கொழும்பு), ஜெரி (சிங்கப்பூர்) ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (11.04.2017) செவ்வாய்க்கிழமை நடைபெற்றது. இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**கோப்பாய் வடக்கு,**
**கோப்பாய்.**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# 31 ஆம் நாள் ஆத்மசாந்தி பிரார்த்தனை அழைப்பு



கடந்த 13.03.2017 திங்கட்கிழமை சிவபதம் அடைந்த எங்கள் குடும்பத்தலைவி

அமரர்

## பிள்ளையாமணி இராசரட்ணம்

அவர்களின் வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் இன்று (12.04.2017) புதன்கிழமை மு.ப 11.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற உள்ளது. அத்தருணம் குடும்பசகிதம் வருகைதந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொ ள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

**கலைவாணி வீதி,**
**கோண்டாவில் வடக்கு,கோண்டாவில்**

**குடும்பத்தினர்**

# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி ஆராதனையும்

**பூலோகம்**
10 . 02 . 1971



**பரலோகம்**
13 . 03 . 2017

கடந்த 13.03.2017 திங்கட்கிழமை கர்த்தருக்குள் நித்திரை யடைந்த எமது குடும்பத்தலைவர்

## அமரர் தவரட்ணம் மகிமைராஜா ( ராசன்)

அவர்களின் நன்றி ஆராதனை நாளை (13.04.2017) வியாழக்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் **திவ்ய மஹால் மண்டபத்தில்** (இல.1001, வண்ணார்பண்ணை, கே.கே. எஸ். வீதி, தட்டாதெருச்சந்தி, யாழ்ப்பாணம்) நடைபெறும் அத்தருணம் தாங்களும் தங்கள் குடும்பசகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

எமது குடும்பத் தலைவரின் மரணச்செய்திகேட்டு பல வழிகளிலும் ஆறுதல் கூறிய அனைத்து அன்புள்ளங்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்வதோடு இந்த அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொண்டு அனைவரையும் வருகைதருமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

**இல.58,அம்மன் வீதி,**
**கொக்குவில் கிழக்கு,**
**கொக்குவில்.**

**(அன்பு மனைவி) ம.சிவகனி**
**மகன் ம.சரண்ஜன் மற்றும் சகோதரர்கள்**


# INSTITUTE OF MEDICAL SCIENCES
## Manipay



(அரசாங்கத்தால் அங்கீகரிக்கப்பட்ட தனியார் தாதியர் பயிற்சிப்பாடசாலை)

**புதிய இலவச கற்கைநெறிகள் ஆரம்பம் 2017/2019**

★ **Diploma in Nursing (Three year)**
**தகைமை :** க.பொ.த. (உயர்தரம்) - எந்த துறையாயினும் 3 பாடங்களிலும் சித்தி
**அல்லது**
க.பொ.த. (சாதாரணதரம்) அடிப்படையில் 6 பாடங்களில் சித்தியுடன் குறைந்தது ஒருவருட அடிப்படை (Certificate Level) சுகாதார கற்கை.

★ **Certificate in Health Care (One year)**
**தகைமை :** க.பொ.த. (சாதாரண தரம்) அடிப்படையில் 6 பாடங்களில் சித்தி.

➤ தெரிவுப் பரீட்சையின் அடிப்படையில் புலமைப்பரிசில் வழங்கப்படும்.

**எம்மால் வழங்கப்படும் ஏனைய சேவைகள்**
நரம்பு நோய்கள் தொடர்பான புனர்வாழ்பு சிகிச்சை மையம்.
சுகாதார உதவியாளருக்கான பயிற்சிகள்.
தொழில் வழிகாட்டல் பயிற்சி பட்டறைகள்


**விண்ணப்பப் படிவங்களை கீழ்வரும் முகவரி மற்றும் எமது இணைய தளத்திலும் பெற்று பூரணப்படுத்தி எதிர்வரும் 23.04.2017 இற்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக அனுப்பவேண்டும்.**

Tel :
021 225 6990/ 021 225 6335/
077 728 6164

INSTITUTE OF MEDICAL SCIENCES
Green Hospital, Manipay.
Web site : www.theims.net
E-mail : theimsjaffna@gmail.com


## மரண அறிவித்தல்

# சின்னத்துரை பாலச்சந்திரன்
## (செல்வம்-மல்ரிஒயில்)



இணுவில் மேற்கைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்துரை பாலச் சந்திரன் கடந்த 09.04.2017 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர் களான சின்னத்துரை - ராசம்மா தம்பதியரின் அன்புமகனும் சித்தானந்தபவானியின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற சின்னத்தம்பி - சின்னம்மா தம்பதியரின் மருமகனும் காலஞ்சென்றவர் களான பாலசுப்பிர மணியம் (மல்ரி ஒயில்), புனிதவதி, பரராசசேகரம் மற்றும் சரஸ்வதி (முன்னைநாள் பிரதேசசபை செயலாளர்), சிவபாக்கியவதி (தேவி-கனடா), பொன்மலர்(வவி), தவமலர் (ரவி), சண்முகலிங்கம் (சிறி-கனடா) ஆகியோரின் சகோதரரும் கோபிகன் (கனடா), கோபிராம், சனாதனி (கனடா) ஆகியோரின் தந்தையும் பத்மாவதி, நித்தியானந்தபவானி, சிவகுமாரன் (கனடா), சோமேஸ்வரி, சோமறஞ்சினி ஆகியோரின் மைத்துனரும் இராமதாஸ், ஸ்ரீகோவர்த்தனி, திவ்ஜா ஆகியோரின் மாமனும் பிரணவன், பிரவீனா, பிரவிக்கா, அஸ்விகா, ஜஸ்வின், அஜன் ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (13.04.2017) வியாழக்கிழமை காலை 9.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக தாவடி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**இணுவில் மேற்கு, இணுவில்.**
**021 224 1884**

**தகவல்:**
**மனைவி, பிள்ளைகள்**

## மரண அறிவித்தல்

# நாகரத்தினம் நிக்ஷன்



**தோற்றம்** 08.06.1994
**மறைவு** 09.04.2017

படித்த மகளிர் குடியேற்றத்திட்டம், மிருசுவிலை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட நாகரத்தினம் நிக்ஷன் 09.04.2017 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் நாகரத்தினம் - யோகமலர் தம்பதிகளின் அன்பு மகனும், தங்கராசா - கண்மணி, காலஞ்சென்ற தம்பு - தெய்வானைப்பிள்ளை ஆகியோரின் பேரனும், சிவதர்சினி (பிரான்ஸ்), சுவேந்தினி, கல்யாணி (லண்டன்), அஜந்தன் (இத்தாலி), சோபிகா ஆகியோரின் பாசமிகு சகோதரனும், சிவபாலராஜா (பிரான்ஸ்), நவீனச்சந்திரன், வரதராஜன் (லண்டன்) ஆகியோரின் மைத்துனரும், திலகரத்தினத்தின் பெறாமகனும், தகீதன், கஜீதன்,ஜஸ்விகா, தரணிகா, கிருஸ்ணிகன், அபிலாஷ் ஆகியோரின் மாமனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (12.04.2017) புதன்கிழமை முற்பகல் 10 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் படித்த மகளிர் குடியேற்ற திட்ட இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**படித்த மகளிர் குடியேற்ற திட்டம்,**
**மிருசுவில்.**

**தகவல்: குடும்பத்தினர்.**

**077 285 6051**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புத்தாண்டு...

சித்திரை வருடப் பிறப்பு அன்று 50 ஆவது நாளை எட்டவுள்ளது. அன்றைய தினம் வவுனியா மாவட்டத்திலுள்ள சகல பொது அமைப்புக்களையும் தங்களுடன் இணைந்து போராட வருமாறு காணாமற்போனோரின் உறவினர்கள் அழைப்பு விடுத்துள்ளனர்.

போரின் இறுதியில் கையளிக்கப்பட்டுக் காணாமற் போனவர்கள், பலவந்தமாகக் கடத்திச் செல்லப்பட்டுக் காணாமற்போனவர்கள் ஆகியோரின் உறவினர்கள் வவுனியாவில் சுழற்சி முறையில் போராட்டம் மேற்கொண்டு வருகின்றனர். போராட்டம் ஆரம்பிக்கப்பட்டு எதிர்வரும் வெள்ளிக்கிழமை சித்திரைப் புத்தாண்டுடன் 50ஆவது நாள் நிறைவடைகின்றது.

இதுவரையிலான தமது போராட்டத்துக்கு வவுனியா மாவட்ட பொது அமைப்புக்கள் எவையும் ஆதரவு வழங்கவில்லை. புதுவருடப் பிறப்பு அன்று மாபெரும் போராட்டத்தை நடத்தத் திட்டமிட்டுள்ளோம். அன்றைய தினம் வவுனியா வர்த்தக சமூகம், பொது அமைப்புக்கள் எல்லாவற்றினதும் ஆதரவைக் கோரி நிற்கின்றோம் என்று கூறியுள்ளார்.

இதேவேளை நேற்று 47 ஆவது நாளாகவும் போராட்டம் தொடர்ந்தது. (த-5)

## சேமலாப...

லாளர்களின் ஊழியர் சேமலாப நிதியின் மீது வரியைச் சுமத்தி அந்த நிதியையும் சூறையாட நடவடிக்கை எடுத்து வருவதாக மக்கள் விடுதலை முன்னணி குற்றம் சுமத்தியுள்ளது.

பத்தரமுல்லையில் அமைந்துள்ள மக்கள் விடுதலை முன்னணியின் தலைமையகத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே கட்சியின் தலைவரும் நாடாளுமன்ற எதிர்க்கட்சி கொரடாவுமான அநுரகுமார திஸாநாயக்க மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

இலங்கையில் ஆயிரத்து 350 பில்லியன் ரூபா ஊழியர் சேமலாப நிதியாகக் காணப்படுகிறது. இந்தப் பணம் அரசின் பணமல்ல. தனியார் துறையில் வேலை செய்யும் தொழிலாளர்களினதும், முதலாளிமார்களினதும் பணமாகும்.

அரசுக்கும் இந்த நிதிக்கும் உள்ள தொடர்பு அதனைப் பொறுப்பாக வழங்குவதாகும். திறைசேரியின் ஊடாகப் பிணைமுறிகள் முறையற்ற விதத்தில் விநியோகிப்பதால் 960 கோடி ரூபா இழப்பு ஏற்பட்டுள்ளது. சில சந்தர்ப்பங்களில் ஊழியர் சேமலாப நிதியால் வீழ்ச்சியடைந்த நிறுவனங்களை அரசு பொறுப்பேற்கிறது.

இவ்வாறான சந்தர்ப்பங்களில் பெரிய அளவிலான இழப்புகள் ஏற்பட்டுள்ளன. எல்லா அரசுகளும் ஊழியர் சேமலாபநிதியுடன் விளையாடியுள்ளன. ஊழியர் சேமலாப நிதியில் 10 வீத வரியை பெற்றுக் கொள்ள அரசு சட்ட உபாய மார்க்கங்களைச் செய்திருந்தது. தேசிய வருமான வரித் திணைக்களம் இன்றைவரை வரியைப் பெற்றுக் கொள்ளவில்லை.

தற்போது நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்க 14 வீத வரியை பெற்றுக்கொள்ளும் உபாய மார்க்கத்தை கையாள எண்ணியுள்ளார். இதற்கு ஒருபோதும் இடமளிக்கமுடியாது. வேலைசெய்யும் மக்கள் கஷ்டப்பட்டு உழைத்த பணத்தின் இலாபம் அவர்களைச் சென்றடைய வேண்டும் என்றார். (த-5)

## நிறைவேற்ற...

கின்றது. சில சந்தர்ப்பங்களில் சிலவற்றைச் செய்வதற்கு அது உதவியாக இருக்கும்.

இவ்வாறு அமைச்சரவை இணைப் பேச்சாளரும், அமைச்சருமான ராஜித சேனாரத்ன தெரிவித்தார்.

தெல்தெனிய மருத்துவமனைக்கான புதிய கட்டடமொன்றை அமைப்பதற்காக அடிக்கல் நடும் நிகழ்வு நேற்று நடைபெற்றது. இதில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் தெரிவித்ததாவது:

1978 ஆம் ஆண்டு நிறைவேற்று அரச தலைவர் முறைமை கொண்டு வரப்பட்ட காலம் முதல் அதற்கெதிராக நான் குரலெழுப்பி வந்துள்ளேன். என்றாலும் சில நேரங்களில் நிறைவேற்று முறைமை இருக்க வேண்டும் எனத் தோன்றுகின்றது.

அமைச்சரவையில் ஏதாவது, ஒரு யோசனை கொண்டு வரப்படும்போது பல்வேறு கருத்துகள் அந்த யோசனை மீது முன்வைக்கப்படுகின்றன. என்றாலும், குறித்த யோசனையின் நன்மை தீமை குறித்து அரச தலைவரின் சட்டப்பிரிவு ஆராய்ந்து இறுதித் தீர்மானம் எடுகின்றது. அவ்வாறான தருணங்களில் நிறைவேற்று முறைமை அவசியம். அவ்வாறான தருணங்களில் நிறைவேற்று முறைமை இருந்தால் நல்லது என்று எனக்குத் தோன்றுகின்றது என்றார். (த-5)

## காய்ச்சலால்...

கடந்த 8ஆம் திகதி சேர்க்கப்பட்ட தோப்பூர், அல்லை நகரைச் சேர்ந்த எஸ்.றிமாஸா (வயது-32) சிகிச்சை பயனின்றி நேற்று உயிரிழந்தார்.

குறித்த பெண்ணின் குருதி மாதிரி பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்ட நிலையில், அவருக்கு இன்புளுவென்ஸா இருந்தமை கண்டறியப்பட்டுள்ளது எனத் திருகோணமலை பொது வைத்தியசாலைப் பணிப்பாளர் மருத்துவர் அனுஷியா ராஜ்மோகன் தெரிவித்தார்.

இதேவேளை, டெங்குக் காய்ச்சல் காரணமாக கோபாலபுரம் நிலாவெளியைச் சேர்ந்த மகாலிங்கம் பிரதீபா (வயது-38) என்பவர் நேற்று உயிரிழந்தார்.

காய்ச்சலால் பீடிக்கப்பட்ட இந்தப் பெண், தனியார் வைத்தியசாலை ஒன்றில் குருதி பரிசோதனை மேற்கொண்டார். இதன்போது அவர் டெங்குக் காய்ச்சலுக்கு உள்ளாகியிருந்தமை தெரியவந்துள்ளது. இதனையடுத்து, திருகோணமலை பொது வைத்தியசாலையில் அவர் நேற்றுச் சேர்க்கப்பட்ட சிறிது நேரத்தில் உயிரிழந்தார் என வைத்தியசாலைத் தகவல்கள் தெரிவித்தன.

திருகோணமலை மாவட்டத்தில் டெங்குக் காய்ச்சல் காரணமாக இதுவரையில் 16 பேர் உயிரிழந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, திருகோணமலை மாவட்டத்தில் 2 ஆயிரம் பேருக்கு மேற்பட்டோர் கடந்த மாதம் டெங்கு நோய்த் தொற்றுக்கு உள்ளாகியிருந்தனர். அவர்களில் 16 பேர் உயிரிழந்தனர். அண்மையில் திருகோணமலைக்குச் சென்றிருந்த அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன, டெங்கு தடுப்பு நடவடிக்கைகளை முன்னெடுக்க அதிகாரிகளுக்கு உத்தரவிட்டிருந்தார். (த-45)

## கூட்டமைப்பை...

தமிழ்த் தேசியக் கூட்ட மைப்புக்கும் இடையிலான உத்தியோகபூர்வச் சந்திப்பு மே மாதம் 12 ஆம் திகதி நடைபெறவுள்ளது.

பன்னாட்டு வெசாக் நிகழ்வுகள் இந்த ஆண்டு இலங்கையில் கொண்டாடப்படுகின்றது. இந்த நிகழ்வில் கலந்துகொள்ளுமாறு இந்தியாவின் தலைமை அமைச்சர் நரேந்திர மோடிக்கு, இலங்கை அரசு அழைப்பு விடுத்திருந்தது. இந்த அழைப்பை ஏற்று அடுத்த மாதம் 11 ஆம் திகதி, தலைமை அமைச்சர் நரேந்திர மோடி இலங்கைக்கு வரவுள்ளார்.

இலங்கைப் பயணத்தின்போது அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன, தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க ஆகியோருடனும் சந்திப்புக்களை நடத்தவுள்ளார். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர்களுடனும் அவர் தனியான சந்திப்பை நடத்தவுள்ளார். (த-5)

## பன்னாட்டு...

கப்படுவதும் சாத்தியமாகவுள்ளது என்று மகிந்த அணி நாடாளுமன்ற உறுப்பினர் உதய கம்மன்பில தெரிவித்துள் ளார்.

அவர் மேலும் கூறியதாவது:

இலங்கையில் போர்க் குற்றம் இடம்பெற்றிருப்பதாகக் கூறி 2010 ஆம் ஆண்டு முதல் பன்னாட்டு நீதிபதிகளை இங்கு கொண்டு வருவதற்கு ஐக்கிய நாடுகள் சபை முயற்சி செய்தது. அதற்காகக் கொண்டு வரப்பட்ட பிரேரணைக்கு எதிராக நாம் நட்பு நாடுகளுடன் சேர்ந்து வாக்களித்தோம்.

2015 இல் எமது ஆட்சி கவிழ்க்கப்பட்டதும் புதிய அரசு இந்தப் பிரேரணையை ஆதரித்தது மட்டுமன்றி இணை அனுசரணையையும் வழங்கியது. தனது நாட்டுக்கு எதிராக ஓர் அரசு இப்படி இணை அனுசரணை வழங்கியமை உலகில் இதுவே முதல் தடவையாகும். இது உலக சாதனையும்கூட.

படையினரைத் தண்டிப்பதற்கான இராஜதந்திரம்தான் இந்த இணை அனுசரணை. ஆனால், இதற்கு இணை அனுசரணை வழங்கிவிட்டு பன்னாட்டு நீதிபதிகளை அனுமதிக்கமாட்டோம் என்று இந்த அரசு கூறுகின்றது. இது மக்களை ஏமாற்றும் செயலாகும்.

பன்னாட்டு நீதிபதிகளை நிராகரிப்பதென்றால் ஐ.நா.வில்தான் நிராகரிக்கவேண்டும். இலங்கையின் நாடாளுமன்றில் நிராகரிக்க முடியாது. அது எடுபடாது. ஐ.நாவில் [illegible] இருந்துவிட்டு இங்கு அதை எதிர்ப்பதன் மூலம் எதுவும் நடக்காது.

பன்னாட்டு நீதிபதிகளை நிராகரிப்பது உண்மையென்றால் ஏன் இந்த அரசு ஐ.நா சபையில் சென்று அந்த எதிர்ப்பை வெளியிடத் தயங்குகிறது?. இந்த முறை இடம்பெற்ற ஐ.நா. மனித உரிமைகள் சபையின் மாநாட்டில் அந்தப் பிரேரணையைத் திருத்தும் வாய்ப்பைத் தவறவிட்டுவிட்டது.

அரசுக்குப் பதிலாக எமது அணியின் சார்பில் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ரியர் அட்மிரல் சரத் வீரசேகரதான் படையினருக்காக வாதாடினார். படையினர் போர்க் குற்றங்களில் ஈடுபடவில்லை என்று நிரூபித்தார். ஆனால், அரசு படையினரைத் தண்டிக்கவே முற்படுகின்றது என்றார். (த-53)

## வாகனம்...

பயனளிக்காது உயிரிழந்தார்.

கிளிநொச்சியில் கடந்த ஞாயிற்றுக்கிழமை பேருந்து மோதி உயிரிழந்தவரின் இறப்பு வீட்டுக்கு இளம் பெண் சென்றுகொண்டிருந்த போதே இந்த விபத்தும் அதனைத் தொடர்ந்து இறப்பும் இடம்பெற்றது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

கிளிநொச்சி, கனகபுரம் சாலையில் நேற்றுமுற்பகல் விபத்து இடம்பெற்றது. சம்பவத்தில் திருநகரைச் சேர்ந்த விஜிதா (வயது-21) என்பவரே உயிரிழந்தார்.

"கடந்த 9ஆம் திகதி அரச பேருந்தும் மோட்டார் சைக்கிளும் விபத்துக்குள்ளாகியதில் மோட்டார் சைக்கிளில் பயணித்த குடும்பத் தலைவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார். அவரது இறுதிக் கிரியைகள் நேற்று முழங்காவிலில் இடம்பெற்றது. அதில் கலந்துகொள்வதற்காக கிளிநொச்சியிலிருந்து முழங்காவிலுக்கு மகேந்திரா ரக வாகனத்தில் 8 பேர் பயணித்தனர். கனகபுரம் சாலையில் வாகனம் கட்டுப்பாட்டை இழந்து சாலையோரம் காணப்பட்ட மதிலுடன் மோதிச் சரிந்தது. வாகனத்தில் பயணித்த அனைவரும் சாலையில் விழுந்து காயமடைந்தனர். உடைந்த மதில் கற்களாலும் அவர்கள் காயமடைந்தனர்.

அவர்களில் குறித்த இளம்பெண் படுகாயமடைந்த நிலையில் கிளிநொச்சி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டிருந்தார். எனினும் சில மணிநேரங்களிலேயே அவர் உயிரிழந்தார்" என்று விசாரணைகளைக் கொண்டு பொலிஸார் தெரிவித்தனர்.

விபத்துக்குள்ளான வாகனத்தின் சாரதி கைது செய்யப்பட்டுள்ளார். வாகனமும் மோசமாகச் சேதமடைந்தது. விசாரணை தொடர்வதாகப் பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (வ-4-35-6)

## நாட்டைப்...

நாடாளுமன்ற உறுப்பினர் நளின் பண்டார தெரிவித்துள் ளார்.

அவர் மேலும் கூறுகையில்,

நாட்டின் முக்கிய பல பிரச்சினைகளுக்குத் தீர்வாகத்தான் இந்தக் கூட்டாட்சி உதயமானது. இந்த அரசு வந்து இரண்டு வருடங்களில் பலமுக்கிய பிரச்சினைகள் தீர்த்து வைக்கப்பட்டுள்ளன. வடக்கு கிழக்கு தமிழர்களின் பிரச்சினைகளைக் கூறலாம்.

20 வருடங்களுக்கும் மேலாக இராணுவத்தின் கட்டுப்பாட்டில் இருந்த மக்களின் காணிகள் பல விடுவிக்கப்பட்டுள்ளன. காணாமற்போனவர்களைக் கண்டுபிடிப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. அதற்காக அலுவலகத்தை அமைப்பதற்கான சட்டவரைவு நிறைவேற்றப்பட்டுள்ளது.

இதைத் தொடர்ந்து அரசியல் தீர்வை வழங்குவதற்கான முயற்சிகளும் முன்னெடுக்கப்படுகின்றன. இந்த அரசு ஆட்சியைக் கையேற்றது முதல் அரசியல் தீர்வுக்கான செயற்பாடுகள் இடம்பெறுகின்றன. அதற்கு ஏற்பவே புதிய அரசமைப்பு கொண்டு வரப்படவுள்ளது.

அந்தப் புதிய அரசமைப்பின் ஊடாக வழங்கப்படவுள்ள அரசியல் தீர்வானது ஒருபோதும் நாட்டைப் பிளவுபடுத்தாது. நாட்டை இரண்டாகப் பிரிக்காமலே அதிகாரப் பகிர்வை நாம் வழங்குவோம். தமிழீழத்தை உருவாக்கும் விதத்தில் அரசியல் தீர்வை வழங்கப் போவதாக மகிந்த அணியினர் பரப்புரை மேற்கொண்டு வருகின்றனர். அதில் எந்த உண்மையும் இல்லை என்றார். (த-5)

## சொந்த...

ராச்சி கூறினார் என்று வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்தார்.

வடக்கு மாகாண முதலமைச்சருக்கும் யாழ். மாவட்டக் கட்டளைத் தளபதி தர்சன கெட்டியாராச்சிக்கும் இடையில் நேற்றுச் சந்திப்பு இடம்பெற்றது. நேற்று மாலை 5.40 மணி முதல் 6.15 மணி வரை முதலமைச்சரின் இல்லத்தில் இந்தச் சந்திப்பு நடந்தது.

இதன் பின்னர் கருத்து தெரிவிக்கும்போதே முதலமைச்சர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

இடம்பெயர்ந்து முகாம்களில் உள்ள மக்களைச் சொந்த இடத்தில் குடியமர்த்தவே இராணுவமும் விரும்புகின்றது. ஆயினும் அதற்குப் பல விடயங்கள் தடையாக இருப்பதாகத் தளபதி குறிப்பிட்டார். அத்தோடு 2012 ஆம் ஆண்டு காலத்தில் இருந்த பல கட்டடங்கள் 2013 ஆம் ஆண்டில் இடிக்கப்பட்டமை வருத்தமளிக்கின்றது எனவும் அவர் தெரிவித்தார். தளபதியுடனான சந்திப்பு சுமுகமாக இருந்தது. ஏனெனில் அவர் மக்களின் பிரச்சினை தொடர்பில் அறிந்து வைத்துள்ளார்.

மக்களின் காணிகளை விடுவிப்பதற்கு உள்ள தடைகள் நீக்கப்படவேண்டும். அதற்குச் சிறிது காலம் பிடிக்கலாம் எனக் குறிப்பிட்டுள்ளார் என்றார். (த-101)

## சித்திரைப்...

இடத்துக்கு வந்து போராட்டத்துக்கு ஆதரவு வழங்கவேண்டும் எனவும் அவர்கள் கோரிக்கை விடுத்துள்ள னர்.

கேப்பாபிலவில் தமிழ் மக்களுக்குச் சொந்தமான காணிகளை மீட்பது தொடர்பான கலந்துரையாடல் நேற்று முற்பகல் 10 மணியளவில் போராட்ட இடத்தில் நடைபெற்றது. இதில் மக்கள் பிரதிநிதிகளையும் கலந்துகொள்ளுமாறு அழைப்பு விடுக்கப்பட்டது.

வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான சிவசக்தி ஆனந்தன், சி. சிவமோகன், வடக்கு மாகாண சபை உறுப்பினர்கள் து. ரவிகரன், க.சிவநேசன் ஆகியோர் மட்டுமே இதில் கலந்து கொண்டனர்.

இதில் கலந்துகொண்ட கேப்பாபிலவு மக்கள் தெரிவிக்கையில்,

நாம் முன்னெடுத்துள்ள அமைதிவழிப் போராட்டம் 42ஆவது நாளாகவும் தொடரும் நிலையில் உறுதியான முடிவுகள் எதுவும் இதுவரை கிடைக்கவில்லை. சித்திரைப் புத்தாண்டுக்கு முன்னர் எமக்குத் தீர்வு கிடைக்கவேண்டும். இல்லையேல் சித்திரைப் புத்தாண்டு எமக்குக் கரிநாள். அன்றைய தினத்தை அனைத்து மக்கள் பிரதிநிதிகளும் எம்முடன் இணைந்து கரிநாளாகக் கடைப்பிடிக்க முன்வரவேண்டும் என்றனர். (த-7)

## பாம்பு தீண்டி...

இதன்போதே, சிறுவனைப் பாம்பு தீண்டியுள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

முல்லைத்தீவு மாவட்டம் மல்லாவி பாலிநகர் கிராமத்தில் நேற்று இந்தச் சோகமான சம்பவம் இடம்பெற்றது. பாலிநகர் மகா வித்தியாலயத்தில் தரம் 6இல் கல்வி பயிலும் அதே கிராமத்தைச் சேர்ந்த நாகேஸ்வரன் விதுசன் (வயது - 10) என்ற சிறுவனே பரிதாபகரமாக உயிரிழந்தார்.

"சிறுவன் தனது வீட்டில் இருந்து சிவபுரம் கிராமத்தில் உள்ள உறவினர் வீட்டுக்கு துவிச்சக்கர வண்டியில் சென்றுள்ளார். சாலையின் குறுக்கே திடீரெனப் பாம்பைக் கண்டு பதற்றம் அடைந்த நிலையில் அவர் திடீரென துவிச்சக்கர வண்டியை நிறுத்த முற்பட்டுள்ளார். துவிச்சக்கர வண்டியின் சக்கரம் பாம்பின் மீது ஏறி சிறுவன் பாம்பின் மேல் வீழ்ந்துள்ளான்.

அதன்போது பாம்பு சிறுவனின் தலையில் பலமாக தீண்டியுள்ளது. விசம் தலைக்கேறிய நிலையில் சிறுவன் மீட்கப்பட்டு மல்லாவி ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார். மேலதிக சிகிச்சைக்காக சிறுவன் கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார். சிறப்புச் சிகிச்சைக்காக அனுராதபுரம் மாவட்ட பொது வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார். தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டபோதும் பயனளிக்காது சிறுவன் உயிரிழந்தார்" என்று விசாரணையில் தெரிவிக்கப்பட்டது. இந்தச் சம்பவம் அந்தக் கிராமத்தையே துயரத்தில் ஆழ்த்தியுள்ளது. மல்லாவிப் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (வ-4-101)

## கிளிநொச்சியில்...

கொண்டனர்.

வெப்பமான காலநிலை தொடர்ச்சியாக நிலவி வரும் நிலையில் நேற்றுமாலை 3 மணியளவில் இவ்வாறு திடீரெனக் கடும் காற்றுடன் மழை பெய்துள்ளது. அதனால் பொன்னகர், பாரதிபுரம், செல்வபுரம் ஆகிய பகுதிகளில் உள்ள வீடுகள் பாதிக்கப்பட்டுள்ளன. அங்குள்ள பயன்தரு மரங்களும் முறிந்து சரிந்தன என்று தெரிவிக்கப்பட்டது.

கடந்த ஞாயிற்றுக்கிழமை மாலை வவுனியாவில் இதே வ்கையில் திடீரெனக் கடும் காற்றுடன் மழை பெய்ததால் பல வீடுகளின் கூரைகள் தூக்கி வீசப்பட்டன. பயன்தரு மரங்கள் முறிந்தன என்பது குறிப்பிடத்தக்கது. (வ-4-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: வித்யா

**மேடம்:** உற்சாக மனப்பான்மையுடன் செயல்படுவீர்கள். தொழில், வியாபார வளர்ச்சியால், தாராள பணவரவு கிடைக்கும். பணியாளர்கள் விண்ணப்பித்த கடனுதவி கிடைக்கும்.

**இடபம்:** உங்கள் செயலில் கவனச் சிதறல் ஏற்படலாம். தொழில், வியாபாரம் சிறக்க, விடாமுயற்சி தேவைப்படும். பணியாளர்கள் பணிச்சுமையைச் சந்திப்பர். பிள்ளைகளின் நற்செயல் மனதுக்கு ஆறுதல் அளிக்கும்.

**மிதுனம்:** எதிர்பார்ப்பு நிறைவேறுவதில் தாமதம் உண்டாகும். தொழில், வியாபாரம், மந்தகதியில் இயங்கும். லாபம் சுமாராக இருக்கும். பணியாளர்கள்பணிச்சுமையைத் திறம்படச் சமாளிப்பர்.

**கடகம்:** பெற்றோரின் அன்பும் ஆசியும் கிடைக்கும். தொழில், வியாபாரத்தில் வளர்ச்சி அதிகரிக்கும். ஆதாயம் பன்மடங்கு உயரும். பணியாளர்கள், நிர்வாகத்தினரின் நன்மதிப்பைப் பெறுவர்.

**சிங்கம்:** அனுபவசாலியின் ஆலோசனையைக் கேட்பது நல்லது. தொழில், வியாபாரத்தில் லாபம் சீராக இருக்கும். பணியாளர்கள், பணி விடயமாக வெளியூர் செல்வர்.

**கன்னி:** சமூகத்தில் அந்தஸ்து உயரும். தொழில், வியாபார வளர்ச்சி இலக்கு, திட்டமிட்டபடி நிறைவேறும். சேமிக்கும் விதத்தில் வருமானம் வரும். பணியாளர்கள், சக ஊழியர்களின் பாராட்டைப் பெறுவர்.

**துலாம்:** அறிமுகம் இல்லாதவர்களிடம் சொந்த விடயம் பற்றிப் பேச வேண்டாம். தொழில், வியாபாரத்தில் மறைமுகப்போட்டி அதிகரிக்கும். லாபம் சுமார். பணியாளர்கள், திடீர் பணிச்சுமையால் அவதிப்படுவர்.

**விருச்சிகம்:** நண்பரிடம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். தொழில், வியாபாரத்தில் வளர்ச்சிக்கான வாய்ப்பு கிடைக்கும். லாபம் உயரும். பணியாளர்கள் சலுகையைப் பெற்று மகிழ்வர்.

**தனுசு:** பிள்ளைகளின் செயற்பாடு பெருமையளிக்கும். தொழில், வியாபாரத்தில் முதலீட்டை அதிகப்படுத்தி லாபம் காண்பீர்கள். பணியாளர்கள், பணியிடத்தில் செல்வாக்குடன் திகழ்வர். பாக்கிப் பணம் வசூலாகும்.

**மகரம்:** மற்றவர் நலனில் அக்கறை கொள்வீர்கள். தொழில், வியாபாரம், வளர்ச்சிக்கான வாய்ப்பைப் பயன்படுத்துவீர்கள். லாபம் படிப்படியாக உயரும். பெற்றோரின் அன்பும், ஆசியும் கிடைக்கும்.

**கும்பம்:** உங்களின் நற்செயலை சிலர் பரிகாசம் செய்யலாம். தொழில், வியாபாரத்தில் குறையைச் சரிசெய்வது நல்லது. ஆதாயம் சுமாராக இருக்கும். பணியாளர்கள், சக ஊழியர்களுடன் கருத்து வேறுபாடு கொள்வர்.

**மீனம்:** கடந்த கால முயற்சிக்குரிய பலன் கிடைக்கும். தொழில், வியாபாரத்தில் மறைமுகப் போட்டி விலகும். லாபம் அதிகரிக்கும். பணியாளர்கள் நிர்வாகத்தின் ஆதரவால் முன்னேறுவர்.













சைக்கிளில் வந்தேன்
"வணக்கம்" என்றாள்.
மோட்டார் சைக்கிளில் வந்தேன்
"எப்படிச் சுகம்" என்றாள்.
காரில் வந்தேன்
"உன்னைக் காதலிக்கிறேன்
"என்றாள்.
அனைத்தும் வாடகை என்றேன்
"போய் வருகிறேன்" என்றாள்.






**இளைய தோழி**

நிர்ப்பந்தத்தின் பெயரில் ஏற்படும் உறவுகள் நிலைப்பதில்லை...!

# அக்சராஹாசன் படத்துக்கு எதிராக போராட்டம்

திருமணத்துக்கு முன்பு பெண்கள் கர்ப்பமாவது தவறில்லை என்பது போன்ற சர்ச்சைக் கருவை மையமாக வைத்து இந்தியில் புதிய படம் தயாராகி இருப்பதாகத் தகவல் வெளியாகியுள்ளது. இந்தப் படத்துக்கு 'லாலி கி சாதி மெய்ன் லாட்டு திவானி' என்று பெயரிட்டுள்ளனர். இதில் திருமணத்துக்கு முன்னால் கர்ப்பமாகும் 18 வயது இளம் பெண் கதாபாத்திரத்தில் அக்சரா ஹாசன் நடித்திருக்கிறார். இவர் ஏற்கனவே 'ஷாமிதாப்' என்ற இந்திப் படத்தில் அமிதாப்பச்சன் தனுசுடன் நடித்துள்ளார். 'விவேகம்' படத்தில் அஜித்குமாருடன் நடித்துக்கொண்டு இருக்கிறார்.

தற்போது திருமணமாகாமல் கர்ப்பமாகும் சர்ச்சை கதையில் அக்சரா ஹாசன் துணிச்சலாக நடித்து இருப்பது பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. கர்ப்பமான நிலையில் மணமேடையில் இருப்பது போன்ற படத்தின் முன்னோட்டமும் வெளியிடப்பட்டது. இதைப் பார்த்த 'விசுவ இந்து பரிஷத்' அமைப்பினர் படத்துக்கு எதிராகப் போராட்டங்களில் குதித்துள்ளனர். மும்பை அந்தேரியில் உள்ள படத் தயாரிப்பாளர் அலுவலகத்தில் திரண்டு இந்திய கலாசாரத்துக்கு எதிராகப் படம் எடுத்திருப்பதாகக் கண்டித்து கோசங்கள் எழுப்பினர். சர்ச்சைக் காட்சிகளைப் படத்தில் நீக்க வேண்டும் என்றும் அவர்கள் வற்புறுத்தினார்கள்.



# சுடோக்கு எண் விளையாட்டு

நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 2 | 1 | 3 | 6 | 7 | 5 | 4 | 8 | 9 |
| 7 | 9 | 4 | 1 | 8 | 2 | 3 | 6 | 5 |
| 5 | 8 | 6 | 3 | 9 | 4 | 1 | 2 | 7 |
| 1 | 3 | 2 | 7 | 6 | 9 | 5 | 4 | 8 |
| 6 | 7 | 5 | 8 | 4 | 1 | 9 | 3 | 2 |
| 8 | 4 | 9 | 2 | 5 | 3 | 6 | 7 | 1 |
| 3 | 6 | 1 | 9 | 2 | 8 | 7 | 5 | 4 |
| 4 | 2 | 7 | 5 | 1 | 6 | 8 | 9 | 3 |
| 9 | 5 | 8 | 4 | 3 | 7 | 2 | 1 | 6 |

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 4 | | | 8 | | 9 | 5 | | |
| | | | | 5 | | 6 | | 2 |
| | | 8 | | | 2 | | | |
| | | | | | 4 | | 3 | 7 |
| | | 7 | | | | 4 | | |
| 6 | 8 | | 9 | | | | | |
| | | | 5 | | | 7 | | |
| 1 | | 9 | | 4 | | | | |
| | | 2 | 3 | | 1 | | | 4 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்கு படுத்தல் தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண் களை ஒழுங்கு படுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்ப வற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உப சதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும், நிரலிலும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ் வாறு நிரப்பப்படு கையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ் வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப் படாமல் வர வேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும். தர்க்க ரீதியில் ஏனைய வற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986இல் ஜப்பானிய நிறுவனமான நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாகப் பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வழித்துத் துடைத்தது இளவாலை ஹென்றிஸ்

யாழ்ப்பாணம், ஏப். 12
வலிகாமம் கல்விவலய பாடசாலைகளுக்கு இடையிலான கால்பந்தாட்டத் தொடரில் 16 வயது, 18 வயது, 20 வயது ஆகிய பிரிவுகளில் கிண்ணம் வென்றது இளவாலை சென். ஹென்றிஸ்.

**16 வயதுப்பிரிவு**
மகாஜனக் கல்லூரி மைதானத்தில் அண்மையில் இந்த இறுதியாட்டங்கள் இடம்பெற்றன. 16வயதுப் பிரிவு அணிகளுக்கு இடையிலான இறுதியாட்டத்தில் ஹன்றிஸை எதிர்த்து மாதகல் சென். ஜோசப் கல்லூரி அணி மோதியது. 3:1என்ற கோல் கணக்கில் சென். ஹென்றிஸ் வெற்றிபெற்றது.

**18 வயதுப்பிரிவு**
18 வயதுப்பிரிவு அணிகளுக்கு இடையிலான இறுதியாட்டத்தில் இளவாலை சென். ஹென்றிஸ் கல்லூரி அணியை எதிர்த்து மகாஜனக் கல்லூரி அணி மோதியது. 2:1 என்ற கோல் கணக்கில் ஹென்றிஸ் வெற்றிபெற்றது.

**20 வயதுப்பிரிவு**
20 வயதுப்பிரிவு அணிகளுக்கு இடையிலான இறுதியாட்டத்தில் ஹென்றிஸை எதிர்த்து மகாஜனக் கல்லூரி அணி மோதியது. 2:0 என்ற கோல் கணக்கில் சென். ஹென்றிஸ் வெற்றி பெற்றது. (ம-23)



# யாழ்ப்பாணம் சம்பியனானது

யாழ்ப்பாணம், ஏப். 12
வடமாகாண விளையாட்டுத் திணைக்களத்தால் நடத்தப்பட்ட மாவட்ட அணிகளுக்கு இடையிலான ஹொக்கித் தொடரில் ஆண்கள் பிரிவில் யாழ்ப்பாணம் மாவட்ட அணி கிண்ணம் வென்றது.
தெல்லிப்பழை யூனியன் கல்லூரி மைதானத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற இறுதியாட்டத்தில் யாழ்ப்பாணம் மாவட்ட அணியை எதிர்த்து மன்னார் மாவட்ட அணி மோதியது.
முதல் பாதியில் எந்தவொரு அணியாலும் தனித்து ஆதிக்கம் செலுத்த இயலவில்லை. இதனால் கோல் கணக்கு இல்லாமல் முடிவுக்கு வந்தது முதல் பாதி.
இரண்டாம் பாதியில் யாழ்ப்பாணம் மாவட்ட அணியின் ஆதிக்கம் சிறிது மேலோங்கியது. இரண்டாம் பாதியின் நான்காவது நிமிடத்தில் அனுசியன் யாழ்ப்பாண அணியின் முதலாவது கோலைப் பதிவு செய்தார். அடுத்த மூன்று நிமிடத்தில் சஞ்சீவன் கோலொன்னைப் பதிவு செய்ய 2:0 என்று ஆதிக்கம் செலுத்தியது யாழ்ப்பாணம் மாவட்ட அணி.
இரண்டாம் பாதியின் 11 ஆவது நிமிடத்தில் மன்னாரின் சார்பாக முதல் கோல் பதிவானது. அதன்பின்னர் யாழ்ப்பாண மாவட்ட வீரர்களான அனுசியன், சுகிர்தன் கோல்களைப் பதிவுசெய்ய முடிவில் 4:1 என்ற கோல் கணக்கில் யாழ்ப்பாணம் மாவட்ட அணி வெற்றிபெற்றது. (ம-422-108-23)

# இன்றைய மோதல்கள்

யாழ்ப்பாணம், ஏப். 11

**வலிகாமம் கால்பந்து**
வலிகாமம் கால்பந்தாட்ட லீக்கில் அங்கம் வகிக்கும் கழகங்களுக்கு இடையில் நவரட்ணராஜா ஞாபகார்த்த கிண்ணத்துக்காக நடத்தப்பட்டு வரும் கால்பந்தாட்டத் தொடரின் அரையிறுதி ஆட்டங்கள் இளவாலை சென். ஹென்றிஸ் கல்லூரி மைதானத்தில் இன்று இடம் பெறவுள்ளன.
பிற்பகல் 3.45மணிக்கு இடம்பெறும் முதலாவது அரையிறுதி ஆட்டத்தில் நியூஸ்ரார் அணியை எதிர்த்து அராலி அண்ணா அணி மோதவுள்ளது. தொடர்ந்து இடம்பெறவுள்ள இரண்டாவது அரையிறுதி ஆட்டத்தில் சென். லூட்ஸ் அணியை எதிர்த்து தெல்லிப்பழை நாமகள் அணி மோதவுள்ளது.

**வளர்மதியின் கரப்பந்தாட்டம்**
கரவெட்டி வளர்மதி விளையாட்டுக் கழகம் சித்திரைப் புத்தாண்டைமுன்னிட்டு யாழ்ப்பாணம் மாவட்டரீதியாக நடத்தி வரும் கரப்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் குறித்த வி.கழக மைதானத்தில் இன்று முதல் ஆரம்பமாகின்றன. இன்று இரவு 7மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் அச்சுவேலி யுத் அணியை எதிர்த்து நவஜீவன்ஸ் அணி மோதவுள்ளது. இரவு 8 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் அச்சுவேலி ஸ்ரார் அணியை எதிர்த்து புத்தூர்வளர்மதிஅணி மோதவுள்ளது. இரவு 9 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் ஆவரங்கால் மத்திய விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து கரவெட்டி வளர்மதி அணி மோதவுள்ளது. (ம-422-23-108)



# சென். ஜோன்ஸை வென்றது மத்தி.

யாழ்ப்பாணம், ஏப். 12
பிரிட்டன் கிரிக்கெட் சம்மேளனத்தின் அனுசரணையில் யாழ்ப்பாணம் மாவட்ட பாடசாலைகள் சங்கம் நடத்திய 13 வயதுக்குட்பட்ட ஆண்கள் அணிகளுக்கு இடையிலான துடுப்பாட்டத் தொடரில் யாழ்ப்பாணம் மாத்திய கல்லூரி அணி கிண்ணம் வென்றது.
யாழ்ப்பாணம் சென். பற்றிக்ஸ் கல்லூரி மைதானத்தில் அண்மையில் இந்த இறுதியாட்டம் இடம்பெற்றது. யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி அணியை எதிர்த்து யாழ்ப்பாணம் சென். ஜோன்ஸ் கல்லூரி அணி மோதியது.
முதலில் துடுப்பெடுத்தாடிய சென். ஜோன்ஸ் கல்லூரி அணி 32.2 பந்துப் பரிமாற்றங்களில் சகல இலக்குகளையும் இழந்து 73 ஓட்டங்களைப் பெற்றது. அதிகபட்சமாக அபிசேக் 24 ஓட்டங்களையும், பிரசீத் 17 ஓட்டங்களையும் பெற்றனர். பந்துவீச்சில் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி அணியின் சார்பில் சஞ்சஜன் 4 இலக்குகளையும், நிகேஸ் 3 இலக்குகளையும், கவிதர்சன் 2 இலக்குகளையும் கைப்பற்றினர்.
பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி அணி 14.2 பந்துப் பரிமாற்றங்களில் இரு இலக்குகளை மாத்திரம் இழந்து 75 ஓட்டங்களைப் பெற்று 9 இலக்குகளால் வெற்றிபெற்று சம்பியன் கிண்ணத்தைச் சுவீகரித்தது.
அதிகபட்சமாக சாரங்கன் 28 ஓட்டங்களையும், சன்சஜன் ஆட்டமிழக்காமல் 21 ஓட்டங்களையும் பெற்றனர். பந்துவீச்சில் சென். ஜோன்ஸ் கல்லூரி அணி சார்பில் லக்சன் 2 இலக்குகளைக் கைப்பற்றினார். (ம-422)

# மாகாணமட்ட ஹொக்கித் தொடர்; யாழ். மாவட்டம் வாகை சூடியது

யாழ்ப்பாணம், ஏப். 12
வடமாகாண விளையாட்டுத் திணைக்களத்தால் நடத்தப்பட்ட மாவட்ட அணிகளுக்கு இடையிலான ஹொக்கித் தொடரில் பெண்கள் பிரிவில் யாழ்ப்பாணம் மாவட்ட அணி மகுடம் சூடியது.
தெல்லிப்பழை யூனியன் கல்லூரி மைதானத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற இறுதியாட்டத்தில் யாழ்ப்பாணம் மாவட்ட அணியை எதிர்த்து மன்னார் மாவட்ட அணி மோதியது.
யாழ்ப்பாண அணியின் வீராங்கனைகளான கீர்த்தனா 5ஆவது நிமிடத்திலும், ஏஞ்சலின் 18ஆவது நிமிடத்திலும் கோல்களைப் பதிவு செய்ய முதல் பாதியின் முடிவில் 2:0 என்று ஆதிக்கம் செலுத்தியது யாழ்ப்பாணம்.
இரண்டாம் பாதியின் 10ஆவது நிமிடத்தில் நிரோசிகாவும், அபிராமி 20ஆவது நிமிடத்திலும் அடுத்தடுத்து கோல்களைப் பதிவுசெய்தனர். முடிவில் யாழ்ப்பாணம் மாவட்ட அணி 4:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று கிண்ணம் வென்றது. (ம-422-108)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விஜய்யின் விலகல் பின்னடைவு

## அம்லா தெரிவிப்பு



நடப்பு வருட ஐ.பி.எல். தொடரில் இருந்து முரளி விஜய் விலகியமை பஞ்சாப் அணிக்கு பெரும் பின்னடைவு என்று அந்த அணியின் ஆரம்ப வீரர் அம்லா தெரிவித்தார். முரளி விஜய் ரி-20 ஆட்டங்களுக்கு மிகவும் வேண்டப்பட்டவர். கடந்த காலங்களில் அவரின் ஆட்டம் இதற்குத்தக்க சான்று. இந்தத் தொடரில் அவர் இல்லாதமை பெரும் பின்னடைவு. எனினும் அவரது இடத்தை ஓர் இளம் வீரர் பயன்படுத்திக் கொள்ள வாய்ப்புக் கிடைத்துள்ளது. முரளி விஜய்யின் விலகலை மக்ஸ்வெல் சரிசெய்து விடுகிறார். அவர் தற்போது சிறந்த திறனில் உள்ளார் என அம்லா மேலும் தெரிவித்தார். (ம)

# ரோகித்துக்கு எச்சரிக்கை

கொல்கத்தா அணிக்கு எதிரான லீக் ஆட்டத்தில் நடுவர் அளித்த தீர்ப்பால் அதிருப்தி அடைந்த ரோகித் சர்மா நடுவரை நோக்கி திட்டிய விவகாரத்தில் அவருக்கு எச்சரிக்கை விடுக்கப்பட்டது.

எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளதே தவிர ரோகித்துக்கு தண்டமெதுவும் விதிக்கப்படவில்லை. மைதான நடுவரின் அபிப்பிராயத்தைப் பொறுத்தே அடுத்த கட்ட முடிவெடுக்கப்படும். (ம)

# யங்கம்பன்ஸ் சம்பியனானது

கரணவாய், ஏப். 11

யங்கம்பன்ஸ் விளையாட்டுக் கழகம் அமரர் வைரமுத்து சதாசிவம் ஞாபகார்த்தமாக நடத்திய கால்பந்தாட்டத் தொடரில் அந்த அணியே கிண்ணம் வென்றது. யங்கம்பன்ஸின் மைதானத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற இறுதியாட்டத்தில் உடுப்பிட்டி நவஜீவன்ஸ் அணியை எதிர்த்து கம்பர்மலை யங்கம்பன்ஸ் விளையாட்டுக் கழகம் மோதியது. முதல்பாதியில் நவஜீவன்ஸ் அணியின் சங்கர் முதல் கோலைப் பதிவுசெய்தார். யங்கம்பன்ஸ் அணியின் பிரகாஸ் அடுத்தடுத்து இரு கோல்கள் பதிவுசெய்து சரிவைச் சமன்செய்தார். முடிவில் 2:1 என்ற கோல் கணக்கில் யங்கம்பன்ஸ் அணி வெற்றிபெற்றது. (ம-108)




# தோல்விக்கு சேன் வற்சன் பொறுப்பேற்பு



ஐ.பி.எல். தொடரில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஆட்டத்தில் பஞ்சாப்பிடம் தோல்வியடைந்தது பெங்களூர். இந்தத் தோல்விக்கு வற்சன் பொறுப்பேற்றார். ஆட்டத்தின் பின்னர் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பிலேயே வற்சன் இவ்வாறு தெரிவித்தார்,

"எங்கள் அணியின் தொடக்கம் சிறப்பாக அமையவில்லை. நான் முதல் பந்துப்பரிமாற்றத்திலேயே ஆட்டமிழந்து விட்டேன். இது என்னுடைய தவறே. இன்னும் சில பந்துப்பரிமாற்றங்கள் களத்தில் நின்றிருக்க வேண்டும். பந்துவீச்சிலும் சிறப்பாகச் செயற்படவில்லை. நான் எதிர்பார்த்ததை விட பனி அதிகமான தாக்கம் செலுத்தியது. இது எமக்குப் பாதகமாக அமைந்தது" என வற்சன் மேலும் தெரிவித்தார். பெங்களூர் நாளைமறுதினம் தனது அடுத்த ஆட்டத்தில் மும்பையை சந்திக்கிறது. (ம)

# மும்பை அணியுடன் இணைந்தார் சனத்

மும்பை அணியின் பாராட்டு விழாவொன்றில் அந்த அணியின் முன்னாள் வீரர் சனத் ஜெயசூரிய கலந்துகொண்டார்.

நடப்பு வருட ஐ.பி.எல். தொடர் 10 ஆவது தொடராக அமைந்துள்ளது. இதுவரை காலமும் மும்பை அணிக்காக விளையாடிய வீரர்களையும் தற்போது அணியில் உள்ள வீரர்களையும் அழைத்து பாராட்டு விழாவொன்று நேற்றுமுன்தினம் நடத்தப்பட்டது. ஐ.பி.எல். தொடரின் ஆரம்ப காலகட்டத்தில் மும்பை அணிக்காக சனத் விளையாடினார். இதனால் அவரும் இந்தப் பாராட்டு விழாவில் கலந்துகொண்டார். (ம)

# நாமகள், லூட்ஸ், அண்ணா அரையிறுதிக்குத் தகுதி

யாழ்ப்பாணம், ஏப். 11

வலிகாமம் கால்பந்தாட்ட லீக்கில் அங்கம் வகிக்கும் கழகங்களுக்கு இடையில் நவரட்ணராஜா ஞாபகார்த்த கிண்ணத்துக்காக நடத்தப்பட்டுவரும் கால்பந்தாட்டத் தொடரில் தெல்லிப்பளை நாமகள் வி.கழக அணி, சென். லூட்ஸ் வி.கழக அணி, அராலி அண்ணா விளையாட்டுக் கழக அணி ஆகியன அரையிறுதிக்கத் தகுதிபெற்றன. இளவாலை சென். ஹென்றிஸ் கல்லூரி மைதானத்தில் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை நடைபெற்ற முதலாவது காலிறுதியில் நாமகள் அணியை எதிர்த்து அராலி பாரதி அணி மோதியது. 1:0 என்ற கோல் கணக்கில் நாமகள் அணி வெற்றிபெற்றது.

சென். லூட்ஸ் விளையாட்டுக்கழக அணிக்கும் பண்டத்தரிப்பு பிறைட்ஸ்ரார் விளையாட்டுக் கழக அணிக்கும் இடையில் நடந்த காலிறுதி ஆட்டத்தில் சென். லூட்ஸ் விளையாட்டுக்கழக அணி 2:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

அராலி அண்ணா விளையாட்டுக் கழக அணிக்கும் இளவாலை யங்ஹென்றிஸ் விளையாட்டுக் கழக அணிக்கும் இடையிலான ஆட்டத்தில் இரண்டு அணியினரும் நிர்ணயிக்கப்பட்ட நிமிடங்களின் நிறைவில் கோலெதனையும் பதிவுசெய்யாததை அடுத்து ஆட்டம் சமநிலையில் முடிந்தது. சமநிலைத் தவிர்ப்பு உதைகளில் வெற்றியைத் தீர்மானிக்க வேண்டிய நிலை ஏற்பட முடிவில் 8:7 என்ற கோல் கணக்கில் அராலி அண்ணா வி.கழக அணி வெற்றிபெற்றது.

இந்தத் தொடரில் நியூஸ்ரார் அணி ஏற்கனவே அரையிறுதிக்குத் தகுதிபெற்றமை குறிப்பிடத்தக்கது. (ம-23)

# சென். தோமஸ் 'ஏ' கிண்ணம் வென்றது

யாழ்ப்பாணம், ஏப். 12

திக்கம் சனசமூக நிலையத்தின் வைர விழாவை முன்னிட்டு வடமாகாண ரீதியில் நடத்தப்பட்ட கபடியில் ஆண்கள் பிரிவில் சென். தோமஸ் ஏ அணி கிண்ணம் வென்றது.

திக்கம் இளைஞர் வி.கழக மைதானத்தில் அண்மையில் நடைபெற்ற இறுதியாட்டத்தில் பருத்தித்துறை சென். தோமஸ் ஏ அணியை எதிர்த்து பருத்தித்துறை சென். தோமஸ் பி அணி மோதியது. இதில் பருத்தித்துறை சென். தோமஸ் ஏ அணி 40:23 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றிபெற்று சம்பியன் கிண்ணத்தைச் சுவீகரித்தது.

நிகழ்வுக்கு தலைமை விருந்தினராக யாழ்ப்பாணம் மாவட்ட விளையாட்டு அதிகாரி கே.விஜிதரன் கலந்துகொண்டார். (ம-422-108-23)




# சுண்டுக்குழி மகளிர் அணி எறிபந்தாட்டத்தில் சாதித்தது



யாழ்ப்பாணம், ஏப். 12

யாழ்ப்பாணம் கல்வி வலய பாடசாலைகளுக்கு இடையிலான எறிபந்தாட்டத்தில் 20 வயது பெண்கள் பிரிவில் சுண்டுக்குழி மகளிர் கல்லூரி அணி சம்பியன் கிண்ணத்தைச் சுவீகரித்தது.

யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரி மைதானத்தில் நேற்று நடைபெற்ற இறுதியாட்டத்தில் சுண்டுக்குழி மகளிர் கல்லூரி அணியை எதிர்த்து யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரி அணி மோதியது. இதில் சுண்டுக்குழி மகளிர் கல்லூரி அணி 25:18, 25:19 என்ற புள்ளிகள் அடிப்படையில் முதலிரு செற்களையும் கைப்பற்றி 2:0 என்ற நேர் செற் கணக்கில் வெற்றிபெற்று சம்பியன் கிண்ணத்தைச் சுவீகரித்தது. (ம-422)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புத்தாண்டு விலைக்கழிவு

பனர் பிரதியாக்கம் - 30.00
**(NO-1 QUALITY)**
கதவுகளிற்கான கொத்து வேலை - 10000.00
**(DOOR ENGRAVING)**
**மூர்த்தி டிஜிற்றல்**
**62/20, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.**
**077 2247 428**



## மாபெரும் சைக்கிள் ஓட்டம்

**யாழ் கிறீன் கிங்ஸ் சனசமூக நிலைய இளைஞர் விழா**

தன்னுடைய 52 ஆவது ஆண்டு நிறைவு விழாவை முன்னிட்டு மாபெரும் சைக்கிள் ஓட்டப் போட்டி நடத்த உள்ளனர்.

இடம் : புனித சாள்ஸ் மகாவித்தியாலயம் (பஸ்தியன் வீதி A9)
காலம் : 17.04.2017 திங்கட்கிழமை
நேரம் : காலை 6.00 மணி

**077 544 2468/ 077 426 6915**


## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



| அன்னை மடியில் | ஆண்டவன் மடியில் |
|---|---|
| 23 . 06 . 1982 | 23 . 03 . 2016 |

அமரர் **சிவலோகநாதன் ஸ்ரீசங்கர்**
(தனுசன் நகைமாடம் .கச்சாய் வீதி.சாவகச்சேரி.)

திதி: பிரதமை - 12.04.2017

அன்பு .பாசம்.பண்பு.பொறுமை.இரக்கம்
இவைகள் என்ன என்பதை குறுகிய காலத்தில்
நிரூபித்துகாட்டி விட்டு அவசரமாகச் சென்று விட்டீரே !
உம்மை மறக்க முடியாமல் தவிக்கின்றோம்
ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.

இத்தியடி பிள்ளையார்
கோயில் வீதி, சங்கத்தானை,
சாவகச்சேரி.

குடும்பத்தினர்,உறவுகள்,நண்பர்கள்

## கண்ணீர் அஞ்சலி

யா / சரசாலை ஸ்ரீகணேசா வித்தியாலய அதிபர் ம.தர்மசீலன் அவர்களின் பாசமிகு தாயார்
**திருமதி சற்குணேஸ்வரி மருதையினார்**
அவர்கள் இறைபதமடைந்ததையொட்டி அவரின் பிரிவினால் துயருறும் குடும்பத் தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவரின் ஆத்மா சாந்தி யடையவும் இறைவனைப்பிரார்த்திக்கின்றோம்.
**தென்மராட்சி பாடசாலை அதிபர்கள் சங்கம்.**

ஓம் விராட் விஸ்வப் பிரமனே நமக

## கனகரத்தினம் சிவம்

**(யாழ் மாநகரசபை,ஓய்வுபெற்ற வருமான வரி பரிசோதகர்)**



அரசடி வீதி, திருநெல்வேலியைப் பிறப்பிடமாகவும் போக்காலை வீதி, உடுப்பிட்டியை வசிப்பிடமாகவும் கொண்ட கனகரத்தினம் சிவம் 09.04.2017 ஞாயிற்றுக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கனகரத்தினம் தெய்வானைப்பிள்ளை தம்பதியினரின் சிரேஷ்ட புத்திரனும் காலஞ்சென்ற சிவக்கொழுந்து இராசமணி தம்பதியரின் பாசமிகு மருமகனும் சந்திரா தேவியின் அன்புக் கணவரும் துளசிராம், பிரியராம் ,சத்தியராம் , கோகுலராம், திவ்யராம் ஆகியோரின் ஆன்புத் தகப்பனாரும் தர்மபாலன், தவபாலன் ஆகியோரின் அன்புச்சகோதரனும் மனோகரன், மகேந்திரன், சிவபாலன், சிவமணி, புவனேந்திரன் , வசந்தாதேவி,ரூபதாஆகியோரின்அன்புமைத்துனரும்வித்தியாதரன் , நிவேதிகா, கோசல்யன், பிரவீன் ஆகியோரின்பெரியப்பாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 13.04.2017 வியாழக்கிழமை அவரது இல்லத்தில் மு.ப 10.00 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக வல்லை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்லை உற்றார்,உறவினர்,நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**போக்காலை வீதி,உடுப்பிட்டி.**

**தகவல்: குடும்பத்தினர்.**


இம்முறை தனயோகம் உங்களுடையதா?

| திகதி | வெற்றிவாரம் | வர்ணம் |
|---|---|---|
| 11.04.2017 | 2120 | நீலம் |

இடபம் 7 20 36 49
செவ்வாய்க்கிழமை வெற்றிப்பொதி ரூ 26, 71, 004/=
2017.04.18 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை நீல நிற டிக்கட்டுக்களாகும்.
வெற்றி பெற்ற சீட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.
தொ.பே: 011-4062002 / 0114062062 Web; www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>LW என டைப் செய்து
1919 இற்கு அனுப்பவும்.

உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு வாரம்: 556 வர்ணம்: மஞ்சள்
சீட்டிழுப்பு திகதி: 11.04.2017
வெற்றி இலக்கங்கள் 01 41 52 61 X
அடுத்த செவ்வாய்க்கிழமைக்கான ஜக்பொட் ரூ. 25,622,911/-
தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk

சீட்டிழுப்பு வாரம்: 124
வர்ணம் : இளஞ்சிவப்பு
சீட்டிழுப்பு திகதி: 11.04.2017
அடுத்த செவ்வாய்க்கிழமைக்கான ஜக்பொட் ரூ. 82,971,948/-
கோடிபதி ஷனிதா
ஆங்கில எழுத்து மற்றும் இலக்கங்கள் C 11 27 50 78
தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk


## மரண அறிவித்தல்

## திருமதி சறோஜினி பாலகிருஷ்ணன்



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 11.04.1957 | 24.03.2017 |

யாழ்.கலட்டி சீனியர் லேனை பிறப்பிடமாகவும், வதிவிடமாகவும் கொண்ட சறோஜினி (தேவி) பாலகிருஷ்ணன் கடந்த 24.03.2017 வெள்ளிக்கிழமை லண்டனில் காலமானார்.


அன்னார் காலஞ்சென்ற நடராஜா - அழகம்மா தம்பதிகளின் சிரேஷ்ட புதல்வியும், காலஞ்சென்ற நாகேந்திரம் - செல்லம்மா தம்பதிகளின் அன்பு மருமகளும், பாலகிருஷ்ணன் (பாலா மாஸ்ரர் - ஓய்வுநிலை உப அதிபர், மானிப்பாய் மெமோறியல் ஆங்கில பாடசாலை, இயக்குநர் "BITSMANS" Institute மானிப்பாய்) அவர்களின் ஆருயிர் துணைவியும், டினோஜன் (லண்டன் - 2004 உயர்தரம், யாழ்.இந்துக் கல்லூரி), நிரோஜன் (2009 உயர்தரம் - யாழ்.கொக்குவில் இந்துக் கல்லூரி) ஆகியோரின் பாசமிகு தாயாரும், அனுஷ்பிரியாவின் அன்பு மாமியாரும், ரித்வியின் அன்புப் பேர்த்தியும், குலசிங்கம் (ஓய்வுநிலை தபால் அதிபர்), காலஞ்சென்ற தனபாலசிங்கம் மற்றும் நித்தியானந்தம் (கனடா), மகாலிங்கம் (நோர்வே), சாந்தாதேவி (சாந்தி) ஆகியோரின் அன்புச்சகோதரியும், ஜெயகௌரி, மனோரஞ்சிதம் (கனடா), தயா(நோர்வே), சுந்தரலிங்கம் (ஓய்வுநிலை கிராம சேவையாளர்), இராஜலட்சுமி, காலஞ்சென்ற தங்கரத்தினம் மற்றும் ஜீவரஞ்சினி (லண்டன்), பாலச்சந்திரன் (கனடா), இராஜகுமாரன் (ஆசிரியர் - யா/ஸ்கந்தவரோதயா கல்லூரி) ஆகியோரின் அன்பு மைத்துனியும், காலஞ்சென்றவர்களான கனகரட்ணராஜா, சற்குணராஜா மற்றும் சக்திக்குகன் (லண்டன்), கலைவாணி (கனடா), அனுஷா ஆகியோரின் உடன்பிறவா சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (12.04.2017) புதன்கிழமை முற்பகல் 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைக்காக பூதவுடல் கோம்பயன்மணல் இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**21/2, சீனியர் லேன்,**
**கலட்டி, யாழ்ப்பாணம்.**

**தகவல்: குடும்பத்தினர்.**

**0212228764**



# வென்றது டெல்லி

ஐ.பி.எல். தொடரில் நேற்று நடைபெற்ற ஆட்டத்தில் புனேயை மிகமிக இலகுவாக வீழ்த்தியது டெல்லி அணி.

நாணயச் சுழற்சியில் வென்ற புனே அணி முதலில் களத்தடுப்பைத் தீர்மானித்தது. டெல்லியின் ஆரம்பம் படுமோசமாக அமைந்த போதிலும் சாம்சன் அதிரடியாட்டத்தை வெளிப்படுத்தினார். அவர் சதம் கடந்தும் அசத்திக் காட்டினார். 9 பந்துகளில் 38 ஓட்டங்களைக் குவித்து மிரட்டினார் மொறிஸ். 205 ஓட்டங்களைக் குவித்தது டெல்லி.

பதிலுக்குக் களமிறங்கிய புனேக்கு ஆரம்ப வீரர் அகர்வால் குவித்த 20 ஓட்டங்களே அதிகபட்சம். வேறெவரும் பதின்மத்தைத் தாண்டவில்லை. டோனியால் முடிந்தது 11 ஓட்டங்கள். 108 ஓட்டங்களில் சுருண்டு 97 ஓட்டங்களால் தோல்வியடைந்தது புனே. (ம)


## புத்தாண்டு சிறப்புத் தள்ளுபடி

**சிறுவர்களுக்கான ஆடைகள், விளையாட்டுப் பொருள்கள், கர்ப்பிணிகளுக்கான அனைத்துப் பொருள்களும் 50% அசத்தலான விலைக்கழிவுகளுடன்**

**ஏப்ரல் 12,13,14 திகதிகளில் மட்டுமே**

**செல்லமே செல்லம்**
**(பொலிஸ் நிலையம் முன்பாக)**
**58, ஸ்ரேசன் றோட், சுன்னாகம்.**


## கண்ணீர் அஞ்சலி



இலங்கை செஞ்சிலுவை சங்க யாழ். கிளையின் பொருளாளரும் இலங்கை செஞ்சிலுவை சங்க நெடுந்தீவு பிரிவின் தலைவருமாகிய
**எ.அருந்தவசீலனின்**
அன்புத் தாயார்
**அன்னாள் அன்னபூரணி எட்வேட்**
(ஓய்வு பெற்ற மருத்துவ மாது )
08.04.2017 அமரத்துவம் அடைந்துள்ளார்.
அன்னாருக்கு எமது கண்ணீர் அஞ்சலிகள்.
**தலைவர், நிர்வாக அங்கத்தவர்கள், முகாமைத்துவம், இலங்கை செஞ்சிலுவை சங்கம் யாழ்கிளை.**


**காணி தேவை**
யாழ் நகரப்பகுதியை அண்மித்து 1 -2 பரப்பு காணிதேவை.
**தொடர்பு.077 255 6561**

**காணி விற்பனை**
கல்வியங்காடு விளையாட்டரங்க வீதியில் நிலப்பரப்பு 02 குழி 12.96 விஸ்தீரணமுள்ள காணி விற்பனைக்கு உண்டு.
**தொடர்பு : 077 844 8535**

**வீடு விற்பனைக்கு**
வட்டு தெற்கு, வட்டுக்கோட்டை கார்த்திகேய வித்தியாலய வீதியில் 04 பரப்புக்காணியுடன் கூடிய வீடு விற்பனைக்குண்டு.
**075 401 9628, 0045 2167 4882**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் [illegible] வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 12.04.2017 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.